# சுபாஷ் சந்திர போஸ்



... REGISTRAR OF BOOKS
24 ... 1958
MADRAS

72.
...56

செப்பனிடுபவர் பெயர்

செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட நாள் July 93

செப்பனிட்டு முடித்த நாள் August 93

சரிபார்க்கும்
மு. பா. நி.
கையொப்பம்.

உதவியாளர்
கையொப்பம்.

# சுபாஷ் சந்திர போஸ்

எஸ். எஸ். மாரிசாமி

புக்ஸ் (இந்தியா) லிமிடெட்
135, பவளக்காரத் தெரு, சென்னை-1.

உரிமை பதிப்புற்றது
முதற் பதிப்பு: ஆகஸ்ட், 1955

V2:51Y7N47
N55
TAMIL NADU ARCHIVES
110523
MADRAS

விலை அணா 14

சாந்தி பிரஸ், சென்னை - 1.

# 1. இந்தியப் புரட்சி

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக் காலம். இந்திய வான மண்டலத்தில் கருமேகங்கள் சஞ்சரித்தன. எந்த வினாடியிலும் மழை கொட்டும். கொட்டும் மழையோ கல் மழையாக இருக்கும். ஊழிக்காலமோ என்று ஐயுறும் படியாக இடி முழக்கங்கள் கேட்டன. வானத்தில் வெட்டும் மின்னல் கண்ணையே பறித்தது. ஊளையிடும் பேய்க் காற்று மயிர்க்கூச்செறியச் செய்தது.

இமயத்திலிருந்து குமரிவரை இதுவே நிலை. வானோட்டத்தின் போக்கு கணத்துக்குக் கணம் வரப்போகும் பயங்கரத்தை வலியுறுத்தியது. இந்தச் சூழ்நிலையை பிரிட்டிஷாரும் உணர்ந்திருந்தார்கள். திடீரென வான்முகடு கிழிந்துவிடுமென எதிர்பார்த்து திட்டமும் போட்டார்கள். லண்டன் சர்க்காருக்கு தாக்கீதும் கொடுத்தனர், தாக்கீது போய்ச் சேருவதற்கு முன்னால்.........!

டில்லி வட்டத்திலும் முரதாபாத்திலும் மழை கொட்ட துவங்கிவிட்டது. வெள்ளையரை இந்தியச் சிப்பாய்கள் தாக்கத் துவக்கினர். பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகள் கொலையுண்டனர். ராணுவ தளவாடங்கள் சூரையாடப்பட்டன. "வெள்ளையர் காலம் முடிந்தது, ஆங்கில ஆட்சி ஒழிக" என மக்களின் இடி முழக்கம் கேட்டது. குவாலியர், கோட்டா, போபால் முதலிய இடங்களில் இதே எதிரொலி. எல்லைப்புறம், மத்திய மாகாணம், பீகார் ஆகிய இடங்களிலெல்லாம் ரணகளறி. ரோகில்கந்திலும், அயோத்தியிலும் பிரிட்டிஷ் அதிகாரிகளை இருந்த இடம் தெரியாமல் செய்துவிட்டனர் புரட்சித் துருப்புக்கள்.

1857 ஜூன் மாதத்தில் தான் இந்த அமளி. டிசம்பருக்குள் ஆக்ரா, மிராஜ், பாட்னா, ரோகில்கந்த், பரீலி, ஷாஜஹான்பூர், முரதாபாத், பர்தூன் முதலிய இடங்களிலெல்லாம் பிரிட்டிஷாரின் ஆட்சி மறைந்துவிட்டது. யமுனா

நதியின் மேற்குக் கரைப் பகுதிகளில் மட்டும் சுதேச மன்னர்கள் சிலர் பிரிட்டிஷாருக்கு விசுவாசமாக இருப்பதாக அறிவித்தனர். ஆனால் கங்கையின் கிழக்குக்கரை மக்களோ பிரிட்டிஷ் ஆட்சியை நிலைகலங்கச் செய்துவிட்டனர்.

கல்கத்தாவிலிருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கும், பெரும்பகுதி இந்தியாவிற்கும் தொடர்பு அற்றுவிட்டது. டில்லி, ஆக்ரா ஆகிய இடங்களில் என்ன நடக்கிறது—அங்கிருந்த பிரிட்டிஷ் துருப்புகளின் கதி என்ன ஆயிற்று—தளகர்த்தர்களும், கவர்னர்களும் என்ன ஆனார்கள் என்பதே தலைமை சர்க்காரின் கவலையாக இருந்தது. செய்திகள் வருவதே கடினமாக இருந்தது.

இச்சமயத்தில் கலகக்காரர்களுக்கு ஒரு பெரிய வெற்றி கிடைத்தது. டில்லியைக் கைப்பற்றி விட்டார்கள். டில்லியைக் கைப்பற்றியதோடு, தங்களுக்கு ஒரு தலைவனையும் தேடிப் பிடித்துவிட்டார்கள். அதுமட்டுமல்ல. ஒரு கொடி, ஒரு லட்சியம் முதலியவைகளையும் பெற்றுவிட்டார்கள். கலகம் என்ற நிலைபோய் புரட்சிகரமான யுத்தமே ஏற்பட்டுவிட்டது. டில்லி பாசறைகளில் பிரிட்டிஷ் ராணுவம் வைத்திருந்த 9 லட்சம் துப்பாக்கி ரவைகள், 2 ரயில்கள், ஏராளமான பீரங்கிகள், சுமார் 10,000 இரட்டைக்குழாய் துப்பாக்கிகள், 10,000 பீப்பாய் வெடி மருந்து முதலியன புரட்சிக்காரர்கள் கையில் சிக்கின. டில்லியைக் கைப்பற்றிய மொகலாய மன்னர் உடனே கீழ்வரும் செய்தியை இந்து மன்னர்களுக்கு அனுப்பினார்.

“இந்துஸ்தானத்திலிருக்கும் அந்நியரை எந்த முறையையேனும் கையாண்டு விரட்டிவிடவேண்டும் என்பதே எனது குறிக்கோள். இந்துஸ்தானம் முழுவதும் சுதந்திரமாக இருக்கவேண்டும் என்பது என் ஆசை. இந்த ஆசையை நிறைவேற்ற ஒரு தலைவர் முன்வரவேண்டும். அத்தலைவர் இப்புரட்சியின் முழுப் பொறுப்பைத் தாங்குபவராகவும், தேசத்தின் பல்வேறு சக்திகளை ஒருமுகப்படுத்துபவராகவுமிருக்கவேண்டும். இல்லையேல் இந்த மாபெரும் காரியம் வெற்றிகாணாது. இந்தியாவிலிருக்கும் ஆங்கிலேயரை விரட்டியபின் இந்தியாவை என் சுயநலத்துக்காக ஆளவேண்டும் என்னும் ஆசை என்னிடம் துளிகூடக் கிடையாது..........

# ஜெய் ஹிந்த் !

தேசத்தின் தந்தை மகாத்மா காந்தி இந்தியாவுக்கு செய்திருக்கும் சேவை சரித்திரத்தில் தனியிடம் பெற்று விளங்குகிறது. இந்திய தேசிய போராட்ட சரித்திரத்திலேயே மகாத்மாவுக்கு ஒப்போ உவமையோ காண்பதென்பது முடியாத காரியம்.

ஆனால் வங்கத்தின் சிங்கம் நேதாஜி சுபாஷ் சந்திர போஸை சுதந்திரப் போராட்டத்தின் உருவகம் என்றும் திலகம் எனவும் கூறுவது மிகையாகாது. அன்னாரின் தியாகமும் வீரமுமன்றோ இன்று நாமனைவரும் சுதந்திரம் பெற்று வாழ வழிகாட்டியானது. வெளியிலிருந்து படைதிரட்டி போராட்டம் செய்வோம் என்ற பிறகே, நம் சுதந்திரப் போராட்டத்தை இனி சமாளிக்க முடியாது என்ற பிறகே வெள்ளையர் நம் நாட்டைவிட்டு வெளியேறினர். கடைசி மூச்சு இருக்கும் வரை இந்தியத்தாயின் விடுதலைக்காகவே போராடி அமரத்வம் பெற்ற நேதாஜியின் புகழ், இந்தியர் தேச பக்தியை மறவாதிருக்கும்வரை பொலிவுற்று விளங்கும். வீரத்துக்கும், தியாகத்துக்கும் அணிகலனாக விளங்கிய நம் நேதாஜியின் வரலாற்றை உரிமை பெற்ற நம் நாட்டு மாணவ மாணவிகளுக்கென பள்ளிப்பாடப் புத்தகமாக அமைத்து வெளியிட்டிருக்கிறேன்.

நேதாஜியின் வீரத்தையும், தியாகத்தையும் வழி காட்டியாக பின்பற்றி நாம் போராடிப் பெற்ற சுதந்திரத்தையும், கொடியையும், நாட்டையும் விழிப்புடன் பாதுகாக்க மாணவ மாணவிகள் ஊக்கங் கொள்வார்களாக !

ஜெய் ஹிந்த் !

எஸ். எஸ். மாரிசாமி

# பொருளடக்கம்


| எண் | | பக்க |
|---|---|---|
| 1. | இந்தியப் புரட்சி ... | 1 |
| 2. | காங்கிரஸ் தோற்றம் ... | 8 |
| 3. | ரீடிங்குக்குப் படிப்பினை ... | 14 |
| 4. | பிறவியில் வீரர் ... | 20 |
| 5. | காரியதரிசி சுபாஷ் ... | 34 |
| 6. | தீவிரவாதி சுபாஷ் ... | 38 |
| 7. | மேயர் சுபாஷ் ... | 41 |
| 8. | கையில் அறுபட்ட மாலை... ... | 45 |
| 9. | நல்லநேரமும் பொல்லாத செய்தியும் ... | 47 |
| 10. | காந்தி-இர்வின் ஒப்பந்தமும் எதிர்ப்பும் | 50 |
| 11 | அஞ்ஞாத வாசம்! ... | 55 |
| 12. | மகாத்மாமீது வருத்தம் ... | 58 |
| 13. | தாயின் மணிக்கொடி ... | 61 |
| 14. | ராஷ்டிரபதி சுபாஷ் ... | 65 |
| 15. | தகராறு! ... | 68 |
| 16. | திரிபுரி காங்கிரஸ் ... | 71 |
| 17. | ராஷ்டிரபதி ராஜினாமா ... | 75 |
| 18. | ஒழுங்கு நடவடிக்கை ... | 77 |
| 19. | சர்க்காரின் வெட்கம் ... | 80 |
| 20. | ஊமை ஜியாவுதீன் ... | 83 |
| 21. | கீழ்க்கோடி அழைத்தது ... | 86 |
| 22. | சிங்கப்பூரில் சுபாஷ் ... | 89 |
| 23. | நேதாஜியின் வேண்டுகோள் ... | 92 |
| 24. | தலைமைச் சேனாதிபதி ... | 95 |
| 25. | சுதந்திர சர்க்கார் தோற்றம் ... | 98 |
| 26 | போர் முழக்கம் ... | 100 |
| 27. | சந்திர சூரியர் இருக்கும்வரை... ... | 108 |




"எதிரியை விரட்டும் உறுதியுடன் சுதேச மன்னர்களாகிய நீங்கள், வாளை உருவி வெளியேறினால், எனது ஆட்சியை உங்களிடம் ஒப்படைத்துவிட்டு, என் பதவியை விட்டுவிடத் தயார்."

மொகலாய மன்னரின் இந்தப் பிரகடனம் பிறந்ததும் இந்து மன்னர்கள் பலர் இதை ஆதரித்து இணங்கினர். இந்துக்களும், முஸ்லிம்களும் ஒற்றுமையுடன் போராட வேண்டுமென பிரசாரம் செய்தனர். இந்துக்கள் மனம் புண்படக்கூடாது என முஸ்லிம் தளகர்த்தர்கள் பசுக் கொலையையும் நிறுத்தினர்.

நானாசாகிபு மன்னரும் அவருடைய காரியதரிசியான அஜிமுல்லாகானும் துருக்கி சாம்ராச்சியத்தின் உதவியைப் பெற பெரிதும் முயன்றனர். இந்தியாவிலிருக்கும் பிரிட்டிஷாரை விரட்ட வெளியாரின் உதவி கிடைக்கும் என்று எண்ணினார்கள். புரட்சி துவங்குவதற்குள் இந்தியாவின் பல பகுதிகளுக்குச் சென்று இரகசிய மாநாடுகள் நடத்தி வந்தனர். நானாசாகிபின் முயற்சியால் பல குறுநில மன்னர்கள் பிரிட்டிஷாருக்கு விரோதமாகத் திரும்பினர். அஹமத் ஷா, அமர்சிங், தந்தியா தோப், ஜான்ஸி ராணி லக்ஷ்மிபாய் முதலியோர் பிரிட்டிஷ் ஆட்சியை ஒழித்து விடுவதென வெளிக்கிளம்பினர்.

புரட்சிக்காரர்களின் திட்டம், திடீர்திடீரெனத் தாக்குவது, சர்க்கார் கஜானாக்களைக் கொள்ளையடிப்பது, சிறைகளை உடைத்து கைதிகளை விடுவிப்பது, போக்குவரத்துக்களை சீர்குலைப்பது என்பவைகளே. இத் தந்திரங்கள் பிரிட்டிஷாருக்கு பெரும் தோல்வியைக் கொடுத்து, ஏராளமான உயிர் நஷ்டத்தையும் ஏற்படுத்தியது. குவாலியர் கோட்டைக்குள் தந்தியா தோப் நடத்திய போராட்டம் ஒரு வீரப் போராகும். 3,000 மைல் வரை பிரிட்டிஷ் துருப்புக்கள் 9 மாத காலம் விரட்டியும், தந்தியா தோப்பைப் பிடிக்க முடியவில்லை. சிவாஜி பரம்பரையில் வந்த இவரும் மற்றொரு சிவாஜியாகவே விளங்கினார்.

இந்திய வீரத்தாயின் அணிகலனாக விளங்கிய ஜான்ஸி ராணி லக்ஷ்மி பாயும், புரட்சி துவங்கிவிட்டது என்ற

தும் வாளேந்தி போர்க்களம் புகுந்தார்கள். நாற்புறமும் பிரிட்டிஷார் சூழ்ந்து நின்றும், கலங்கா உள்ளத்தோடு போர்புரிந்தார். ஜான்ஸி எதிரிகள் வசம் சிக்கிவிட்டது. இனி அங்கிருந்தால் ஆபத்து என 102 மைல் குதிரைச் சவாரி செய்து, பின்னால் வந்த பிரிட்டிஷாரிடம் பிடிபடாமல் தப்பிச்சென்று, கல்பி என்ற ஊரையடைந்து அங்கிருந்து போராட்டத்தை நடத்தினார். ஜான்ஸிராணியின் வீரம் நிறைந்த இப்போராட்டம் மற்றப் பகுதியிலுள்ள வீரர்களுக்கு ஊக்கமூட்டியது ஜான்ஸிராணி கடைசியில் ஆண் உடை தரித்து போராடிக்கொண்டிருக்கும் தருணத்தில் வீர சுவர்க்கம் அடைந்தார். இவரது பெயர் இந்தியப் பரம்பரையின் புனித உள்ளங்களில் கோயில் கொண்டது.

புரட்சிக்காரர்கள் பக்கமாக அடித்து வந்த காற்று இப்பொழுது எதிர்ப்புறமாகத் திரும்பத் துவங்கியது. பிரிட்டிஷ் துருப்புக்கள் 1,12,000–க்குமேல் கடல் மார்க்கமாக வந்து இறங்கி புரட்சிக்காரர்களை நாற்புறமும் வளைத்து நின்று சுட்டுத் தள்ளினார்கள். புரட்சிக்காரர்கள் கை இரங்கியது. அனைவரும் துப்பாக்கி மருந்தில்லாமல் புழுப்போல் மாண்டனர். டில்லி நோக்கியும் பிரிட்டிஷ் ராணுவம் முன்னேறியது. புரட்சியின் தலைவன்—மொகலாய மன்னன்—இந்தியா முழுவதும் கொதிப்பேற்பட திட்டமிட்ட வீரன் பிடிபட்டான்.

இரண்டு லட்சம் இந்தியப் புரட்சி வீரர்கள் தவிடு பொடியானார்கள். அவர்கள் கை ஓங்கியிருந்ததெல்லாம் 12 மாதங்களுக்குத்தான். இந்த ஒரு ஆண்டிற்குள் 1,00,000 சதுரமைல் பிரதேசம் புரட்சிக்காரர்களால் சுதந்திரமடைந்தது. ஆனால் முடிவு பயங்கரமானது.

பிரிட்டிஷ் ஆட்சியை நிலை குலுங்கச் செய்தவர்களில் பாக்கி, டில்லியின் கடைசி மன்னன் பகதூர்ஷாதான். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையே துரும்பென மதித்து; முதல் சுதந்திரப்போரை நடத்திய சுதந்திர ஜோதி; நாற்புறமும் பீரங்கியினால் சுட்டுவந்த சமயங்கூட இந்தியச் சுதந்திர வீரர்களைப் புனிதப்போருக்கு அழைத்த மாவீரன்.



"இவ் விடுதலைப் போரில் ஆயுதம் தாங்கி நிற்கும் அனைவரும் சமம், அனைவரும் உடன்பிறந்தவர்கள். ஆகவே அனைவரும் விழிப்புடன் போர்க்களத்திற்குப் புறப்பட வேண்டும். தேசவிடுதலையே நம் புனித கடமையாகும்," என்று இடியேறுபோல் பறை சாற்றினார்.

தனது திட்டங்கள் பாழாயின. இந்தியாவிலிருந்து பிரிட்டிஷாரை விரட்டி விடலாமென்ற கனவு சிதறுண்டு தன்னையும் பிடித்துவிட்டார்கள், இனி இந்தியாவுக்கு விடுதலைப் போரில் உயிர் நீத்த லட்சக்கணக்கானவர்களின் ஆசை என்று நிறைவேறுமோ என மனதில் அலைமோதிக்கொண்டிருந்த கடைசி சமயத்தில்கூட அக் கிழச் சிங்கத்தின் கடைசி மொழிகள் இவைதாம்:

"சுதந்திர உணர்ச்சியோடு போராடிவரும் தேசமக்களின் மனத்தில் நம்பிக்கை இருக்கும் வரை, இந்தியாவின் வாள் லண்டனின் இருதயத்தைப் பிளந்து, ஊடுருவிச் செல்லும்......"

பிரிட்டிஷார் பகதூர்ஷாவை சிறைப்பிடித்து ராணுவ நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரணை நடத்தினார்கள். மொகலாய மன்னர்கள் கட்டிய அதே செங்கோட்டையில் ராணுவ நீதிமன்றம் விசாரணை நடந்தது. இந்தியா எதிர்பார்த்தபடி 1858 மார்ச்சில், 49 பிரிட்டிஷாரைக் கொல்ல உடந்தையாக இருந்தது முதலிய குற்றச்சாட்டுகள் உண்மையெனவும் பகதூர்ஷா குற்றவாளியெனவும் தீர்ப்பளித்தார்கள். பகதூர்ஷாவை பர்மாவுக்குக் கொண்டுபோய் காவலில் வைத்தார்கள். மூதுமை காரணமாகவும், மன முறிவினாலும் பகதூர்ஷா ரங்கூனில் ஆதரவின்றி உயிர் நீத்தார். ரங்கூனில் இன்றும் ஷாவின் சமாதி உள்ளது.

புயலுக்குப் பின் அமைதி யென்பார்கள். ஆனால் இந்தியப் புரட்சிக்குப்பின் அமைதி இல்லை. வஞ்சம் தீர்க்கும் திருத்தொண்டே இங்கு நடந்தது 'கலகம்' செய்த சிப்பாய்களை யெல்லாம் பிரிட்டிஷார் யமலோகம் அனுப்பிவைத்தார்கள். கலகக்காரர்களுக்கு ஒத்துழைத்த கிராமங்கள் மீதெல்லாம் தங்கள் பழியைத் தீர்த்துக்கொண்டார்கள். திரும்ப மீட்கப்பட்ட மாகாணங்கள் மீதெல்லாம் பெரும்

அபராதத் தொகையை விதித்து வசூலிக்கத் தொடங்கினர்.

"ஜான்ஸியில் 75 வெள்ளையர்களை கலகக்காரர்கள் கொன்றார்கள் என்பதற்காக 5000 இந்தியர் உயிரை வாங்கினார்கள். ஒரு வெள்ளையன் செத்தான் என்றால் நூற்றுக்கணக்கான இந்தியர்களின் உயிர்களை ஈடுசெய்தனர். உயிர் நீத்த அந்த நூற்றுக்கணக்கானவர்களுக்கு சரித்திரத்தில் 'கொலைபாதகர்கள்' எனவும் பெயரிட்டனர்..........."

"ஒரு நகரம் கலகக்காரர்களிடமிருந்து பிடிபட்டதென்றால், நகருக்குள் பிரிட்டிஷ் துருப்புக்களை புகவிட்டு ஒரு வாரம் வரை கொள்ளையடிக்கவும் செய்தார்கள்.

"டில்லியில் ஒரு சில ஐரோப்பியர்களை கலகக்காரர்கள் கொன்றுவிட்டார்கள் என்பதற்காக 26,000 இந்தியரை பழிவாங்கியது பிரிட்டிஷ் அரசாங்கம். மக்களைச் சுட்டும், தூக்குப்போட்டும், தீயில் எரித்தும் பழிதீர்த்தது சர்க்கார். அமிர்தசரசில் நடந்த சம்பவம் என்றென்றும் மறக்கமுடியாது. லாகூரிலிருந்த இந்தியத் துருப்புக்கள் கலகம்செய்து 2 ஐரோப்பியத் தலைவர்களைக் கொலைசெய்துவிட்டார்கள். அமிர்தசரசில் உதவி கமிஷனராக இருந்த பிரடரிக் கூபர்தான் இதற்கு முக்கிய காரணம். பழிவாங்கியதைக் குறித்து அவர் கூறியது:

"சுமார் 150 பேர் தூக்கிலிடப்பட்டனர். தூக்கு மரத்திலேறுவதற்கு முன்னால் ஒருவன் மயக்கம் போட்டு விழுந்தான். அவனுக்கு களைப்பாற சிறிது அவகாசம் கொடுத்துவிட்டு, திரும்பவும் தூக்கு மரத்தில் ஏற்றினோம். பிறகு கணக்கு ஏறிக்கொண்டே வந்து 237 பேரோடு நின்றது. மற்றவர் காவல் முகாமைவிட்டு வெளிவர மறுத்தனர். பலதடவை கூவி அழைத்தும் ஆட்கள் வெளிவரவில்லை. சந்தேகப்பட்டு காவல் முகாமின் கதவுகளை விரியத் திறந்தோம். என்ன அதிசயம்! கல்கத்தா இருட்டறை சம்பவம் நாங்கள் நினைத்தபடி நடந்துவிட்டது. களைப்புற்று மூச்சுத்திணறி, பயத்தால் குலை நடுங்கி 45 பேர் செத்துக்கிடந்தார்கள். இந்தச் சடலங்களை இழுத்து வெளியே போட்டோம்."



"கலகக்காரர்களின் கொடியைப் பிடித்திருந்ததற்காகச் சின்னஞ் சிறுவர்களை சுட்டுத் தள்ளினார்கள். பிரிட்டிஷ் துருப்புக்கள் முன்னேறி வரும் சமயம் தங்கள் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டு அவமரியாதை செய்தார்களென்று [illegible] பேரை வீதியிலிருந்த மரங்களில் தூக்கிவிட்டார்கள். பல கிராமங்கள், நகரங்கள் எல்லாம் வெறும் பொட்டல் காடுகளாக காட்சியளித்தன.

"......உடலை நோகச் செய்ததைவிட உள்ளத்தை நோகச் செய்த காரியங்கள் பல. பன்றியின் தோல்களால் முகமதியர்களின் உடலைச் சுற்றி ஆறுகளில் வீசி எறிந்தனர். பன்றிகளின் கொழுப்பைத் தடவி நெருப்பில் காட்டி பிறகு கொன்றனர். இந்துக்களைத் தூக்கி வந்து பசுக் கறியை வாயில் திணித்து விழுங்கச் செய்தார்கள்..."

பல இடங்களில் நடந்த அடாதசெயல்களை விரிவுபடுத்துவது முடியாத காரியம். ஏனெனில் அடக்குமுறையின் வேகமும் விதமும் அவ்வளவு மிகுந்து இருந்தன. சுதந்திர உணர்ச்சியின் காரணமாகவே இப்புரட்சி நடந்தது என்பதை பிரிட்டிஷார் உணர்ந்துவிட்டார்கள். ஆகவே இந்தியாவின் முதுகெலும்பு பழையபடியும் உரம்பெற்றால் பெருந் தீங்கு விளையும் என்பதையும் உணர்ந்தனர்.

# 2. காங்கிரஸ் தோற்றம்

ஆனால், ஒரு சில சுதந்திர வீரர்களின் இதயத்திலே நம்
பிக்கை சாகாமல் இருந்து வந்தது. அதன் விளைவுதான்
காங்கிரஸ் மகாசபையின் தோற்றம்.

1885-ம் ஆண்டு டிசம்பர் மீ 28-ம் தேதியன்று காங்
கிரஸ் ஆரம்பமாயிற்று. ஆலன் ஆக்டேவியன் ஹ்யூம்
என்ற வெள்ளைக்காரர் காங்கிரஸை ஆரம்பித்து வைத்தார்.
1857-ல் தோல்வியுற்ற விடுதலைப் போராட்டத்தை சிப்
பாய்க் கலகம் என்றும் கூறுவார்கள். இந்தக் காங்கிரஸ்
ஒரு காலத்தில் தொடர்ந்து நடைபெற்று, வெற்றியும்
காணப்போகிறதென்பதை ஹ்யூமோ, மற்ற யாருமோ அக்
காலத்தில் கற்பனை செய்துகூட பார்த்திருக்கமாட்டார்கள்.
அந்நிய சர்க்காரிடம் மனுப்போட்டு உத்தியோகங்களை
பெறமுயலும் சபையாகவே அன்று அதைத் துவக்கி வைத்
தார்கள். 1885-ம் ஆண்டிலிருந்து முதல் மகாயுத்தம் வரை
இதைத்தான் காங்கிரஸ் செய்துவந்தது.

முதல் மகாயுத்தம் வந்தது. பிரிட்டிஷாருக்கு தோல்வி
மேல் தோல்வி ஏற்படவே இந்தியாவின் உதவியை அதிக
மாகப் பெறவேண்டுமென பிரிட்டிஷார் நினைத்தார்கள்.
ஆயுதச்சட்டத்தினால் பெறும் உதவியைவிட அன்பினால்
பெறும் உதவிக்கே உண்மையான வலிமை இருக்குமென
வும் கருதினர்.

மேலும் அமெரிக்காவின் உதவியைப்பெற பிரிட்டி
ஷார் துடியாய் துடித்து வந்தார்கள். கெய்ஸருக்கு எதிராக
நடக்கும் போர் ஜனநாயக பாதுகாப்புக்காக நடக்கும்
போர் என்று கூறினால்தான் அமெரிக்கா பிரிட்டனுக்கு
உதவும், பிறகு போரிலும் இறங்கும், என பிரிட்டிஷ்
தலைவர்கள் கருதினார்கள். உடனே சுயாட்சி என்றும், அனை
வருக்கும் சமத்துவம் என்றும் பிரசாரம் செய்தார்கள். இந்
தியாவுக்கும் சுயாட்சி வழங்க வேண்டுமெனக் கூறினார்கள்.



இதை நம்பவைக்க அமெரிக்காவிடம் 300 பிரிட்டிஷ் அதி
காரிகளை கப்பலேற்றினார்கள். பிரிட்டிஷாரின் இந்த பிர
சாரத்தை அமெரிக்கர்கள் நம்பினார்கள். அமெரிக்கத் தலை
வர் வில்சன், லாயிட் ஜார்ஜின் பிரசாரம் எல்லாம் உண்மை
யென்றே நினைத்தார்.

ஆனால் இதையெல்லாம் இந்தியர் நம்பவில்லை. மிதவாதி
களிடம் இருந்த காங்கிரஸ்கூட நம்பவில்லை. இந்தப் பிர
சாரமெல்லாம் செப்படிவித்தை என்றார் லோகமான்ய தில
கர் போன்றவர்கள். ஹோம் ரூல் ஆட்சிவேண்டுமென
காங்கிரஸ் கிளர்ச்சி செய்தது, திலகர் தலைமையில் சிலரும்,
ஸ்ரீமதி அன்னிபெஸண்ட் தலைமையில் சிலருமாக கிளர்ச்சி
செய்யத் தொடங்கினர். லட்சியம் ஒன்றாயினும், இந்த இரு
சாராருக்கிடையேயும் கருத்து வேற்றுமை இருந்தது. மித
வாதத்திற்கும், தீவிரவாதத்திற்கும் போட்டி நடந்ததன்
பயனாக 1918-ல் மிதவாதிகள் காங்கிரஸை விட்டு வெளி
யேறினார்கள். தீவிரவாதிகள் கைக்கு காங்கிரஸ் வரவே
தேசிய விடுதலை கோரிக்கை வலுத்தது. விசாரணைக் கமி
ஷன் என்ற நாடகம் நடத்தப்பட்டு 1918-ல் செம்ஸ்போர்டு
அறிக்கை வெளியாகியது. இதை மோசமானதென்று காங்
கிரஸ் நிராகரித்தது. மிதவாதிகள் இதை வரவேற்றனர்.
அதோடு காங்கிரஸுடன் இருந்த தொடர்பையும் அறவே
அறுத்துக்கொண்டனர். யுத்தமும் முடிந்தது. பிரிட்டிஷார்
கூறிய வாக்குறுதிகள் எல்லாம் இனி நடந்துவிடும் என
இந்தியா எதிர்பார்த்தது. பிரிட்டிஷ் யுத்த முயற்சிக்கு
பல கோடி ரூபாய்களையும், பல ஆயிரக்கணக்கான
மக்களையும் இந்தியா அளித்ததற்கு பிரிட்டிஷார் நன்றிவிசு
வாசமாக நடப்பார்களென்று இந்தியர் நினைத்தனர்.
ஆனால் யுத்தத்திற்குப் பின்பு, பிரிட்டனுக்கு நாடு பிடிக்கும்
ஆசை பன்மடங்கு அதிகமாயிற்றேயன்றி பலனில்லை.
மெக்கா, மெதினா, ஜெருசலேம் மற்றும் பல நாடுகளுக்கு
தர்மகர்த்தாவாக வந்ததும், ஜெர்மனியை வஞ்சம் தீர்த்த
முறையிலும், துருக்கியை படுத்திய பாட்டிலும் இந்த
பேராசை அம்பலமாயிற்று. இந்தியா மட்டும் தனக்கு
ஏதாவது கிடைக்குமென எதிர்பார்த்தது. ஆனால் கிடைத்த
'சலுகை'யோ இந்தியரை திடுக்கிட வைத்தது.

யுத்தத்தின் போக்கினாலும், தீவிரவாதிகள் வசமான காங்கிரஸின் பிரசாரத்தினாலும் தேசத்தில் நல்ல விழிப்பு ஏற்பட்டிருந்தது. வாலிபர்கள் சுதந்திரம் பெற்றே தீருவ தென்று முனைந்து நின்றனர். இதை அறிந்த பிரிட்டிஷார் புரட்சி மனப்பான்மையை குழிதோண்டிப் புதைக்க ஒரு சட்டம் கொண்டுவர முயன்றார்கள். அதுதான் பிரசித்தி பெற்ற "ரவுலட் சட்டம்". சந்தேகப்பட்டவர்களைக் கைது செய்யவும், விசாரணையின்றி கைதிகளை காவலில் வைக்கவும், அவசியமானால் ரகசியமாக விசாரணை நடத்தவும், இந்தச் சட்டம் வசதி செய்தது. பிரிட்டிஷாரிடம் விசுவாசமாயிருந்த முதலாளிகள்கூட இச்சட்டத்தை எதிர்த்தார்கள். தேசமெங்கும் எதிர்ப்புச் சூறாவளி பரவியது.

தென்னாப்பிரிக்காவில் அறப்போர் நடத்திவிட்டுத் திரும்பிய மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி நோயுற்றிருந்தும், அதைப் பொருட்படுத்தாமல் வெளிவந்து எதிர்த்தார். இந்திய அரசியல் வாழ்வில் இத்தனிப்பட்ட ஒருவரின் எதிர்ப்பே பிரமாதமான மாறுதலை ஏற்படுத்தியது. சத்தியாக்கிரக இயக்கம் ஒன்று நிறுவினார். சட்டத்தை மீறி சிறைபுகத் தயாராயுள்ளவர்களெல்லாம் வாருங்கள் என்று அழைத்தார். இந்திய அரசியலில் இவ்விதமான நேரடி நடவடிக்கை எடுத்தது இதுதான் முதல் தடவை.

1919 ஏப்ரல் 6-ம் தேதி தேசமெங்கும் ஹர்த்தால் செய்யும்படி காந்திஜியின் முதல் கட்டளை பிறந்தது. இந்திய மக்கள் சிறந்த முறையில் இந்த ஹர்த்தாலை நடத்தினர். பிரிட்டிஷாரே இந்த ஹர்த்தாலைக் கண்டு மருண்டனர். மகாத்மா 31-ம் தேதிதான் ஹர்த்தால் செய்யச் சொன்னாரென தப்பாக நினைத்து அன்று டில்லியில் பூரண ஹர்த்தால் நடத்தினர். அன்று காலை டில்லியில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் கூர்காத் துருப்புக்களைக்கொண்டு நிராயுதபாணிகளான மக்களைச் சுட்டனர். அமிர்தசரஸிலும் ஏப்ரல் 10-ம் தேதி, டாக்டர் கிச்சுலுவையும். டாக்டர் சத்யபாலையும் சர்க்கார் கைது செய்ததைக் குறித்து ஒரு கண்டனக் கூட்டம் நடந்தது. ராணுவத்தினரும், போலீசாரும் பாய்ந்து, தடியடி, துப்பாக்கிப் பிரயோகம் முதலியன நடத்தினர். ஆத்திர



மடைந்த மக்கள், 6 வெள்ளையர்களைக் கொன்று தள்ளினர் பாஞ்சால சர்க்கார் உடனே ராணுவச்சட்டத்தை பிரகடனம் செய்தது. ஏப்ரல் 13-ம் தேதியன்று அமிர்தசரஸில் ஜாலியன் வாலாபாக்கில் படுகொலை நடத்தினர் சர்க்கார். பாஞ்சாலத்தில் அன்று நடந்த படுகொலைகள் '1857-ல் நடந்த புரட்சியையே நினைவூட்டியது.

எந்த அமிர்தசரஸில் இந்தப் படுகொலை நடந்ததோ, எந்த பாஞ்சாலத்தில் பல மாதங்கள் வரை ராணுவச் சட்டம் அமலில் இருந்ததோ, அதே அமிர்தசரஸில் 1919 டிசம்பரில் காங்கிரஸ் மகாசபை கூடியது. லோகமான்ய திலகர், மகாத்மா காந்தி, அலி சகோதரர்கள், மற்றும் பல சிறை சென்ற தியாகிகளும், மாநாட்டுக்கு வந்திருந்தார்கள். பாஞ்சாலப் படுகொலையை விசாரிக்க காங்கிரஸும், சர்க்காரும் விசாரணைக் கமிட்டிகளை நியமித்திருந்தார்கள். இந்தக் கமிட்டிகள் தங்கள் அறிக்கைகளை காங்கிரஸ் கூடும் முன்பே வெளியிடாததால், முழுவிவரம் கிடைக்காத நிலைமையில் ஒன்றும் செய்வதற்கில்லையென நினைத்து அமிர்தசரஸ் காங்கிரஸ் கலைந்தது.

1920-ல் சர்க்காரின் ஹண்டர் கமிட்டி விசாரணை வெளியாகியது. பாஞ்சாலப் படுகொலையை இக்கமிட்டியினர் மிக அழகாக மழுப்பியிருந்தார்கள். ஆனால் காங்கிரஸ் அறிக்கையோ மயிர்க்கூச்செறிக்கும்படியான விவரங்களைக் கூறியது. ஜாலியன்வாலா பாக்கில் படுகொலை நடத்திய பாதகர்களை சர்க்கார் தண்டிக்கவில்லை—'குண்டு இருந்திருந்தால் மேற்கொண்டும் சுட்டிருப்பேன்', என்ற ஜவான் டயருக்கு 10,000 பவுன் லண்டனில் பரிசளித்தார்கள். இதை அறிந்த மக்கள் கொதிப்படைந்தார்கள். தேசிய காங்கிரஸ் 'இனி பொறுப்பதில்லை' எனக் கிளம்பியது. மகாத்மா காந்தி காங்கிரஸின் போராட்டத்துக்கு தலைமை தாங்கினார்.

தேசமெங்கும் ஒத்துழையாமையை துவங்குவதென்ற மகாத்மாவின் திட்டத்தை காங்கிரஸ் ஏற்றது. கல்கத்தாவில் கூடிய விசேஷ காங்கிரஸ் கூட்டத்தில் இத் திட்டத்தை ஏற்பதாக முடிவுசெய்தனர். பிறகு நாகபுரியில் கூடிய காங்கிரஸ் வருடாந்திர மாநாட்டில் இதை உறுதி

செய்தனர். அகிம்ஸா முறையில் சர்க்காருடன் போராடுவது என முடிவு செய்தனர். சர்க்கார் தந்த ராய் பகதூர், ராவ் பகதூர் போன்ற பட்டங்களெல்லாம் தூக்கி எறியப்பட்டன. சர்க்காரின் பெரும் பதவிகளைத் துறந்து தலைவர்கள் வெளிக்கிளம்பினார்கள். வரிகொடா இயக்கம் வலுத்தது. பிரிட்டிஷ் நீதிமன்றங்களை மக்கள் பகிஷ்கரித்தனர். 1920 ஆகஸ்டில் துவங்கிய ஒத்துழையாமை இயக்கம் முழுவேகத்தில் வேலைசெய்தது. நகரங்களில் காணப்பட்ட தேசிய உணர்வு கிராமங்களுக்கும் பரவத் தொடங்கிற்று. தேசமெங்கும் ஒத்துழையாமை இயக்கத்தால்பெரும் விழிப்பு ஏற்பட்டது. மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களின் பலனாக வந்த சட்டசபைகள் மிதவாதிகளின் புகலிடமாக மாறினவே யல்லாமல் மக்கள் பிரதிநிதிகள் சபையாக மாறவில்லை. சட்டசபைக்குப் போவதை காங்கிரஸ் பகிஷ்கரித்தது. காந்திஜியின் இந்த சத்தியாக்கிரக ஆயுதத்தைக்கொண்டு காங்கிரஸ் தொண்டர்கள் கிராமம் கிராமமாகப் பிரசாரம் செய்தனர். தேசத்தில் ஏற்பட்ட இவ்வுணர்ச்சிப் பெருக்கை, சர்க்கார் மிக உன்னிப்பாக கவனித்து வந்தனர். இந்தியா இந்த நிலையில் இருந்த சமயத்தில் 1921 மே மாதத்தில் லண்டனில் ஒரு சிறு சம்பவம் நடந்தது.

லண்டன் மந்திரி காரியாலயத்தில் ஒருநாள் ஒரு இந்திய வாலிபர் நுழைந்தார். இந்தியா மந்திரி ஸ்ரீ மாண்டேகு அவரை வரவேற்றார். பிறகு அவ்வாலிபர் தாம் ஐ.சி.எஸ். தேர்வில் தேறினவர் என்றும், தாம் ஐ. சி. எஸ். பதவியை ராஜிநாமா செய்வதாகவும் கூறினார்.

இந்தியா மந்திரி மாண்டேகுக்கு வாலிபரின் கூற்று வியப்பை ஊட்டியது. சமாதானங்கள் பல கூறியும் வாலிபர் விடாப்பிடியாக நிற்பதைக் கண்டு அவருக்கு சிறிது கோபங் கூட வந்தது. நீண்ட விவாதம் நடந்தது. "உனக்கு வயது 24 தான் என்கிறாய். பரீட்சையில் 4-வதாக தேறியதாகக் கூறுகிறாய். உன் பேச்சும் தோற்றமும் நன்றாக இருக்கின்றன. உனக்கு ஏன் இந்த புத்தி? தேசம் கிடக்கட்டும். நீ இந்த அரிய பதவியை ராஜிநாமா செய்யலாமா...?" என மாண்டேகு பேசிக்கொண்டே போனார். ஆனால் வாலிபர் அசையவில்லை. கடைசியில் வாலிபர் வென்றார். ராஜிநாமாவை மந்திரி ஏற்றார்.



1921 ஜூலை 16-ம் தேதியன்று பம்பாய் துறைமுகத்தில் ஒரு பிரிட்டிஷ் கப்பல் வந்து நின்றது. இந்தியா மந்திரியுடன் நீண்ட நேரம் விவாதித்து ராஜிநாமாவை ஒப்புக் கொள்ளச் செய்த அந்த மாஜி ஐ. சி. எஸ். காரர் வந்து இறங்கினார். அப்போது பம்பாயில் தங்கியிருந்த மகாத்மாவுடன் பேட்டிகண்டு சுமார் ஒரு மணி நேரம் பேசினார். காந்திஜிக்கு வாலிபரின் செய்கை திருப்தி அளித்தது. 'உங்கள் மாகாணத்துக்கு உடனே சென்று, உங்கள் மாகாணத் தலைவர் ஸி. ஆர். தாஸைப் பாருங்கள்' என காந்திஜி கூறினார்.

உடனே இவ்வாலிபர் கல்கத்தா சென்றார். தேசபந்து தாஸைப் பார்த்து தனது ராஜிநாமாச் செய்தியையும் மகாத்மாவைக் கண்டு பேசியதையும், அவர் கூறியதையும் தெரிவித்தார். ஸி. ஆர். தாஸ் அனைத்தையும் பொறுமையுடன் கேட்டுவிட்டு வாலிபரைப் பார்த்து 'சபாஷ்' என்றார். வாலிபரின் முகம் உவகை பூத்தது.

மகாத்மாவின் ஆசியையும், தேசபந்துவின் சபாஷையும் பெற்ற இந்த வாலிபர் யார்? அவர்தான் சுபாஷ் சந்திர போஸ்.

10

# 3. ரீடிங்குக்குப் படிப்பினை

இந்திய அரசியல் துறையில், மகாத்மாவின் சத்தியாக்கிரகம் பஞ்சுக் கிடங்கில் நெருப்பு பற்றுவதுபோல அதிவேகமாக வேலை செய்தது. வழக்கறிஞர்களெல்லாம் நீதிமன்றங்களை பகிஷ்கரித்தார்கள். தொழிலையே விட்டார்கள். மாணவர்கள் பள்ளிகளை விட்டனர். பள்ளி ஆசிரியர்கள் 'அடிமைத்தனத்தை வளர்க்கும் கல்வி முறை ஒழிக' என தங்கள் பதவிகளைவிட்டு விலகினர். அதிக வருவாயை அளித்து வந்த தமது வழக்கறிஞர் தொழிலையே தேசபந்து துறந்தார். வங்கக் கல்லூரிகளையும் பள்ளிகளையும் விட்டு வெளியேறிய மாணவர் தொகை பெருகியது. எவ்வித வேலையும் இல்லாமல் மாணவர்கள் தேசபந்து தாஸின் கட்டளையை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்கள். இச் சமயத்தில் மாணவர்களுக்கு தேசியக் கல்வியைப் புகட்டுவது என்று ஏற்பாடாகியது. இந்தியா முழுவதும் இந்த ஏற்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டுமென மகாத்மா கூறினார். லாலா லஜபதிராய் பாஞ்சாலமாகாண மாணவர்களுக்குத் தாம் தேசியக் கல்லூரி நிறுவுவதாக முன் வந்தார். வங்கத்துக்கு தேசபந்துதாஸ் பொறுப்பேற்றார்.

கல்கத்தாவில் தேசியக் கல்லூரி நிறுவப்பட்டது. கல்லூரியை நடத்தும் பொறுப்பை தேசபந்து அப்பொழுதுதான் லண்டனிலிருந்து வந்து சேர்ந்த சுபாஷ் சந்திரரிடம் தந்தார். 25 வயதிலேயே போஸிடம் இம் மாபெரும் பொறுப்பு வந்தது.

தேசபந்து தாஸுக்கு சுபாஷ் போஸ் எவ்வளவு கஷ்டப்பட்டு படித்தாரென தெரியும். ஐ. சி. எஸ். பதவியை துச்சமாக ஒரு வாலிபர் உதறித் தள்ளினார் என்றால் அது மிகப் பெரிய தியாகம் என தேசபந்து நினைத்தார். ஒரு வாலிபர் இந்திரபோகப் பதவிமாதிரி இருக்கும் இப்பதவியை துரும்பாக மதித்து, தேசப் பணிக்குத் தன்னை ஏற்றுக்கொள்ளும்படி மன்றாடி நிற்பதென்றால், அந்த வாலி



பர் மிகமிக மனவலிமை உடையவராக இருக்கவேண்டும். தனது தந்தையின் உள்ளம் நோகும்படியாகவும் மாண்டேகுவிலிருந்து மற்றவர்கள் வரை பித்துக்குளி என்றழைக்கும்படியாக உள்ளத்தில் குமுறிக்கொண்டிருந்த தேசபக்தி ராஜினாமா செய்யத் தூண்டியிருக்கிறது என்பதை தேசபந்து நொடிப் பொழுதில் உணர்ந்துகொண்டார். ஆகவே கல்கத்தா தேசியக் கல்லூரியின் பொறுப்பை அவர் போஸிடம் ஒப்படைத்ததில் வியப்பொன்றுமில்லை.

"காத்துட்டு உத்தியோகமென்றாலும் கச்சேரி உத்தியோகம்போல் உண்டா" என்று மக்கள் பேசிவந்த காலம் அது. அதிலும் ஐ. சி. எஸ். என்றாலே, ஏதோ சாகாவரம் பெற்றபேறு என மக்கள் நினைத்தனர். இதே நினைப்பில்தான் போஸின் தந்தையும் சுபாஷை கஷ்டப்பட்டு லண்டனுக்கு அனுப்பி வைத்தார். போஸின் அருமைத் தந்தை ராய்பகதூர் ஜானகிநாத் போஸ் சர்க்கார் வழக்கறிஞராக வேலை பார்த்து வந்தார். அவருக்கு 8 ஆண் குழந்தைகள் 8 பெண் குழந்தைகள். அவர் ஒவ்வொருவரையும் படிக்க வைத்தார். போஸின் மூத்த சகோதரரான சரத் சந்திர போஸை பாரிஸ்டர் தேர்வில் தேறும்படி செய்தார். மற்றொருவரான சுனில் சந்திர போஸை எம். டி. தேர்வுக்கு படிக்க வைத்து டாக்டராக்கினார். மற்றவர்களும் பீ.ஏ., எம்.ஏ. வரை படித்திருக்கிறார்கள். பெண் குழந்தைகளை தகுந்த இடத்தில் திருமணம் செய்து வைத்தார். சுபாஷின் தாயாரான ஸ்ரீமதி பிரபாவதி போஸ் பழுத்த வைதிகர். அறம் வளர்த்த செல்வி. வள்ளுவர் கூறிய விருந்தோம்பல் இலக்கணத்திற்கு இலக்கியமாக இருந்தவர். இத்தகையச் சிறப்புடன் விளங்கியது சுபாஷின் குடும்பம்.

ஜானகிநாத் போஸுக்கு தம் மக்களில் யாராவது ஒருவர் ஐ. சி. எஸ். தேர்வில் தேறிவிட வேண்டுமென்பது ஆசை. ஏராளமான பணம் செலவு செய்து சுபாஷை லண்டனுக்கு அனுப்பினார். எப்படியும் தன் மகன் தேறிவிடவேண்டுமென ஆசைப்பட்டார். அவரது ஆசை நிறைவேறிற்று. தன் மகன் ஐ. சி. எஸ். பட்டத்தோடு வந்திறங்கும் நன்னாளை எதிர்பார்த்திருந்தார். ஆனால் இறுதியாக

வந்த செய்தி அவரைத் திடுக்கிடச் செய்தது. அதுவும் தேசப் பணியாற்ற ராஜிநாமா செய்தாரென்பதை அறிந்ததும், அவர் மனம் அந்த சமயத்தில் என்ன பாடுபட்டிருக்கும்?

லண்டனில் சுபாஷ் ஐ. சி. எஸ். தேர்வுக்காகப் படித்தது மிகக் குறைவு. மேல் நாடுகள் எவ்வளவு சுதந்திரமாக இருக்கின்றன. அவை எப்படி விடுதலை அடைந்தன என்பதைத்தான் பெரிதும் படித்தார். அதே சமயத்தில் அயர்லாந்தில் மாறிவரும் அரசியல் நிலைமை சுபாஷைக் கவர்ந்தது. அயர்லாந்தைப்போல் இந்தியாவும் போராட வேண்டும் என்ற எண்ணம் அவர் மனத்தில் அன்றே வேரூன்றியது. இந்தியாவும் ஒரு நாள் சுதந்திரமாக வாழும், பிறகு நாமும் ஐரோப்பிய நாடுகளின் முற்போக்கைவிட சிறந்த முற்போக்கை நடத்திக் காட்ட வேண்டும் என்பது அவருடைய கனவு.

1921 மே மாதம் கல்கத்தா தேசியக் கல்லூரியின் தலைவரான சுபாஷ் அவ் வேலையை அனைவரும் மெச்சும்படியாக நடத்திவந்தார். ரஷ்யா, அயர்லாந்து, அமெரிக்கா போன்ற நாடுகள் பணக்காரர்களிடமிருந்தும் ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்தும் எப்படி விடுதலை பெற்றன என்ற வரலாறுகளை மாணவர்களுக்கு எடுத்துக் கூறுவதில் சுபாஷுக்கு என்றுமே உற்சாகம். 1857-ம் ஆண்டு இந்திய விடுதலைப் போரைக் குறித்து அவரைப் பேச விட்டுவிட்டால் நேரம் போவதே தெரியாது. தேசபந்து தம்மிடம் வைத்திருந்த நம்பிக்கையை, பன்மடங்கு அதிகரிக்கச் செய்தார். இவ்வாராக ஏழு மாதங்கள் ஓடின. இச் சமயத்தில் ஒரு முக்கிய சம்பவம் நடந்தது.

யுத்தத்தில் இந்தியா செய்த உதவிக்காக வேல்ஸ் இளவரசரை (முடிதுறந்த எட்டாவது எட்வர்டு) இந்தியாவுக்கு அனுப்பி தனது வந்தனத்தை தெரிவித்துக்கொள்வதாக பிரிட்டிஷ் சர்க்கார் அறிவித்தது. அப்போது வைஸ்ராயாக இருந்த லார்ட் ரீடிங் இளவரசரை வரவேற்க சிறந்த ஏற்பாடுகளைச் செய்தார். பிரிட்டன் போர் சமயத்தில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத நிலையில் இந்திய மக்கள் இந்த வரவேற்பை ஏற்பார்களா, தேசத்தின் நிலை



தமக்கு எவ்வளவு விரோதமாக இருக்கிறது என்பதையும் அவர் அறியவில்லை. காங்கிரஸ் இந்த அரிய சந்தர்ப்பத்தைக் கைக்கொண்டு இளவரசரை பகிஷ்கரிப்பது என்று முடிவு செய்தது. மகாத்மா, இளவரசர் வரும் நாளை தேசமெங்கும் ஹர்த்தால் நடத்தும்படி கட்டளையிட்டார். இவ் வேலைக்கு தேசமெங்கும் ஏற்பாடுகள் நடந்தன. கல்கத்தா பகிஷ்கார வேலையை சுபாஷ் பார்த்துக்கொள்ள வேண்டுமென தேசபந்து கட்டளையிட்டார்.

எதிர்பார்த்தபடி இளவரசர் 1921 நவம்பர் 17-ம் நாள் பம்பாய் துறைமுகம் வந்து சேர்ந்தார். அன்று பம்பாய் பூர்ண ஹர்த்தால் செய்தது. இந்தியாவின் பல்வேறு பாகங்களிலும் ஹர்த்தால் நடந்தது. கல்கத்தாவில் நடைபெற்ற ஹர்த்தால் மாதிரி வேறு எங்கும் நடைபெறவில்லை. அன்று கல்கத்தா மனிதப்பிறவியே காணாத நகரமாக விளங்கியது. மோட்டார், டிராம், மற்ற வண்டிகள் ஒன்றைக் கூட பார்க்க முடியவில்லை. பள்ளிக்கூடங்கள், சிற்றுண்டிச் சாலைகள், தொழிற்சாலைகள், ஏனைய காரியாலயங்கள் எல்லாம் மூடியிருந்தன. கல்கத்தா சலனமற்றுக் கிடந்தது. வைஸ்ராய் லார்ட் ரீடிங், ஏனைய அதிகாரிகள் இதனைப் பார்த்துக் கல்லாய் சமைந்துவிட்டார்கள்.

தேசபந்து தாஸ் சுபாஷின் திறமையை பரிபூரணமாக உணர இந்த ஹர்த்தால் வசதி செய்தது. சுபாஷ் வெறும் பேச்சாளி மட்டுமல்ல—தியாகி மட்டுமல்ல—சிறந்த காரியவாதியுங்கூட என்று நினைத்தார். 26 வயது முடிவு பெறாத சுபாஷை மார்புறத் தழுவிக்கொண்டு பலதடவை 'சபாஷ்—சபாஷ்' என்று கூறினார். சுபாஷுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. தேசபந்துவின் பாராட்டு, அவர் கூறும் சபாஷ் இவையெல்லாம் சுபாஷின் கண்களில் நீர் பெருகச் செய்தது. இந்த ஆனந்தக் கண்ணீருக்குத்தான் என்ன காரணம்? தேசபந்துவினிடம் இவ்விப் பாராட்டுதலைப் பெறுவது அவ்வளவு சுலபமல்ல.

கல்கத்தா ஹர்த்தால் செய்தி இந்தியா முழுவதும் பரவியது. வைஸ்ராய் ரீடிங் இதற்குப் பழிவாங்க நினைத்தார். இளவரசர் கல்கத்தா வரும்போது இவ்வித ஹர்த்தால் நடந்தால் அது பெருத்த அவமானமென்றும் ரீடிங்

கலங்கினார். இதற்குள் டிசம்பர் மாதம் வந்தது. இந்த மாதத்தில்தான் இளவரசர் கல்கத்தா வரவேண்டியது.

சுபாஷ் பாபு அப்பொழுது தொண்டர்படைத் தலைவராக இருந்தார். உடனே சர்க்கார், இத் தொண்டர்படையை சட்ட விரோதமானது என மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. அதன் தலைவரான சுபாஷ் பாபுவை டிசம்பர் மாதம் கைது செய்து 6 மாதகால சிறைதண்டனை விதித்தார்கள். தண்டனை அளித்த மாஜிஸ்டிரேட்டிடம் சுபாஷ் கீழ்வருமாறு கேட்டதாக ஒரு ஆசிரியர் எழுதுகிறார் :

“தண்டனை 6 மாதந்தானா? இக் குறைந்த தண்டனையைப் பெற நான் என்ன ஆடு கோழியையா திருடினேன்......?”

நீதிமன்றத்திலிருந்த வழக்கறிஞர்கள் இதைக்கேட்டு கொல்லென்று சிரித்தார்கள். நீதிமன்றத்திற்கு வெளியே இருந்த மக்கள் ‘சுபாஷ் பாபுவுக்கு ஜே’ என்று முழங்கினர். தண்டனை அளித்த மாஜிஸ்டிரேட் முகம் துவண்டது.

சில நாட்களில் தேசபந்து, அவரது மனைவி, குமாரர் மூவரும் கைதானார்கள். பின்னர் மௌலானா அபுல்கலாம் ஆஸாதும் கைதியானார். ஆமதாபாத்தில் கூடுவதாக இருந்த அடுத்த காங்கிரஸுக்குத் தலைவராக தேசபந்து தாஸைத் தேர்ந்தெடுத்தார்கள். சர்க்கார் இவைகளையெல்லாம் கவனிக்கவே இல்லை. இளவரசர் வரும்போது கல்கத்தா அமைதியாக இருக்கவேண்டுமென்ற ஒரே எண்ணந்தான் அவர்கள் மனத்தில் இடம்பெற்றிருந்தது. தேசபந்து தாஸ் வங்க மக்களுக்குக் கீழ்க்கண்ட செய்தியைத் தந்து சிறை சென்றார் :

“எனது கையிலிருக்கும் விலங்கின் பாரமும் உடலை இறுகப் பிணைத்திருக்கும் இரும்புச் சங்கிலியின் கனமும் அடிமைத்தனத்தின் கொடூரமே இவை. இந்தியாவே பெரும் சிறைக்கோட்டமாக இன்றிருக்கிறது. நான் சிறை சென்றாலும் காங்கிரஸின் வேலை நடந்துகொண்டே வரவேண்டும். நான் வெளியே இருப்பதோ, உள்ளே இருப்பதோ காங்கிரஸின்



வேலையைப் பாதிக்கக் கூடாது. நான் இறந்தாலும், உயிரோடு திரும்பினாலும் நீங்கள் காங்கிரஸ் வேலையை மட்டும் மறவாதீர்கள்.”

தேசபந்து இவ்வாறு மனமுருகக் கூறியதற்கு என்ன காரணம்? சுபாஷின் தலைமையில் இளவரசரை பகிஷ்கரிக்க கல்கத்தா ஹர்த்தால் நடத்தியதுதான் காரணம் என்று வங்க மக்கள் எண்ணினார்கள். ஹர்த்தால் நடத்தியதின் மூலம் கல்கத்தா நகரையே கிடுகிடுக்கச் செய்த வாலிபர் திலகம் போஸையும், வங்கத் தலைவரும் காங்கிரஸ் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ராஷ்டிரபதியுமான தேசபந்துவையும் சர்க்கார் சிறையிட்டார்கள். ஆகவே தேசபந்துவின் கட்டளையான காங்கிரஸ் வேலையை நடத்திவைக்கவேண்டும்.

ஹௌரா ஜங்ஷனில் டிசம்பர் 25-ம் தேதி இளவரசர் வந்திறங்கியதும் சர்க்கார் சிப்பந்திகளும், மிட்டாய் பொட்டலம் பெற்ற சிறுவர்களும், சர்க்கார் மோட்டார்களும் அவரை வரவேற்று நின்றன. போலீஸ் துப்பாக்கி சகிதம் நின்று வரவேற்றார்கள். பெரிய வீடுகளில் போலீசார் பறக்கவிட்டிருந்த பிரிட்டிஷ் கொடிகள் காணவில்லை. அவை இருந்த இடத்தில் கருப்புக் கொடிகள் தொங்கின. லார்ட் ரீடிங் முகத்தில் ஈயாடவில்லை.

இத்த அற்புதமான பகிஷ்காரத்துக்கு ஏற்பாடு செய்திருந்த சுபாஷை வங்க மக்கள் வாழ்த்தினார்கள். அவர் யார்? அவரின் வரலாறு என்ன? இளமையிலேயே இவருக்கு எப்படி இவ்வளவு துணிச்சல் ஏற்பட்டது, என்பன எல்லாவற்றையும் ஆராயத் தலைப்பட்டார்கள். அவர்கள் ஆராய்ச்சியில் சுபாஷ் புதிதாகக் கிளம்பிய புரட்சிவீரரல்ல, பள்ளி வாழ்விலேயே அவர் உள்ளத்தில் புரட்சி மனப்பான்மை வேரூன்றி விட்டது என்பதைக் கண்டார்கள்.

# 4. பிறவியில் வீரர்

1897-ம் ஆண்டு ஜனவரி 23-ம் நாள் கட்டக்கி சுபாஷ் சந்திர போஸ் பிறந்தார். இவர் தந்தை அப்பொழுது கட்டக்கில் சர்க்கார் வழக்கறிஞராக வேலைபார்த்து வந்தார். தாயார் பிரபாவதி அம்மை பழுத்த வைதிகர். அவர் பாரமார்த்திக பொருள்களில் நாட்டமுள்ளவர். தம் மக்களில் சுபாஷின் மீதே அவருக்கு மிகுந்த ஆசை. இதற்குக் காரணம் சுபாஷ் சின்னஞ்சிறு பையனாக இருக்கும் பொழுதே பாரமார்த்திக பொருள்களில் அக்கறை காட்டி வந்தார். தம் தாயுடன் அடிக்கடி இந்து தர்ம கோட்பாடுகளைக் குறித்து விவாதிப்பது வழக்கம். தெருவில் அனாதையாகப் பிச்சை எடுத்துத் திரியும் ஏழைச் சிறுவர்களை தம் தாயினிடம் காட்டி, "இவர்களுக்கெல்லாம் யாரம்மா துணை?" என்று கேட்பாராம். "கடவுள் தானப்பா துணை" என்று அன்னை பிரபாவதி கூறினால், சுபாஷுக்கு பெரியதொரு உண்மையைக் கண்டுபிடித்ததுபோல் களிப்பு ஏற்படுமாம். தினம் இவ்விதம் பிச்சைக்காரர்களைக் காட்டி, இவ்வாறு கேள்வி கேட்டு விடைபெறுவது இவருக்கு வழக்கமாகிவிட்டது. சிறிதும் அலுப்புத் தட்டாது சுபாஷின் தாயார் இதே பதிலைக் கூறுவாராம். பள்ளி நேரங்கள் போக எஞ்சிய வேளையில் சுபாஷை அவர் தாயார் அருகில்தான் காணமுடியும். தாயிடம் அவ்வளவு அன்பு. சுபாஷின் இளமை வாழ்வில் பாரமார்த்திக வாழ்வின் சாயை படிந்திருந்தது என்றால் அதற்கு முழுக் காரணம் அவருடைய தாயார் தான்.

சுபாஷின் தந்தை ராய் பகதூர் ஜானகிநாத் போஸ் சிறிது மேல்நாட்டு நாகரிகத்தை விரும்புகிறவர். ஆகவே சுபாஷை 'ப்ராட்டெஸ்டன்ட் ஐரோப்பியப் பள்ளியில்' கல்வி பயிலச் சேர்த்தார். சுபாஷின் கல்வி இப்பள்ளியில் தான் ஆரம்பம். பின்னர் மேல்படிப்பிற்காக "ராவன்ஷி காலேஜ் ஹைஸ்கூலில்" சேர்ந்து தமது 16-வது வயதில்



பத்தாவது தேர்வில் தேறினார். பள்ளியின் தலைமை யாசிரியர் ஸ்ரீ வேணி பாபு சுபாஷின் தந்தையிடம், "உங்கள் மகன் மிகக் கூர்மையான புத்தி யுடையவன். அவனை நன்றாகப் படிக்கவையுங்கள்" என்று பாராட்டினார். ராய் பகதூர் பாபுவுக்கு தம் மகனின் திறமை ஏற்கெனவே தெரிந்தது தான். ஆனால் தம் மகனின் போக்கில் அவருக்கு ஒரு சிறு சந்தேகம் ஏற்பட்டது.

தம் மகன் பாரமார்த்திக விஷயங்களில் நேரத்தை அதிகம் செலவிடுவதாக எண்ணினார். மற்ற பிள்ளைகளெல்லாம் இன்பமாக விளையாடும்பொழுது சுபாஷ் மட்டும் தன் தாயிடம் பிருந்தாவனம், காசி முதலியனபற்றி பேசிக்கொண்டிருப்பது அவருக்குக் கவலையாக இருந்தது. எங்கு தன் மகன் சந்நியாசி ஆகிவிடுவானோ என்று கலங்கினார். மேல் படிப்புக்கு அனுப்பினால் ஒழுங்காகப் படிப்பானோ என்பதே அவரின் ஐயம். ராய் பகதூர் சந்தேகப்பட்டது நடந்தே விட்டது.

ஸ்ரீ இராமகிருஷ்ணரின் உபதேசங்களை மிக உன்னிப்பாக படித்துவந்த சுபாஷை திடீரென ஒரு நாள் வீட்டில் காணவில்லை. நாற்பக்கமும் சகோதரர்கள் ஓடி சுபாஷைத் தேடினர். குழந்தை சுபாஷைக் காணோம் என்று அன்னை பிரபாவதி புழுவாய்த் துடித்தார். ராய் பகதூர் பாபும் பல இடங்களில் தேடி அலைந்தார். சுபாஷின் தோழர்களை விசாரித்ததில் அனைவரும் கையை விரித்தார்கள். சுபாஷுக்கு என்ன நேர்ந்ததோ என்று குடும்பத்தார் கவலையில் ஆழ்ந்திருந்த சமயம், சுபாஷ் தன்னந்தனியாக காடுகளை நோக்கி நடக்கலானார். தனக்கு ஒரு குரு கிடைக்கவேண்டும், ஞான விளக்கை அவரிடமிருந்து பெற வேண்டும் என்ற உறுதியில் 16 வயது சிறுவர் திக்கு தெரியாமல் அலைந்து கொண்டிருந்தார்.

உடுத்திய வேட்டி, போட்டிருந்த சட்டை இவ்வளவு தான் சுபாஷ் எடுத்துவந்த பொருள். வழியில் பிச்சை எடுத்து உண்பது. கிடைக்காவிடில் பச்சைத் தண்ணீரைக் குடித்துவிட்டு மடமோ, சாவடியோ, மர நிழலோ கிடைத்தால் படுத்து உறங்குவது. களைப்பு தீர்ந்ததும் மீண்டும் நடப்பது. இவ்வாறு காசி, ஹரித்துவாரம், பிருந்தாவனம்

ஆகிய புண்ணியத் தலங்களுக்கெல்லாம் சுபாஷ் சென்றார். இமயத்தின் அடிவாரத்திலும் சுற்றி அலைந்தார்.

சுபாஷ் பல சந்நியாசிகளை நெருங்கினார், அவர்களுடன் பேசிப் பார்த்தார். தான் மனத்தில் நினைத்த குருவின் பிரதிபலிப்பு இல்லை. ஒவ்வொரு ஊராக அலைந்தார். சிலரோடு தர்க்கித்துப் பார்த்தார். அவர்கள் எல்லாம் விதியின்மீது பாரத்தைப் போட்டுவிட்டு, சோம்பேறித்தனத்தின் அவதாரங்களாக இருக்கக் கண்டார். தன் மனக்கண் முன் நிற்கும் குருவைப்போல் யாரையும் பார்க்கமுடியவில்லை. உள்ளம் வருந்தி, தாம் வீட்டை விட்டு வந்தது தவறு எனவும் பட்டது. திரும்பவும் வீடு நோக்கி கால்கள் விரைந்து சென்றன.

சுபாஷ் மறைந்து 6 மாதங்கள் ஆயிற்று. அவர் தம் பெற்றோர்கள் சிறிது சிறிதாக நம்பிக்கை இழந்து வந்தார்கள். ஆனால் திடீரென ஒருநாள் சுபாஷ் பாபு தம் வீட்டுப் படிமீது கால் வைத்தார். அப்பொழுது இருட்டிவிட்ட சமயம். தன் தாயார் வெளி முற்றத்தில் உட்கார்ந்திருந்தார். சந்நியாசி கோலத்தில் தாயை நோக்கி விரைந்தோடி காலில் விழுந்தார். கீழே வணங்கி நிற்கும் பையனைத் தூக்கி முகத்தைப் பார்த்ததும் "சுபாஷ்" என்று பிரபாவதி அம்மையார் கதறினார். சுபாஷும் விம்மி விம்மி குழந்தை போல் அழுதார். அன்னையின் அன்பும், பரிவும் அவரை கதறி அழச் செய்தது. சகோதரர்கள், நண்பர்கள், தந்தை அனைவரும் ஓடி வந்து பரதேசிக் கோலத்தில் நிற்கும் சுபாஷைக் கண்டு விம்மி விம்மி அழுதனர். திரும்பவும் வருவாரா என்று ஏங்கிய கண்கள் ஆனந்தக் கண்ணீர் வடித்தன.

சுபாஷை இறுக அணைத்திருந்த அன்னை, "சுபாஷ்! நீ என்னைக் கொல்லவே பிறந்தாயா?" என்று அழுதாராம். சுபாஷ் காணாமற் போனதிலிருந்து அவரது அன்னையின் உடல்நிலை ஊணும் உறக்கமும் இன்றி நிலையிழந்து உயிருக்கே தீங்கு ஏற்பட்டு விடுமோ என அவரது குடும்பத்தார் நினைத்தார்களாம்.

குருநாதனை தேடிக் கிடைக்கவில்லை. இனி அடுத்தபடி என்ன? இதுதான் சுபாஷுக்கு இப்பொழுது கவலை



தந்தை மேல்படிப்பு படிக்கவேண்டும், என்று வற்புறுத்தினார். ஆனால் இவருக்கு படிப்பில் நாட்டம் இல்லை. சுவாமி விவேகானந்தரை தமது மானசீகக் குருவாகக்கொண்டு தமது வாழ்நாளை பிரம்மச்சாரியாகவே கழிக்க எண்ணினார். சுமார் 6 மாதங்கள் கரடு முரடான வாழ்க்கை நடத்திய போஸின் உடல் நிலை மிகவும் மோசமாக இருந்தது. அன்னையின் சிரத்தையால் விரைவில் நோய் குணமடைந்தது. உடனே அவரை 1915-ல் எப். ஏ. வகுப்பில் சேர்த்தார்கள். படிப்பில் அக்கறைகாட்ட ஆரம்பித்துவிட்டார். எப். ஏ. இரண்டாவது வகுப்பில் ருசிகரமான சம்பவம் ஒன்று நடந்தது.

சுபாஷ் படித்து வந்த மாகாணக் கல்லூரியில் சி. எப். ஓட்டன் என்ற ஒரு ஆங்கிலேயர் பேராசிரியராக இருந்தார். இவருக்கு இந்திய மாணவர்களை அலட்சியமாக நினைப்பதில் ஓர் ஆனந்தம். ஒருநாள் ஒரு மாணவர் செய்த சிறு குற்றத்திற்காக கன்னத்தில் அறைந்துவிட்டார். இச் செய்கை சுபாஷ் மனத்திற்குப் பிடிக்கவில்லை. வகுப்பு முடிந்ததும் சுபாஷ் மாணவர்களுடன் இரகசிய கூட்டமொன்று நடத்தி "கல்லூரி மாணவர்களை அடிப்பது தவறு என்றும், அதிலும் கன்னத்தில் அடிப்பது அதைவிடப் பெருந்தவறு எனவும், ஆகவே இதற்குப் பழிதீர்க்க வகுப்புகளுக்குச் செல்லாமல் மறியல் செய்யவேண்டும், என்று சுபாஷ் பேசினார். மாணவர்கள் இணங்கினர். மறுநாள் ஒரு மாணவர்கூட வகுப்புகளுக்குப் போகவில்லை. கல்லூரித் தலைவருக்குச் செய்தி தெரிந்தது. அவர் பேராசிரியர் ஓட்டனின் செய்கையை கண்டிப்பதாகவும் மாணவர்கள் மறியல் செய்யவேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார். இது மாணவர் சுபாஷின் முதல் வெற்றி!

இச் சம்பவத்திற்குப் பிறகு மாணவர் சங்கம் ஏற்பட்டு அதற்குச் சுபாஷ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பேராசிரியர் ஓட்டன் தமது அதிகார வெறியை அடக்கிக்கொண்டிருந்தார். ஆனால் உடன் பிறந்த வெறி ஒரு நாள் தலைகாட்டியது. ஒரு நாள் ஓட்டன் வகுப்பில் இந்தியரைப் பற்றி இழிவாகப் பேசி அவர்கள் அடிமைகளாய் இருப்பதற்குத்தான் தகுதி என இழித்துக் கூறினார்.

மாணவர்கள் ஓட்டனின் வெறியை சரியானபடி அடக்குவது எனத் தீர்மானித்து அன்று மாலையே கல்லூரிக்கு வெளியே, ஓட்டன் மாணவர்களால் சரியானபடி தாக்கப்பட்டார். இச் செய்தி நகரமெங்கும் பரவியது. மறுநாள் கல்லூரித் தலைவர் 'சுபாஷும் மற்றும் சில மாணவர்களும் தான் இதற்குக் காரணம்' என பிறர் சொல்லக் கேட்டு விசாரணை நடத்தினார். சுபாஷ் 2 ஆண்டிற்கு எந்தக் கல்லூரியிலும் சேரக் கூடாது என கல்கத்தா பல்கலைக் கழகம் உத்தரவிட்டது.

ஆகவே சுபாஷ் இரண்டு ஆண்டுகள் கழித்து மீண்டும் கல்லூரியில் சேர்ந்தார். காலஞ் சென்ற சர் அசுடோஷ் முக்கர்ஜி, சுபாஷ் மீண்டும் படிக்க அனுமதி பெற உதவியாக இருந்தார். பீ. ஏ. தேர்வில் முதல் வகுப்பில் தேறினார். பீ. ஏ. படிக்கும்போது கல்லூரியைச் சேர்ந்த "தரைப்படையில்" சேர்ந்து பூர்வாங்க 'ராணுவப் பயிற்சி' பெற்றார்.

இதற்குள் 'ரவுலட் மசோதா எதிர்ப்பு' நாட்டில் தலைகாட்டத் துவங்கியது. அதனுடன் அமிர்தசரஸில் ஜெனரல் டயர் நடத்திய ரத்தவெறி தாண்டவமும் உடன் சேர்ந்தது. சுபாஷ் ராஜீய வாழ்வில் ஈடுபட்டால் அவரைப் பின்பு அடக்க முடியாது எனக் கருதியும் அவர் தந்தை தம் மக்களில் யாராவது ஒருவர் ஐ. சி. எஸ். தேர்வில் தேறவேண்டும் என்ற தனது நீண்ட நாள் ஆசையாலும் சுபாஷை 1919-ம் ஆண்டின் முடிவில் லண்டனுக்கு அனுப்பினார்.

சுபாஷ் லண்டனில் தங்கியிருந்தபோது அங்குத் தம்மை இந்தியர் என்று நினைத்து அதில் ஒரு அலாதி பெருமை அடைந்தார். அவர் லண்டனில் தங்கியிருந்த சமயம் இந்தியா பற்றிதான் அதிகமாக அறிந்துகொள்ள விரும்பினார். அப்பொழுது காந்தி சகாப்தம் ஆரம்பிக்கவில்லை. அவர் தங்கியிருந்த நாட்களில் ஒரே ஒரு கேள்வி மட்டும் அவரை எப்பொழுதும் உருத்திக்கொண்டே இருந்தது.

"மூன்றரைக் கோடி பிரிட்டிஷார் சுதந்திரமாக இருப்பதென்றால், 36-கோடி மக்களான நாமேன் சுதந்திரமாக இருக்கக்கூடாது? இந்த மூன்றரைக் கோடி பேரிடம் அடிமைப்பட்டிருப்பது ஏன்?"



பிரிட்டிஷ் மக்களுக்கு இருந்த பிரஜா உரிமைகளையும் இந்தியருக்கு இருந்த பிரஜா உரிமைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தார். இந்தியா மோசமான நிலையில் இருப்பது தெளிவாகியது. ஸ்ரீமதி சரோஜினி தேவி லண்டன் வந்திருந்தார். இந்திய மஜ்லிஸ்கள் அவருக்கு ஒரு வரவேற்புக் கூட்டம் நடத்தியபோது அக்கூட்டத்திற்குச் சென்று தேவியாரின் சொற்பொழிவைக் கேட்டார். அப்பொழுது அவரது மனநிலை எவ்வாறு இருந்தது என்பதை அவரே எழுதியிருக்கிறார்:

"...எனது உள்ளம் பெருமிதத்தால் பூரித்தது. இந்திய மாது ஒருவருக்கு இவ்வளவு கலைஞானமும், கல்வியும் குண விசேஷமும் இருக்கிறது என்பதை அறிய வியப்படைந்தேன். மேல்நாட்டு மாதர் கூட்டம், இம் மாதரசியின் முன் நிற்க அருகதை இல்லை எனத் தெரிந்தது. ஸ்ரீமதி சரோஜினி தேவியை ஈன்றெடுத்த இந்தியா இன்றும் அடிமையிலிருக்கிறது என்றால் அது தவறு. இந்தியாவிற்கு அற்புத எதிர்காலம் இருக்கும்பொழுது, எதற்காக அடிமையில் இன்னும் உழலவேண்டும்......?"

சுபாஷ் லண்டனில் தங்கியிருந்ததெல்லாம் ஒன்றே முக்கால் வருடந்தான். அதற்குள் இந்தியா மகத்தான மாறுதலை அடைந்திருந்தது. மகாத்மா காந்தி காங்கிரஸ் அரசியலில் பெரும் பங்குகொண்டார். சத்தியாக்கிரகம்—ஒத்துழையாமை என்ற அவருடைய ஆயுதங்கள் முழு வேகத்தில் வேலை செய்யத் துவங்கிவிட்டன.

சுபாஷ் ஐ. சி. எஸ். பதவியை விட்டு விலகியதும், தேசபந்து உதவியால் அரசியல் வாழ்க்கையில் ஈடுபட்டதும், 1921-ல் தொண்டர் படைத் தலைவராய் இருந்து 6 மாதம் சிறை சென்றதும் முன்பே விவரிக்கப்பட்டது.

சிறைத் தண்டனை முடிவடைந்து 1922 செப்டம்பரில் சுபாஷ் வெளிவரும்போது, வட வங்காளத்தில் திடீரென

வெள்ளம் வந்து, பல ஆயிரக் கணக்கான மக்கள் வீடின்றி
தவித்தனர். பல லட்ச ரூபாய்கள் நஷ்டம். அவர்களுக்
கெல்லாம் உதவி அளிக்கவேண்டியது மிக அவசியமா
யிருந்தது. சேவை உணர்ச்சியால், வெள்ளத்தால் வீடின்றி
தவிப்போர்க்கு உதவி செய்ய முனைந்தார் சுபாஷ். இவ
ரது முயற்சியால் வெள்ள நிவாரணத்திற்கு 40,000 ரூபாய்
நிதி சேர்ந்தது. சர்க்கார் நன்கொடை காலணாக்கூட கிடை
யாது. சர்க்காரும் இதில் ஈடுபடாவிட்டால் தவறு என
நினைத்து தானும் 20,000 ரூபாய் நிவாரணத்திற்கு உதவி
யது. அப்பொழுது வங்க கவர்னராக இருந்த லார்ட்
லிட்டன் சுபாஷின் நிவாரண வேலையைப் புகழ்ந்து பாராட்
டினார்.

வங்க மக்கள் ஒரு பக்கம் ஒத்துழையாமைப் போரிலும்,
மற்றொரு பக்கம் வெள்ளத்தின் கொடுமையையும் எதிர்த்
துப் போராடிக் கொண்டிருந்தனர். இச் சமயம் கோரக்
பூருக்கு அருகில் இருக்கும் சௌரி சௌராவில் போலீசா
ருக்கும் மக்களுக்கும் இடையே அடிதடி நடந்து அதன்
காரணமாக மக்கள் உள்ளம் கொதிப்படைந்து, பல
போலீஸ் ஸ்டேஷன்களுக்குத் தீ வைத்துக் கொளுத்திவிட்
டார்கள். சில போலீஸ்காரர்கள் மாண்டனர். அகிம்சை
முறையில் நடந்த ஒத்துழையாமைப் போரைக் கைவிட்டு
மக்கள் பலாத்கார முறையில் இறங்கியது மகாத்மாவுக்குப்
பிடிக்காமல், ஒத்துழையாமை இயக்கத்திற்கு ஒரு முற்றுப்
புள்ளி வைத்தார். இவ் வியக்கத்தை நிறுத்தும்படி செய்த
மகாத்மா காந்திக்கு சர்க்கார் தங்களது சொந்த முறை
யில் நன்றி காட்ட முன்வந்து அவரை 1922 மார்ச்சில்
கைதுசெய்து 6 ஆண்டுகள் காவல் தண்டனை வழங்
கினார்கள்.

இதற்குள் கயாவில் கூடிய காங்கிரஸ் மகாசபைக்கு
தேசபந்து தலைமை வகித்தார். காங்கிரஸ் மகாசபைகளில்
கயா காங்கிரஸ் முக்கியமானது. சட்டசபையைக் கைப்
பற்றுவதின் மூலம்தான் சுயராஜ்யம் அடைய முடியும்
எனக் கருதி தேசபந்து தலைமையில் சிலர் கூடி சுயராஜ்யக்
கட்சியை உருவாக்கினார்கள். இக் கருத்துடையவர்கள் பலர்
சேர்ந்து சுயராஜ்யக் கட்சியைப் பலப்படுத்தினர்.



சுயராஜ்யக் கட்சியின் திட்டம், மத்திய, மாகாண சட்ட
சபைகளையும் ஸ்தல ஸ்தாபனங்களையும் கைப்பற்றுவது
என்பதாகும். இக் கட்சியால்தான் சுயராஜ்யம் வருமென்று
பலமான பிரசாரம் செய்யப்பட்டது. காங்கிரஸ் இதற்கு
எதிராகப் பிரசாரம் செய்தது. சுயராஜ்யக் கட்சியினர்
தேர்தல் பிரசாரத்தில் தீவிரமாக முனைந்தனர். "பார்வர்ட்"
என்ற ஆங்கில தினசரிப் பத்திரிகை ஒன்றைத் துவக்கினர்.
பத்திரிகை துவங்கியதும் சுபாஷ் அதற்கு ஆசிரியராக
அமர்ந்து அதி அற்புதமான முறையில் அதை நடத்தினார்.
சட்டசபையிலும், மாகாண அசெம்பிளியிலும் சுயராஜ்யக்
கட்சியினர் சிறந்த வெற்றி பெற்றனர்.

1924-ல் கல்கத்தா நகரசபை தேர்தல் வந்தது. தேச
பந்து பெருவாரியான வோட்டுகள் பெற்று மேயராகத்
தேர்ந்தெடுக்கப்பட்டார். தேசபந்துவுக்கு சுபாஷ் போஸின்
செயல்திறமை நன்கு தெரிந்துவிட்டது. சுபாஷ் நகரசபை
யில் இருந்தால் நகரசபை வேலைகள் நன்கு நடைபெறும்
எனக் கருதி தேசபந்து சுபாஷை நகரசபையின் பிரதம
நிர்வாக அதிகாரியாக நியமித்தார். அப்பதவிக்கு ரூ 3,000
சம்பளம். அதை சுபாஷ் 1500 ஆகக் குறைத்துக் கொண்
டார். இந்த 1500 ரூபாயையும் அவர் பல மாணவர்களுக்
குப் பள்ளிக் கட்டணமாக அளித்து மாபெரும் தியாகியாக
வாழ்ந்து வந்தார்.

தேசபந்து மேயராகவும், சுபாஷ் பிரதம நிர்வாகியாக
வும் இருக்கும் நகரசபையின் முற்போக்கைக் கேட்கவா
வேண்டும்! மிகவேகமாக நகரசபைக் காரியங்கள் நடைபெற்
றன. கல்வி முறையில் சீர்திருத்தம் ஏற்பட்டது. அதிகாரி
கள், சிப்பந்திகள் கதராடை அணிய ஆரம்பித்தனர்.
புதிய விடுதிகளுக்கும், வீதிகளுக்கும் தேசியப் பெயர்கள்
வழங்கப்பட்டது. கவர்னர்களுக்கும், வெள்ளையர்களுக்கும்
நடைபெற்ற நகரசபை வரவேற்புகளை தேச பக்தர்களுக்கு
வழங்கத் துவங்கினார்கள். எதிர்கால இந்தியச் சந்
ததிகளான குழந்தைகளின் பராமரிப்பில் சுபாஷ் மிகுந்த
அக்கறை செலுத்தினார். நகரசபை வேகத்தில் தேசியம்
கமழ்ந்தது. இந்த நடைமுறை நகரசபையில் அதிகரித்தால்
சர்க்கார்மீது மக்களுக்கு வெறுப்பு ஏற்படும் என அதிகார

வர்க்கம் நினைத்து பல சதி வேலைகளில் ஈடுபட்டனர். இந்தச் சதி சுபாஷை நகரசபையிலிருந்து தொலைத்துவிடும் அளவுக்குச் சென்றது.

1924 அக்டோபர் 25-ம் நாள் அச் சதிவேலை தொடங்கியது. ஆள் தூக்கிச் சட்டம் அமல் செய்து அதாவது யாரையும் கைது செய்து விசாரணை இன்றி காவலில் வைப்பதே அச் சதியாகும். இச் சதிவேலைக்கு வங்க சர்க்காருக்கு பூரண அதிகாரம் கொடுக்கப்பட்டது. இதன் காரணமாக 25-ம் தேதி காலை போலீஸ் உதவி கமிஷனர் சுபாஷ் இல்லம் சென்று அவரைக் கைது செய்தார். காரணம் கூறப்படவில்லை. அவசரச் சட்டத்திற்கு முதல் பலி சுபாஷ். அன்று மாலைக்குள் பல வாலிபர்கள், சட்டசபை அங்கத்தினர் பலர் கைதானார்கள். இச் சதியின் உண்மைக் காரணத்தை சுபாஷ் ஒரு கடிதத்தின் மூலம் தெரிவிக்கிறார்.

> "சட்ட சபையிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும் சுயராஜ்யக் கட்சியினர் நிருவாகப் பொறுப்பு ஏற்று ஆட்சி புரிவது சர்க்காருக்கு குலைநடுக்கத்தைக் கொடுத்துவிட்டது. இதுதான் பலர் கைதாகி இருப்பதற்குக் காரணம்......"

மேயராக இருக்கும் தேசபந்து, சுபாஷ் கைதான செய்தியைக் கேட்டு நகரசபையில் உணர்ச்சி ததும்பப் பேசி சர்க்காரின் போக்கைக் கண்டித்தார். அவர் பேசியதாவது.

> "தேசபக்தி ஒரு குற்றமானால் நானும் ஒரு குற்றவாளிதான். சுபாஷ் போஸ் தேசபக்தி கொண்டிருப்பது ஒரு குற்றமென்றால், அதே குற்றத்தை நானும் செய்திருக்கிறேன் ஆகவே என்னையும் கைது செய்யுங்கள் என அழைக்கிறேன்...!"

உணர்ச்சி ததும்பிய இப்பேச்சு வங்க மக்களைத் தட்டி எழுப்பியது. மாகாணமெங்கும் போஸ் விடுதலைக் கிளர்ச்சியைக் கண்டு கவர்னர் லிட்டன் பயந்துவிட்டார். கல்கத்தா சிறையிலிருந்து போஸை அலிப்பூர் சிறைக்குக் கொண்டு போனார்கள். பிறகு பர்மாவில் உள்ள மாந்தலே சிறையில் கொண்டுசென்று அடைத்துவிட்டனர், மாந்தலே



மிகவும் உஷ்ணப் பிரதேசம். சிறையும் மோசமானது. சுபாஷ் இருமல் நோயால் பிடிக்கப்பட்டார். வர வர இருமல் முற்றி 1927-ல் அவர் க்ஷயரோகத்தால் படுத்த படுக்கையானார். சுபாஷின் உடல்நிலை மோசமான நிலையில் இருந்தும் அவரை விடுதலை செய்யவில்லை. சுயராஜ்யக் கட்சியின் தலைவர்களான தேசபந்துவும் மோதிலாலும் அப்பொழுது சர்க்காரை திணற அடித்தார்கள்.

சுபாஷ் இருந்த மாந்தலே சிறையில்தான் லோகமான்ய பால கங்காதர திலகரும் 6 ஆண்டுகள் இருந்தார். சுபாஷ் சிறைக்கு வந்த 2 ஆண்டுகளில் உடல் நிலை கெட்டு க்ஷய நோய் வலுவடைந்தது. திலகர் இச் சிறையில் தங்கியிருந்த காலத்தில் "கீதா ரகசியம்" என்ற நூலை எழுதினார். திலகர் உடல் நிலை குன்றாது வெளிவந்தார். திலகரை ஒரு மகான் என நினைத்தார் சுபாஷ். திலகரைப்பற்றி சுபாஷ் ஒரு சமயத்தில் சொன்னதாவது :

> "மாந்தலே சிறையில் திலகர் எப்படி 6 ஆண்டுகள் கழித்தார் என்பதை நினைக்கும்போது வியப்பாகவே இருந்தது. உள்ளத்தையே தகர்க்கக் கூடிய சுற்றுணர்ச்சிகளும், அநாகரிக சாயையும் சிறையை அப்படியே அப்பிக்கொண்டிருந்தன. இச் சிறையில் இறந்தவர்களுக்குத்தான் இதன் கொடூரத்தை உணர முடியும். இந்தக் கஷ்டங்களை யெல்லாம் வென்று அவரது ஆத்மா ஒளிவீசியது எனின் அவரது பெருமையை வருணிக்க இயலுமா வார்த்தைகளால்......"

மாந்தலே சிறையில் நோய்வாய்ப்பட்டிருக்கும் சுபாஷுக்கு மருத்துவ உதவி செய்யவேண்டுமெனக் கிளர்ச்சி செய்தனர் வங்க மக்கள். பாலிமென்டிலும் இதுபற்றி அடிக்கடி கேள்விகள் பிறந்தன. வங்க சர்க்கார், கிளர்ச்சிகளுக்கு செவிசாய்க்கவில்லை. இச் சமயத்தில் 1925-ல் வங்கத்தின் தனிப்பெரும் தலைவர் தேசபந்து காலமானார். உடல் பொருள் ஆவி அனைத்தையும் தேசப்பணிக்கு அர்ப்பணித்து மக்களை விட்டுப் பிரிந்தார். தனது வாழ்வின் லட்சியம் நிறைவேறாமலேயே உயிர் நீத்தார். வங்க மக்கள் ஒப்பற்ற தலைவரை இழந்து தவித்தனர்.

இச் செய்தி சுபாஷுக்கு எட்டியது. தனது ராஜீய குரு
சாகும் தருவாயில் என்னென்ன நினைத்தாரோ, சடலத்
தைக்கூடப் பார்க்க முடியவில்லையே என உள்ளம் உடைந்து
வருந்தினர். தாம் கைதியானபோது, 'சுபாஷ் குற்றவாளி
யானல், நானும் குற்றவாளிதான் என்னையும் கைது செய்
யுங்கள் ...'' என்று வீர முழக்கம் செய்த வங்க மக்களின்
தந்தையை என்று காணமுடியும். தனக்கு இனி யார் துணை?
மாந்தலேதான் நமது இந்தியாவா? இச் சிறையும் படுக்கை
யும்தான் நமக்கு உலகமா? எனப் பலவாறு துன்பப்பட்டு
தவித்தாராம். வங்க சர்க்காருக்கு சுபாஷின் உருகிய உள்
ளத்தைப் பற்றி என்ன தெரியும்.

1923 நவம்பரில் வங்க காங்கிரஸ் தலைவர்கள்
சுபாஷ் விடுதலைக்குப் ஒரு புதிய முயற்சி செய்தார்கள். அதா
வது தேர்தல் வந்தது. தேர்தலில் சுபாஷையும் இவரைப்
போலவே நீண்ட நாட்களாகச் சிறையில் இருக்கும்
எஸ். ஸி. மித்ரா பெயரையும் பிரேரேபித்து, இரு தொகுதி
களில் நிறுத்தி வைத்தனர். இருவரும் அதிக எண்ணிக்கை
ஓட்டுகளுடன் வெற்றி பெற்றனர். இப்பொழுது சர்க்கார்
விடுதலை செய்யும் என்பது தலைவர்களின் நம்பிக்கை. சர்க்
கார் இதற்கு அசைந்து கொடுக்கவில்லை. ஆனல் கிளர்ச்சி,
பலாத்காரத்தில் இறங்கிவிடுமோ என்ற அளவிற்குப்
பெருகியது. சர்க்கார் தங்களின் பிடிவாதம் இனி ஆபத்
தானது எனக் கருதி மாந்தலேயிலிருக்கும் சுபாஷை ரங்கூ
னுக்குக் கொண்டுவந்து ஒரு மருத்துவக் குழுவை
அனுப்பி அவரைப் பரிசோதிப்பதாக ஒரு சலுகை காட்
டிற்று. அக் குழுவில் லெப்டினென்ட் கர்னல் கெல்லாஸ்,
சுபாஷ் சகோதரர் டாக்டர் சுனில் சந்திர போஸ் அங்கத்
தினர்களாக இருந்தனர். இவர்கள் சென்று சுபாஷுக்கு
க்ஷயநோய் பீடிக்கப்பட்டிருக்கிறது அவரை இனி மாந்தலே
யில் வைத்திருப்பது சரியல்ல; உடனே அவரை சுகவாச
ஸ்தலத்திற்கு அனுப்பவேண்டும், என்று ஒரு அறிக்கை
தந்தனர்.

வங்க சர்க்காரிடம் இவ்வறிக்கை சென்றது.
மார்ச்சு 21-ம் தேதி சட்டசபையில் கேள்விகள் பிறந்
தன. கேள்விக்குப் பதில் கூறிய ஸ்ரீ மோபர்லி தற்சமயம்



ஆபத்து ஒன்றுமில்லை. அதோடு சுபாஷ் ஐரோப்பாவுக்குச்
சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம் எனக் கூறினர்.
மேலும் அவர், ஆள் தூக்கிச் சட்டம் அமலில் இருக்கும்
வரை அவர் இந்தியாவில் கால் வைக்கக்கூடாது, அவர்
ரங்கூனிலிருந்தே ஐரோப்பாவுக்குப் போய்விடவேண்டும்.
அப்பொழுதுதான் சர்க்கார் அவரை விடுதலை செய்யும் என்
றும் பதிலளித்தார்.

மோபர்லியின் பதிலைக் கேட்ட மக்கள் கொதிப்படைந்
தனர். பார்லிமென்டிலும், சட்டசபையிலும் கேள்விகள்
கேட்கப்பட்டன. பயன் ஒன்றுமில்லை.

சுபாஷை இரு பிரசினைகள் எதிர்நோக்கி நின்றன.
ஒன்று மன்னிப்புக் கொடுத்து விடுதலையடைவது, மற்
ருென்று அரை மன்னிப்பான சர்க்கார் நிபந்தனைக்கு உட்
பட்டு இந்தியாவை விட்டே போய்விட வேண்டும். மரணப்
படுக்கையில் இருக்கும் சுபாஷ் இப்பிரச்சினையைப் பற்றி
தீவிரமாக ஆராய்ந்தார். மரணத்திற்கு உள்ளாவேனே தவிர
வாக்குறுதி கொடுத்து விடுதலை பெறமாட்டேன் என்று
கூறினர். இம் முடிவை தம் சகோதரருக்கு வரைந்த கடிதத்
தில் தெளிவு படுத்துகிருர்.

"இறைவன் இச்சை இன்றி அணுவும் அசையாது.
கடவுள் என்னை எப்படிச் சோதிக்கவேண்டுமென நினைக்
கிருரோ, அதை ஏற்க நான் தயாராக இருக்கிறேன். இதில்
எனக்குத் துளிக்கூட துக்கமில்லை; மாருத இன்பம் அடை
கிறேன்....

"எந்த லட்சியத்திற்காக அவதிப்படுகிறேனே, அந்த
லட்சியம் மட்டும் சாகாது என்பது திண்ணம். மக்கள்
இதை மறக்கமாட்டார்கள். எதிர்கால சந்ததியாவது
அதை அடைந்தே தீரும். இந்தக் கருத்து எனக்கு துன்பத்
தில் துணை நிற்கிறது."

இந்தச் சமயத்தில் சுபாஷ் இனி பிழைப்பதே அரிது
என்ற வதந்தி உலவியது. சுபாஷ் எப்படியும் பிழைக்க
வேண்டுமென தேசமெங்கும் பிரார்த்தனைகள் நடந்தன. இது
சம்பந்தமாக தேசமே பர பரப்புக் கொள்வதைக் கண்ட
வங்க சர்க்காருக்கு மெல்ல அச்சம் பிறந்தது. அவர் இந்தியா

வுக்குள் காலடி எடுத்து வைக்கக் கூடாது என்று சொன்ன சர்க்கார் 1927 மே 15-ம் நாள் "அரோண்ட" என்னும் கப்பலில் சுபாஷை கல்கத்தா அவுட்ராமுக்குக் கொண்டு வருவது என ஏற்பாடு செய்தனர். 'அரோண்டா', ஆற்றில் மத்தியில் பகல் 11 மணிக்கு வந்து நின்றுவிட்டது. கவர்னரின் டாக்டரான மேஜர் ஹிங்ஸ்டனும், கர்னல் சாண்டிஸ், டாக்டர் பி. ஸி. ராய் ஆகிய பிரபல டாக்டர்கள் இருந்தார்கள். இவர்கள் சுபாஷை பரிசோதனை செய்தனர். நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிந்தது. இன்னும் சிறையில் வைத்திருப்பது ஆபத்து என அறிந்து கவர்னருக்கு அறிவிக்கச் சொன்னார்கள். இச் செய்தி மக்களுக்குப் பரவி மக்கள் திரண்டு விட்டனர். மக்கள் கூட்டம் கலையவே இல்லை. படகும் கரையை நோக்கி வரவே இல்லை. இருட்டி விட்டது. அப்பொழுதும் மக்கள் கலையவில்லை. மறுநாள் காலைவரை நகரவே இல்லை.

வங்க சர்க்கார் 18-ம் தேதி காலை அதாவது சுபாஷைக் கொண்டுவந்த மறுநாள் சுபாஷை நிபந்தனை இன்றி விடுதலை செய்வதாக அறிவித்து விடுவித்தார்கள்.

இச் செய்தியைக் கேட்டு தேசமே இன்ப வெள்ளத்தில் மூழ்கியது. பம்பாயில் கூடியிருந்த காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் சுபாஷுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியது. மகாத்மா இவ் விடுதலையைக் குறித்து "யங் இந்தியா" இதழில் மே 26-ல் எழுதினார் :

"ஸ்ரீஜத் சுபாஷ் சந்திர போஸை விடுதலை செய்த வங்க சர்க்காருக்கு என் பாராட்டுதலை தெரிவித்துக் கொள்ள விரும்பினேன். சுபாஷை விடுதலை செய்ய வேண்டுமென பொதுமக்கள் கிளர்ச்சி செய்ததினால் சர்க்கார் அவரை விடுதலை செய்யவில்லை. கல்கத்தா நகரசபையின் தலைமை அதிகாரியான இவர் குற்றமற்றவர் என்று அறிந்து, சர்க்கார் விடுதலை செய்தார்களோ என்றால், அதுவுமில்லை ; அவருக்கோ அல்லது பொது மக்களுக்கோ இன்னதென்று தெரியாத ஒரு குற்றத்தை செய்ததாக சர்க்கார் கைது செய்தனர் அக் குற்றத்திற்கு இவ்வளவு கால தண்டனை போதுமென



நினைத்து இப்பொழுது சர்க்கார் விடுதலை செய்ததா? என்று கேட்கலாம். அதுவுமில்லை. பின் எதற்காக இந்த விடுதலை. புகழ்பெற்ற இக் கைதியின் உடல் நிலை மிக மோசமாக இருப்பதாக சர்க்கார் மருத்துவர்கள் கருதினார்கள். உயிருக்கே ஆபத்து எனவும் அறிந்தார்கள். அதன் பேரிலேயே வங்க சர்க்கார் அவரை விடுதலை செய்திருக்கிறது.

வங்க சர்க்காரின் இப் போக்கு கோழைத்தனம் மிகுந்தது என்று சொல்ல நான் துணிவு கொள்ளுகிறேன். ஏனென்றால் மரணப்படுக்கையில் இருக்கும் ஒருவரை, அவரின் உறவினர் மத்தியில் கடைசியாகக் கொண்டுவந்து தள்ளிவிட்டு, தான் குற்றவாளி இல்லையென நடிக்கும் வங்க சர்க்காரின் செய்கை கோழைகளின் செய்கையையே ஒக்கும்....

நாம் அனைவரும் இந்த வீரர் விரைவில் நலமடைய வேண்டுமென இறைவனை வணங்கி வேண்டுவோமாக."

விடுதலையான இரண்டு மாதங்கள்வரை சுபாஷால் வாய்திறந்து பேசமுடியவில்லை. உடல்நிலை அவ்வளவு சீர்குலைந்திருந்தது. குடும்பத்தினரின் மிகுந்த கவனிப்பாலும், வங்க மருத்துவர்களின் சிறந்த ஊக்கத்தின் உழைப்பாலும் சுபாஷ் விரைவில் நலமடைந்து வந்தார். முழு நலன் காண பல நாட்கள் பிடித்தன.

# 5. காரியதரிசி சுபாஷ்

எந்தக் கட்சியில் நியாயம் உண்டோ அந்தக் கட்சி
தான் வெற்றி பெறும். எப்படிப்பட்ட முட்டுக்கட்டைகள்
இடையூறுகள் நேர்ந்தாலும், உண்மை வீரர்கள் இறுதி
யில் வெற்றியே காண்பார்கள். சுபாஷை விடுதலை செய்யும்
போது சர்க்கார், அவர் பிழைப்பார் என்று நினைக்கவே
யில்லை. உறவினர்களும் ஐயுற்றார்கள். ராஜீய விரோதி
களோ சுபாஷின் ராஜீய விளையாட்டு அவ்வளவுதான், என
உள்ளூர இன்புற்றனர். ஆனால் உண்மைக்கும், ஆத்ம
சக்திக்கும் முன் இந்த மனக்கோட்டைகள் எல்லாம் தகர்ந்
தன. 1928 ஜனவரியிலேயே சுபாஷ் நடக்கத் துவங்கிவிட்
டார். மார்ச்சு மாதத்தில் முன்போல தீவிரமாக அரசியலில்
ஈடுபட முனைந்தார்.

சுபாஷ் சிறைக்குப் போகுமுன் தேசபந்து இருந்தார்.
இப்பொழுது தேசபந்து இல்லை. தேசபந்துவின் இரு
மாணவர்களான சென்குப்தாவும் சுபாஷும்தான் தலைவர்
களாக இருந்து வங்க மாகாணத்தை நடத்தவேண்டிய நிலை
ஏற்பட்டது. ஆனால் வங்கத்தின் ஊழ்வினை வசத்தாலோ
வேறு எக்காரணத்தாலோ சுபாஷுக்கும் சென்குப்தாவுக்
கும் இடையே கருத்து வேற்றுமை உண்டாயிற்று. சுபாஷ்
கட்சி, சென்குப்தா கட்சி என இரு கட்சிகள் ஏற்பட்டு
விட்டன. இரு கட்சியினரும் ஒரே போக்கில், ஒருவரை
முந்தி, இன்னொருவர் போகவே முயன்றார்கள்.

இரு பிரிவினரின் உள்ளத்திலும் குமைந்து கொண்
டிருந்த பகைமை வெளிக்காட்டத் துவங்கியது. பொது
மேடைகளில் ஒரு கட்சியாரைத் தாக்கி மற்றொரு கட்சியார்
பேசுவர். மேடைத் தாக்குதலோடு அமையாது செய்தித்
தாள்களிலும் தாக்கத் துவங்கினர். சென்குப்தா கட்சிக்கு
"அட்வான்ஸ்" என்ற செய்தித்தாள் தோன்றியது.
போஸுக்கு "பார்வர்ட்" என்ற செய்தித்தாள் ஆதரித்தது.
தேசியத்தின் தாயகமான வங்காளம் இவ்வாறு பிளவுபட்டு



பூசலில் அவதிப்படுவதைக் கண்ட இந்தியாவே வருந்தியது.
மகாத்மாவும் காரியக் கமிட்டியும் இவ் வேற்றுமைகளைத்
தீர்த்துவைக்க முயன்றார்கள். காரியக் கமிட்டி ஸ்ரீ
ஆனேயை அனுப்பி வைத்தது. ஸ்ரீ ஆனே சமரசம் செய்ய
எவ்வளவோ முயன்றார். வெற்றி கிடைக்கவில்லை. சுபாஷ்
வங்க மாகாண காங்கிரஸுக்குத் தலைவராக நின்று வெற்றி
பெற்றார்.

1927 டிசம்பரில் சென்னையில் கூடிய காங்கிரஸ் மகா
சபைக்கு வங்கப் பிரதிநிதி குழுவின் தலைவராக சுபாஷ்
சென்னைக்கு வந்தார். சென்னையில் கூடிய காங்கிரஸில்
சுபாஷ் அகில இந்திய காங்கிரஸ் காரியதரிசி பதவியை ஏற்
றார். பண்டித ஜவாஹரும், சாகிப் குரேஷியும் மற்றுமிரு
காரியதரிசிகள். சுபாஷுக்கு முதன்முறை கிடைத்த
பொறுப்பான பதவி இதுதான். இத்துடன் வங்க மாகாண
அரசியலைவிட்டு இந்திய அரசியலுக்கு வருவோம்.

இந்தியா மந்திரி லார்ட் பர்க்கன்ஹெட் மிகவும் ஆண
வம் உடையவர். இந்தியாவுக்குச் சுயாட்சி வழங்காமல்
பிரிட்டிஷார் கட்டிக் கழிக்கிறார்கள் எனக் கேட்டதற்கு,
அவர் இந்தியர்கள் அரசியல் திட்டம் தயாரிக்க அரு
கதையற்றவர்கள் என்று கூறினார். இச் செய்தி இந்திய
மக்களுக்கு மனவேதனையைத் தந்தது. சர்வகட்சிமாநாடு
கூட்டி, அவர் கூற்றுக்கு பலத்த மறுப்புக்கள் எழுப்பினர்.
பின்னர் லார்டு பர்க்கன்ஹெட்டுக்கு பதில் கூறுவதற்கு
பண்டித மோதிலால் தலைமையில் ஒரு குழுவினை நிறுவி,
இந்தியாவுக்கு ஒரு அரசியல் திட்டம் வகுத்தார்கள். இத்
திட்டம் இந்தியாவிற்கு முழு குடியேற்ற நாட்டந்தஸ்தே
வேண்டுமெனக் கூறியது.

லார்ட் பர்க்கன்ஹெட் அப்போதைய இந்தியாவின்
மனநிலையை அறியாது சைமன் கமிஷனை இந்தியாவுக்கு
அனுப்பி வைக்கும் மற்றொரு பெருந்தவறையும் செய்தார்.
சைமன் இந்தியாவுக்கு காலடி எடுத்து வைக்கும் தினம்
தேசமெங்கும் ஹர்த்தால் கைக்கொள்ள வேண்டுமென
மகாத்மா கூறியதும் நாடு முழுவதும் பகிஷ்காரத்துக்கு
ஏற்பாடாகியது.

சர்வகட்சி மாநாட்டார் தயாரித்த குடியேற்ற நாட்டந்தஸ்து திட்டம் ஜவாஹருக்கும் போஸுக்கும் பிடிக்கவில்லை. இருவரும் முழுச் சுதந்திரம் வேண்டுமென்றார்கள். 1928 மே மாதம் கூடிய மகாராட்டிர மாகாண அரசியல் மாநாட்டிற்கு சுபாஷ் தலைமை வகித்துப் பேசியபோது இதைத் தெளிவுபடுத்திக் கூறினார். சுபாஷும் ஜவாஹரும், சர்வகட்சி மாநாட்டின் குடியேற்ற நாட்டந்தஸ்து கோரிக்கையை ஒப்புக்கொள்ளக்கூடாது என இடைவிடாது பிரசாரம் செய்தார்கள். முழுச் சுதந்திரத்திற்குப் பாடுபடும் ஒரு சங்கத்தைத் துவக்கினார்கள். அதற்கு "விடுதலை சங்கம்" என்று பெயர். நேருவும் சுபாஷும்தான் இதற்குக் காரியதரிசியாக இருந்தார்கள்.

1928 டிசம்பரில் மோதிலால் தலைமையில் கல்கத்தாவில் காங்கிரஸ் கூடியது. சர்வகட்சி மாநாட்டைச் சேர்ந்தவர் மோதிலால். இதற்குள் தேசத்தில் எங்கு பார்த்தாலும் குடியேற்ற நாட்டந்தஸ்து வேண்டுமா, முழுச் சுதந்திரம் வேண்டுமா என்ற கட்சிப் பிரதி கட்சிகள் வலுத்தன. சிலர் மோதிலால் கட்சியையும் சிலர் போஸ்-ஜவாஹர் கட்சியையும் பின்பற்றினர்.

இந்தத் தகராறுகளைக் கண்டு காங்கிரஸில் பிளவு ஏற்படும் என மகாத்மா அஞ்சினார். உடனே தாம் ஒரு சமரசம் செய்ய முயன்று கீழ்க்கண்ட தீர்மானத்தை தாமே கொண்டு வருவதாகக் கூறினார்.

> "1929 டிசம்பர் 31-ம் தேதிக்குள் பிரிட்டிஷார் இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டந்தஸ்து கொடுத்தால் அதை ஒப்புக்கொள்வது, இல்லையேல் முழுச் சுதந்திரத்தையே காங்கிரஸ் வேண்டி நிற்கும். இதற்குக் குறைந்ததாக எதைக் கொடுத்தாலும் ஏற்காது.'

சுபாஷ் இச் சமரச தீர்மானத்தை எதிர்த்தார். இப்படி வேண்டுகோள் விட்டுக்கொண்டிருந்தால் ஒரு காரியமும் நடைபெறாது என்று சுபாஷ் கூறினார். மகாத்மாவின் மனப்போக்கை வாலிப சுபாஷின் தீவிர உள்ளம் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. கடைசியாக தீர்மானத்தை மகாத்மா கொண்டுவர அது நிறைவேறிவிட்டது. இதனால்



மகாத்மாமீது சுபாஷுக்கு அதிகக் கோபந்தான். மிதவாதிகளுக்கு மகாத்மா விட்டுக் கொடுத்து விட்டாரென மகாத்மாவையே சுபாஷ் கண்டித்தார். அதற்கு அவருடைய தீவிர உள்ளமே காரணம். மற்றபடி மகாத்மாவிடம் தனிப்பட்ட முறையில் சுபாஷுக்கு உள்ள மதிப்பானது மிக உயர்ந்த நிலையை உடையது. 'தேசத்தின் தந்தை மகாத்மா' என்ற உண்மையை அவர் எப்பொழுதும் மறந்ததில்லை.

கல்கத்தா காங்கிரஸுக்கு அனைவரும் போற்றத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்தவர் சுபாஷ்தான். இவர் தொண்டர் படையின் தலைவராக இருந்து, மாநாட்டுத் தலைவர் மோதிலால் நேரு ஊர்வலம் வரும்போது, தளபதி உடையில் காட்சி அளித்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. ராணுவ முறையில் தொண்டர்கள் தலைவர் மோதிலாலுக்கு வணக்கம் செலுத்திய காட்சி, இந்தியாவுக்கே சுதந்திரம் கிடைத்து, சுதந்திரப் படைகள் தலைவருக்கு வணங்கி நின்றால் எங்ஙனம் இருக்குமோ அவ்வாறு இருந்தது அக் காட்சி.

22

# 6. தீவிரவாதி சுபாஷ்

1929 ஆகஸ்ட் 11-ம் தேதி வங்க ராஜீயக் கைதிகள்
நாள் கொண்டாடப்பட்டது. சுபாஷ் தலைமையில் ஒரு
பெரிய ஊர்வலம் வருவதெனவும் ஏற்பாடாகி ஊர்வலம்
நடந்தது. ஊர்வலம் வரும் வழியில் போலீஸார் பலர், கொடி
களைப் பிடுங்கி, பலருக்குத் தடியினால் பலத்த காயம் ஏற்
படச் செய்தனர். இந்த அமளியை அடக்க சுபாஷ் எவ்
வளவோ முயன்றும் முடியவில்லை. ஊர்வலம் முடிந்ததும்
பொதுக் கூட்டம் கூட்டினார்கள். கூட்டத்தில் சுபாஷ்
அனல் கக்கும் மொழியில் பேசினார். "இதுதான் ஜனநாயகம்,
அமைதி காக்கும் முறை இதுதான் என்றால், இந்த அமைதி
தொலைந்து நாசமாகட்டும்" என்று சுபாஷ் வீர உணர்வு
ததும்பப் பேசினார். சுபாஷின் பேச்சைக் கேட்டு மக்கள்
மகிழ்ந்தனர். வங்க சர்க்காருக்கு சுபாஷின் சொற்பொழிவு
சென்றதும் செப்டம்பர் 3-ம் தேதி அவரைக் கைது செய்
தார்கள். ராஜத்துவேஷம் உண்டாகும்படி சுபாஷ் பேசினா
ரென அவர்மீது வழக்குத் தொடரப்பட்டது.

பின்னர் டிசம்பரில் லாகூரில் காங்கிரஸ் மகாசபை
கூடியது. மாநாட்டில் முழுச் சுதந்திரமே காங்கிரஸின்
கொள்கை என்ற தீர்மானத்தை மகாத்மா கொண்டுவந்தார்.
கல்கத்தா காங்கிரஸின்போது சர்வகட்சி மாநாட்டுத் தீர்
மானத்தை எதிர்த்தவர்கள் இதனை வரவேற்றார்கள். இந்தக்
கோஷ்டிக்குத் தலைவராக விளங்கியவர் சுபாஷ்தான். ஆகவே
அத்தீர்மானத்தை அவர் வரவேற்காமல் அதற்கு ஒரு திருத்
தத்தைக் கொணர்ந்து தனது எதிர்ப்பைத்தான் காட்டினார்.
மகாத்மாவின் இத் தீர்மானத்தைக் குறித்துப் பேச சுபாஷ்
எழுந்ததும் மகாத்மாவின் தீர்மானத்திற்கு முதலில் ஒரு
வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டார். பிறகு திருத்தம்
கொண்டுவந்தார். அதாவது, பிரிட்டிஷ் சர்க்காரை திணற
வைக்கும்படியாக, நாம் ஒரு சுதேசி போட்டி சர்க்காரை
நியமிக்கவேண்டும் என்பதே அத் திருத்தம்.



மகாத்மா காந்தி இதற்குப் பதில் அளிக்கையில்,
"யோசனை நன்றாக இருக்கிறது. ஆனால் கால நிலைமை
இதற்கு ஒத்திருக்கவில்லை," என்று கூறினார். சுபாஷுக்கு
இந்தப் பதில் பிடிக்கவில்லை. தனது திருத்தத் தீர்மானத்
தைக் கொண்டுவரப் போவதாகக் கூறினார். சபையில்
சுபாஷின் திருத்தம் தோல்வி கண்டது. மகாத்மாவின் அசல்
தீர்மானமே நிறைவேறியது.

கல்கத்தா காங்கிரஸுக்குப் பிறகு சுபாஷ் என்ன கூறி
னாரோ, அதையேதான் இப்பொழுதும் கூறினார். அதாவது
மகாத்மா உள்பட காங்கிரஸ் தலைவர்கள் மிதவாதிகள் ஆகி
விட்டதனால், வாலிபர்கள்தான் இனி அரசியல் போராட்
டத்தை நடத்த முன்வரவேண்டுமெனவும் பிரசாரம் செய்
தார். அவரின் பிரசாரம் மிகத் தீவிரமாக இருந்தது.

லாகூர் காங்கிரஸில் மற்றொரு சம்பவமும் நடந்தது.
காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கு உறுப்பினர்களைத் தேர்ந்
தெடுக்கும் வேலையை ஜனவரி 2-ம் தேதி காலை நடத்தி
வைப்பதாகக் காங்கிரஸ் தலைவர் கூறினார். ஆனால் முதல்
தேதியே இவ்வேலை நடந்தது. அப்பொழுது சுபாஷும் அவ
ரைச் சேர்ந்தவர்களும் சபையில் இல்லை. வங்கத்தின் பிரதி
நிதியாக சுபாஷ் இருந்த பதவிக்கு சென்குப்தா தேர்ந்தெடுக்
கப்பட்டார். சுபாஷை ஆதரித்து வந்த காலஞ்சென்ற
ஸ்ரீ எஸ். ஸ்ரீனிவாச ஐயங்கார் பெயர்கூட விடப்பட்டது.
ஸ்ரீனிவாச ஐயங்கார் இடத்திற்கு ராஜாஜி தேர்ந்தெடுக்கப்
பட்டார். மறுநாள் தேர்தல் நடத்துவதாகக் கூறி அன்று
மாலையே தேர்தல் நடத்தியது பெரும் சூழ்ச்சி எனவும்,
தீவிரவாதிகளை ஒழிப்பதற்கென்றே இவ்வாறு செய்யப்
பட்டதாகவும் கூறினார்.

உடனே சுபாஷ் காங்கிரஸ் காரியக் கமிட்டி மிதவாதி
கள் கைக்குப் போய்விட்டதாகக் கூறி, "காங்கிரஸ் ஜன
நாயகக் கட்சி" என ஒரு புதுக்கட்சியை ஏற்படுத்தினார்.
ஸ்ரீ ஸ்ரீனிவாச ஐயங்கார்தான் இக் கட்சிக்குத் தலைவராகத்
தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சுபாஷ், வட்டமேஜை மாநாடு கூடுவதை வன்மை
யாகக் கண்டித்தார். வைஸ்ராய் இர்வினுக்கு சமரசம்

ஏற்படுத்துவதில் அக்கரை இருப்பதாக மகாத்மா நினைப்பது தவறு என்று கூறினார். சுபாஷின் இப் பிரசாரங்கள் மும்மரமடைந்தன. தலைவர்களுக்கும் சுபாஷுக்கும் கருத்து வேற்றுமை வெகு தூரத்திற்குப் போய்விட்டதாக ஜனங்கள் நினைக்கும்படி ஏற்பட்டது.

காரியக் கமிட்டிக்கு உறுப்பினர்களை நியமித்ததில் சுபாஷின் பெயர் ஏன் விட்டுப்போயிருந்தது, ஏன் அவரைச் சேர்க்கவில்லை? என்று கேட்டபோது, "குணப்பொருத்தமில்லை" என்று மகாத்மா கூறினார். உண்மை [illegible] ஏனென்றால் பெரும்பாலான தலைவர்கள் காலநிலையை ஒட்டி காங்கிரஸ் தீவிர போராட்டத்தை ஒத்திவைக்க வேண்டுமென்றார்கள். சுபாஷோ, காலநிலை தானாகவே ஏற்படும், நமது போராட்டம் தீவிரமாக வேண்டியது தான் பாக்கி என்றார். சுபாஷுக்கும் தலைவர்களுக்கும் லட்சியத்தில் ஒற்றுமையிருந்தாலும், நடைமுறை வேலைகளில் ஒற்றுமை இல்லை. இதனால் லாகூர் காங்கிரஸிலிருந்து மனம் உடைந்த உள்ளத்தோடு சுபாஷ் ஊர் திரும்பினார்.

சுபாஷ் கல்கத்தா திரும்பியதும், அவர்மீது முன்பே விதித்திருந்த ராஜத்துவேஷ வழக்கு மீண்டும் துவங்கியது. 1930 ஜனவரி 23-ம் தேதி ஒரு வருட காவல் தண்டனையை வங்க சர்க்கார் வழங்கியது.

## 7. மேயர் சுபாஷ்

1930 ஆம் ஆண்டு இந்திய வரலாற்றிலேயே முக்கியமானது. உலகப் புகழ் பெற்ற உப்புச் சத்தியாக்கிரகம் நடைபெற்றது இவ்வாண்டில்தான். தண்டி யாத்திரையை மகாத்மா மேற்கொண்டு இந்தியாவையே சுதந்திரப் போருக்கு அழைத்தார். இந்திய மக்கள் அனைவரும் ஒரே கொடியின் கீழ் நின்று அறப்போர் நடத்தியதும் இவ்வாண்டுதான். ஆகவே இவ்வாண்டின் நிகழ்ச்சிகள் மிக முக்கியமானவைகள்.

1930 பிப்ரவரி 14, 15, 16-ம் தேதியில் சபர்மதியில் காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினர்கள் கூடி, மகாத்மாவின் தலைமையின்கீழ் ஒத்துழையாமைப் போரைத் துவக்க வேண்டுமென்றும், அகிம்ஸையே போராட்டத்தின் கொள்கை எனவும், உப்புச் சட்டத்தை உடைப்பதின்மூலம் ஒத்துழையாமைப் போரை நடத்துவதென்றும் முடிவு செய்தனர். சத்தியாக்கிரகப் போரைத் துவக்குமுன் மார்ச் 2-ம் தேதி வைஸ்ராய்க்கு மகாத்மா தனது எண்ணத்தைத் தெரிவித்து ஒரு கடிதம் எழுதினார். மகாத்மாவின் கடிதம், சர்க்காருக்கு துன்பந்தர நினைக்கவில்லை என்பதை விளக்கி, அத்துடன் பிரிட்டிஷ் மக்களிடத்தும், அவர்கள் நல்லெண்ணத்திலும் அவருக்கு இருக்கும் நம்பிக்கையையும் தெளிவுபடுத்தினார். வைஸ்ராய் இதற்கு, மகாத்மாவின் நேரிடை நடவடிக்கை பொதுமக்களின் அமைதியைக் குலைத்து விடுமென்று கூறினார். இதற்கு மகாத்மா அளித்த பதில் மிகவும் உருக்கமாக இருந்தது.

"முழந்தாளிட்டு உண்ண உணவு கேட்டேன். தாங்களோ கல்லைக்காட்டி பசியாறச் சொன்னீர்கள். பலாத்காரத்தைக் கண்டு இறங்கி வருவது தான் பிரிட்டிஷாரின் குணம். ஆகவே உங்கள் பதில் என்னை வியப்படையச் செய்யவில்லை. இந்திய மக்களுக்கு அமைதி என்றால் ஒரே ஓர் அமைதிதான் தெரி

யும். அதுதான் சிறையில் காணும் அமைதி. வலுக் கட்டாயமாகச் சுமத்தப்பட்டிருக்( இந்த அமைதியை, அதனின் ஆதாரமாக நிற்கும் பிரிட்டிஷ் சட்டத்தை நான் எதிர்க்கிறேன். இந்த அமைதி தேச மக்களின் தொண்டையே இறுகப் பிணைத்து, மூச்சுத் திணற வைப்பதைப் போக்கியாக வேண்டும் என்பதே என் லட்சியம்......"

மகாத்மா தனது போராட்டத்துக்கு முனைந்தார். 79 தொண்டர்களுடன் தண்டிக்கு யாத்திரையாகச் சென்று உப்புச் சட்டத்தை உடைப்பது என்பதாகும். மகாத்மா தண்டிக்கு வரும் முன்பே அங்குள்ள கிராமவாசிகளைப் போருக்குத் தயார் செய்ய பட்டேல் கிளம்பினார். சர்க்கார் விழித்துக்கொண்டது. வல்லபாயைப் பிடித்து 3 வருட காவல் தண்டனை விதித்தது. இச்செய்தி கேட்டு கூர்ஜரம் திரண்டது. 75,000 பேர் கொண்ட பெருங்கூட்டம் நடந்தது. கூட்டத்தில் இருந்த 75 000 பேரும் சிறை செல்லத் தயாரென சூளுரை மேற்கொண்டார்கள். மகாத்மா இச் சூளுரை உண்மைதானா என்றதும், கூட்ட மக்கள் அனைவரும் 'ஆம்' எனக் கூறினர்.

மகாத்மாவின் யாத்திரை 200 மைல், 24 நாட்கள் நடக்கவேண்டும். மகாத்மா நடந்து சென்றே இந்த யாத்திரையை முடித்தார். வழியில் பல சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் தங்கள் பதவியை விலக்கிவிட்டு மகாத்மாவுடன் ஒத்துழைக்க முன் வந்தனர். கூர்ஜரத்திலும் வங்கத்திலும் பலர் கைதானார்கள். வங்கத்தில் சென்குப்தாவும் கைதானார். போலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். மீண்டும் மகாத்மா, தான் சட்டத்தை மீறப்போவதாக வைஸ்ராய்க்குக் கடிதம் எழுதினார். உடனே ஏப்ரல் 5-ம் தேதி மகாத்மாவைச் சிறை செய்து எரவாடா சிறைக்குக் கொண்டு சென்றனர். மக்களைப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தும்படி கூறிச் சென்றார் மகாத்மா. இச் செய்தி தேசமெங்கும் பரவியது. மக்கள் அனைவரும் காந்திஜியின் கட்டளையை நிறைவேற்ற முன் வந்தார்கள்.

சுபாஷ் இப் போராட்டத்தை நேராக இருந்து பார்க்க முடியவில்லை. சென்குப்தாவும் அதே சிறைக்குக் கொண்டு



வரப்பட்டார். சென்குப்தா மூலம் போராட்டம் துவங்கி விட்டதென்றும், போராட்டத்தை ஏற்க வங்க மக்கள் தயாராயினர் என்று கேட்டதும் சுபாஷ் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினார்.

ஏப்ரல் 21-ம் தேதி அலிப்பூர் சிறையில் ஒரு துயரமான செய்தி நடந்தது. சிறையதிகாரிகள் கோபத்திற்குச் சுபாஷ் உள்ளானார். 21-ம் தேதி விசாரணைக் கைதிகளை கோர்ட்டுக்கு அழைத்துச் செல்ல சிறை அதிகாரிகள் வந்தனர். ராஜீயக் கைதிகள் தங்களைச் சிறை அதிகாரிகள் சரியாக நடத்தவில்லை என்றும் அதனால் தாங்கள் கோர்ட்டுக்கு வர முடியாதென்றும் கூறினார்கள். அதிகாரிகளுக்கு இச் செய்தி கோபமூட்டி, கிரிமினல் குற்றம் அனுபவித்து வரும் சில பட்டாணியர்களை அழைத்து இக்கைதிகளை மோட்டாரில் போடும்படி கட்டளையிடப்பட்டது. உடனே சிறையில் பரபரப்பு ஏற்பட்டது. போஸும் சென்குப்தாவும் இதனைப் பார்த்து கோபமடைந்தனர். போஸ் சிறை அதிகாரிகளைப் பார்த்து பட்டாணியர்கள் கைதிகளை அடிப்பதை நிறுத்தும்படிக் கேட்டார். அதிகாரிகள், இவரே ஒரு கைதியாயிற்றே எனச் சிரித்தனர். சுபாஷ் கூப்பாடு போட்டார். சிறை அதிகாரிகள் அதே பட்டாணியர்களை சுபாஷ் மீது ஏவினர். சிறு சலுகைகளுக்கு முகம் பார்த்து நிற்கும் பட்டாணியர் சுபாஷை நன்றாகத் தாக்கி மாடிப் படியில் இருந்து கீழே உருட்டினர் மூச்சின்றி, இரத்தம் பெருக்கெடுத்து கீழே விழுந்துவிட்டார். சென்குப்தாவையும் கடுமையாகத் தாக்கிவிட்டார்கள். சுமார் ஒரு மணி நேரம் சுபாஷ் மயக்கமுற்று இருப்பதை சிறை அதிகாரிகள் கவனிக்கவே இல்லை. அவர்கள் சகாக்கள்தான் தூக்கிச் சென்றனர். மயக்கம் தெளிந்து உணர்வு வர சுமார் 70 நிமிடம் பிடித்தனவாம்.

அலிப்பூர் சிறையில் நடந்த இந்த அமளிச் செய்தி வங்கமெங்கும் பரவியது. சர்க்கார் சிறு சச்சரவு நடைபெற்றது என அறிக்கை வெளியிட்டனர். சர்க்காரின் போக்குக்கு கண்டனங்கள் கிளம்பின. சுபாஷை அடிக்க எந்த அதிகாரி உத்திரவு தந்தனரோ, எந்தப் பட்டாணியர்கள் மிருகத்தனமாக அடித்தார்களோ அந்தப் பட்

—ணியர்களுக்கும் அதிகாரிகளுக்கும் வங்க மக்கள் சரியான பாடம் கற்பித்தார்கள்.

கல்கத்தா நகரசபை மேயர் தேர்தல் வந்தது. வங்க காங்கிரஸ் சுபாஷின் பெயரை உறுப்பினர் பத்திரத்தில் பதிவு செய்து அவரைத் தேர்தலில் நிற்கவைத்தனர். பெருவாரியான வோட்டுக்களால் சுபாஷ் வெற்றி பெற்றார். சிறை அதிகாரிகள் ஆணவத்திற்கு ஆளாகி, பட்டாணியர்கள் தாக்குதலுக்கு இலக்காகி, மாடிப்படிகளிலிருந்து உணர்வற்று கீழே விழுந்த சுபாஷ் மேயரானார். மிதவாதக் கட்சிப் பிரமுகர் தோல்வியடைந்தார். நீதியையும், ஜனநாயகத்தையும் அடிப்படையாகக் கொண்ட எந்த சர்க்காரும் இவ் வெற்றியைப் பார்த்து அவரை விடுதலை செய்திருக்கும். ஆனால் வங்க சர்க்கார் அப்படி நடந்து கொள்ளவில்லை.

## 8. கையில் அறுபட்ட மாலை...

ஒத்துழையாமை இயக்கம் மிக தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. தலைவர்களெல்லாம் கைதாகி விட்டார்கள். பண்டித மோதிலாலையும், ஜவாஹரையும், அவரது குடும்பத்தாரையும் கூட சர்க்கார் விட்டுவைக்கவில்லை. தலைவர்கள் இல்லாவிட்டால் இயக்கம் படுத்துவிடுமென்று சர்க்கார் எண்ணினார்கள். ஆனால் இதில் ஏமாற்றமே கண்டார்கள். இந்தியாவே கிராமம் கிராமமாக சட்ட மறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டனர். தேசமெங்கும் தியாக உணர்ச்சி கரைபுரண்டு ஓடிற்று.

இச் சமயத்தில் சுபாஷின் தண்டனைக் காலம் முடிவடைந்தது. சுபாஷ் 1930 டிசம்பரில் விடுதலையானார். சுபாஷ் விடுதலையாகி வெளிவரும் சமயம், பக்கத்தில் இருக்கும் மால்தா கிராமத்திற்கு சுபாஷை வரும்படி அழைத்து சிறந்த வரவேற்பு ஏற்பாடுகள் செய்திருந்தனர். சுபாஷ் இந்த அழைப்பை ஏற்றார். அலிப்பூர் ஜில்லா அதிகாரிகளுக்கு இச் செய்தி எட்டியது. உடனே அவர்கள் சுபாஷை அக் கிராமத்திற்குப் போகக்கூடாதென தடை உத்திரவு விதித்தனர். மால்தா கிராமத்திற்கு சுபாஷ் வரப்போகிறார் எனப் பக்கத்துக் கிராமங்களிலிருந்தெல்லாம் மக்கள் திரள் திரளாகக் கூடினர். சுபாஷ் கிராம மக்கள் அழைப்பை ஏற்று சர்க்கார் கட்டளையை மீறுவது என முடிவு செய்தார். 1931 ஜனவரி 12-ம் தேதி தடை உத்திரவை மீறி சுபாஷ் மால்தாவுக்குள் நுழைந்தார். உடனே அவரைக் கைது செய்து ஒரு வாரம் காவல் தண்டனை விதித்து, 19-ம் தேதி விடுதலை செய்தனர். 20-ம் தேதி கல்கத்தா வந்து சேர்ந்தார்.

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26-ம் தேதி சுதந்திர நாளாகக் கொண்டாடுவது என்று ஏற்கெனவே ஏற்பாடாகி இருந்தது. அதன்படி மக்கள் 26-ம் தேதியை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவது என்று ஏற்பாடாகியது. கல்-

கத்தா மேயராகிய சுபாஷை வரவேற்று ஊர்வலமாக அழைத்துச் செல்வது என்றும் அன்று மாலை மாபெரும் கூட்டத்தில் சுபாஷ் பேசுவது என்றும் ஏற்பாடாகி இருந்தது.

ஜனவரி 26-ம் தேதி கல்கத்தாவே இந்திரலோகம் போன்று அலங்கரிக்கப்பட்டு இருந்தது. எங்கு பார்க்கினும் மூவர்ணக் கொடிகளின் காட்சியும் விளக்கொளிகளின் பிரகாசமும் காணப்பட்டன. நகரசபை சிப்பந்திகள் புடைசூழ மக்கள் வெள்ளம்போல் பின்தொடர, வாத்திய கோஷங்கள் ஒரு புறம், 'மகாத்மாவுக்கு ஜே! காங்கிரசுக்கு ஜே! சுபாஷுக்கு ஜே!' என்ற கோஷங்கள் வானைப் பிளக்க சுபாஷின் ஊர்வலம் சென்றது. ஊர்வலம் பாதி வழியில் வரும்பொழுது திடீரென சில போலீஸார் வந்து ஊர்வலத்தைக் கலைக்கவேண்டுமெனக் கூறினர். ஊர்வலத்தினருக்கும் சுபாஷுக்கும் இது புரியவில்லை. சுபாஷ் போலீஸ் அதிகாரிகளைத் தம்மிடம் அனுப்பும்படி வேண்டினார். இதற்குள் போலீசார் தொண்டர்கள் மீது தடி கொண்டு தாக்க ஆரம்பித்தனர். போலீஸார் கண்மூடித்தனமாகத் தாக்கினர். சுபாஷுக்கு இதைக் காணச் சகிக்கவில்லை. உடனே சுபாஷ் போலீஸ் தடியடி பிரயோகத்தினிடை நுழைந்தார். கூட்டத்தினரும் பொறுமை இழந்தனர்.

ஊர்வலத்தில் கூட்டத்தினருக்கும் போலீஸாருக்கும் கைகலப்பு வலுத்தது. மேலும் போலீஸ் படை வந்து குவிந்தவண்ணம் இருந்தது. தொண்டர் பலரின் மண்டைகள் உடைபட்டு கீழே விழுந்து கிடந்தனர். அத்தொண்டர்களின் நடுவில், ஒரு கையில் அறுபட்டிருந்த பூமாலையுடன் சுபாஷும் விழுந்து கிடந்தார். கல்கத்தா மேயர் சுபாஷ் என்றும் பாராமல் போலீசார் அவரை மிருகத்தனமாகத் தாக்கியிருந்தனர்.

சுபாஷின்மீது 147-வது பிரிவுப்படி வழக்கு தொடரப்பட்டு ஜனவரி 27-ம் தேதி 6 மாத தண்டனை விதித்தார்கள். தலைவர்கள் எல்லாம் உள்ளே இருக்கும்போது சுபாஷ் மட்டும் ஏன் வெளியில் இருப்பது என நினைத்தது அந்தப் பொல்லாத வங்க சர்க்கார்.

# 9. நல்ல நேரமும் பொல்லாத செய்தியும்

ஒத்துழையாமை இயக்கம் முழு வேகத்தில் நடந்துகொண்டிருந்த போது, சர்க்காருக்கும் காங்கிரசுக்கும் ஒரு சமரசத்தை ஏற்படுத்த சமரசத் தூதர்களான டாக்டர் சர் சாப்ருவும், ஜெயகரும் எவ்வளவோ முயன்றார்கள். முயற்சி பயனடையவில்லை ஸ்ரீ ஹோரஸ் அலெக்ஸாண்டர் என்பவர், வைஸ்ராய் - காந்திஜிக்கு இடையே பலமுறை தூது சென்று சமரசம் செய்ய முயன்றார். இதற்கும் சர்க்கார் விட்டுக் கொடுக்கவில்லை. ஒருபுறம் சமரசத்தில் நாட்டங் கொண்டவராகவும், அதே சமயத்தில் அடக்கு முறையில் முழு நம்பிக்கையையும் வைத்திருந்தார் வைஸ்ராய் இர்வின். அத்துடன் நில்லாது இந்தியாவின் ஒப்பற்ற தலைவர்களை சிறையில் அடைத்துவிட்டு, சில காங்கிரஸ் விரோதிகளையும், சமஸ்தானாதிபதிகளையும் இந்தியாவின் பிரதிநிதிகள் எனத் தேர்ந்து 1930 நவம்பரில் வட்டமேஜை மகாநாட்டை லண்டனில் நடத்தினார்.

லண்டனில் வட்டமேஜை மாநாடு துவக்கப்பட்டது. மகாநாட்டில் விவாதங்கள் நடந்தன. பெடரேஷன் முறையில் சட்டசபைகளை நிறுவுவதென்றும், கொள்கையளவில் சட்டசபைக்கு அதிகாரம் உண்டு எனவும், வெளி நாட்டு உறவும், பாதுகாப்பும் பிரிட்டிஷ் சர்க்கார் பிடியிலேயே இருக்கும் எனவும், வைஸ்ராய்க்கு விசேஷ அதிகாரம் உண்டு எனவும் பிரிட்டிஷ் பிரதமர் கூறினார். இதனால் பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் அப்படியே இருந்துவரும் என்பதும் வட்டமேஜை ஒரு கண் துடைப்பு வேலை என்பதும் விளங்கிற்று.

வட்டமேஜை மாநாட்டின் முடிவுகள் வெளியானதும் 1931 ஜனவரி 21-ம் தேதி அலகாபாத்தில் காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டம் ராஜன் பாபு தலைமையில் கூடியது. காரியக் கமிட்டியில் வட்டமேஜை மாநாட்டை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும், உண்மைத் தலைவர்களை

சிறையில் அடைத்துவிட்டு நடத்திய மாநாடு மாநாடே அல்ல என்று தீர்மானித்தார்கள். முழுச் சுதந்திரத்திற்காக ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்றும் தீர்மானித்தது. உடல் நிலை கெட்டு விட்டதென்று எண்ணி அப்பொழுதுதான் விடுதலை அடைந்த பண்டித மோதிலால் நேருவும் இக் கூட்டத்திற்கு வந்து முழுப் பங்கு எடுத்துக் கொண்டார்.

பின்னர் காரியக் கமிட்டி தீர்மானித்த மேற்படி தீர்மானங்களை வெளியிடுவதா, அல்லது சிறிது நாட்கள் சென்றதும் வெளியிடுவதா என்ற விவாதம் நடந்து காரியக் கமிட்டி தீர்மானங்களை ஒரு குறிப்பிட்ட நாள்வரை வெளியிடுவதில்லை என்று கூறிற்று. வட்ட மேஜை மாநாட்டிற்காக லண்டன் சென்றிருந்த சர் சாப்ரூவும் கனம் சீனிவாச சாஸ்திரியும், "தாங்கள் இந்தியா வரும் வரை, வட்ட மேஜை மாநாட்டைப் பற்றியோ, பிரதம மந்திரி பேசியதைப் பற்றியோ காரியக் கமிட்டி எவ்வித முடிவும் செய்தல் வேண்டாம்," என ஒரு தந்தி கொடுத்தனர்.

சர்க்கார் காரியக் கமிட்டியின் முடிவை எப்படியோ அறிந்திருந்தார்கள். அடக்குமுறை முழு வேகத்தில் இருந்தது. ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்த முடியவில்லை. காரியக் கமிட்டியின் தீர்மானம் வெளியானால் இயக்கம் இன்னும் வலிமை பெறும். இதற்காக வைஸ்ராய் ஒரு வழி கண்டு பிடித்தார், அதாவது காங்கிரஸ்மீது இருந்த தடையை நீக்கி இதர காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினர்களை விடுவிப்பதாக அறிக்கை வெளியிட்டார். மகாத்மா காந்தியை விடுதலை செய்தார். அதோடு 1930 ஜனவரி முதல் தேதிக்குப் பிறகு கைதானவர்களுக்கெல்லாம் விடுதலை கிடைத்தது.

ஜனவரி 26-ம் தேதிக்குள் தலைவர்களெல்லாம் விடுதலையானார்கள். இதற்குள் பண்டித மோதிலாலின் தேக நிலை மோசமாகிவிட்டது. ஜனவரி 31-ம் தேதியன்று காரியக் கமிட்டி அலகாபாத்தில் பண்டித மோதிலால் நேருவின் மாளிகையில் கூடியது. "ஒத்துழையாமை இயக்கம் கைவிடப்பட்டதாக தேசத்தில் ஒரு தப்பான எண்ணம் பரவி இருக்கிறது, அம்மாதிரியான முடிவு ஒன்றும் ஏற்பட



வில்லை" என ஒரு அறிக்கை வெளியிட்டது காரியக் கமிட்டி.

இந்த நேரத்தில் ஒரு பொல்லாத செய்தி நாட்டிற்குக் [illegible]த்தது. குபேர செல்வத்தையும் நாட்டின் விடுதலைக்காக அர்ப்பணித்து நின்ற அண்ணல் மோதிலால் நேரு பிப்ரவரி 6-ம் தேதி இந்திய மக்களை விட்டுப் பிரிந்தார். ஒரு பக்கம் ராஜீய நெருக்கடி, மற்றொரு பக்கம் இம் மாபெரும் நட்டம். மகன் ஜவாஹர்லால் நேருவும் மகாத்மாவும் விவரிக்க இய[illegible]த துக்கத்தில் ஆழ்ந்திருந்தார்கள். பண்டித மோதி[illegible]ப்பதற்குச் சிறிது நேரத்திற்கு முன்னால், "இந்தி[illegible]தியை இந்த சுயராஜ்ய பவனத்திலேயே தீர்மானம் செய்யுங்கள், நான் உயிருடன் இருக்கும்பொழுதே இதைச் செய்து முடியுங்கள்..." என்பன போன்ற பல வீர உரை[illegible] புகன்றார்.

மோதிலாலின் பிரிவைக் குறித்துக் கூறுகையில் [illegible]த்மா, "இந்தியா சுதந்திரமடைவதற்கு முன்பே அவ[illegible]வி பிரிந்தது. சுதந்திர வேட்கை கொண்டிருந்த அவ[illegible]ய ஆத்மா, இந்தியா முழு விடுதலை பெற்ற நாளில் சாந்திபெறும்" எனக் குறிப்பிட்டார்.

[illegible] மறுப்பு கண்டு சர்க்கார் நடுங்குகிறது என்று மக்கள் அறிந்து மகிழ்ச்சி கொண்டிருக்கும் வேளையில், [illegible]ஏற்பட்டுவிடும் என்ற நல்ல சமயத்தில் இந்தப் பொ[illegible]த செய்தி இந்தியாவையே கண்ணீர் விட்டுக் [illegible]படி செய்தது.

V2:5'27N47

# 10. காந்தி - இர்வின் ஒப்பந்தமும் எதிர்ப்பும்

பண்டித மோதிலாலின் மரணத்தால் தடைப்பட்டிருந்த காரியக் கமிட்டி கூட்டம் பிப்ரவரி 13-ம் தேதியன்று கூடியது. இதற்குள் லண்டனிலிருந்து டாக்டர் சர் சாப்ருவும், சாஸ்திரியும் வந்துவிட்டனர். சாப்ரு காரியக் கமிட்டிக் கூட்டத்தில் மகாத்மா, வைஸ்ராய் இர்வினைச் சந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். காந்தி-இர்வின் சந்திப்பு மிகவும் அவசியமானது என்றும் சாப்ரு கூறினார். மகாத்மா அதற்கு இணங்கி 14-ம் தேதி வைஸ்ராய்க்கு ஒரு கடிதம் எழுதினார். வைஸ்ராயும் சந்திப்பதாக மகாத்மாவுக்கு ஒரு பதில் தந்தி அனுப்பினார். அதன்படி காரியக் கமிட்டி உறுப்பினர்களும், மகாத்மாவும் 17-ம் தேதி டில்லிக்குப் புறப்பட்டார்கள்.

மகாத்மா வைஸ்ராயுடன் 3 நாட்கள் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். போலீஸார் அளவு கடந்து நடந்ததற்கு விசாரணை நடத்தவேண்டும், பிறநாட்டுத் துணிக் கடைகளை மறியல் செய்ய அனுமதிக்க வேண்டும், அவசரச் சட்டங்களைத் திரும்பப்பெறவேண்டும், பறிமுதல் செய்த சொத்துக்களை எல்லாம் மீண்டும் தரவேண்டும், வேலையினின்று [illegible] விட்ட அதிகாரிகளையும், ராஜினாமா செய்த அதிகாரிகளையும் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும், ராஜீயக் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்ய[illegible] என்ற கோரிக்கைகளை யெல்லாம் மகாத்மா [illegible] கூறினார். 19-ம் தேதி சர்க்கார் இக் கோரிக்[illegible] பதாக ஒரு அறிக்கை வெளியானது. இ[illegible] யும் மகாத்மாவும் பலதடவைச் சந்தித்[illegible]. [illegible] பற்றியும் ஒரு சமரச திட்டம் இருவருக்குமிடை[illegible] டது. கள்ளுக்கடை மறியலுக்கும் ஒரு [illegible] வகுக்கும் படி வைஸ்ராய் மகாத்மாவைக் கேட்டுக் கொண்டார்.



மார்ச்சு 5-ம் தேதி காந்தி - இர்வின் ஒப்பந்தம் கையெழுத்தாகியது. அதன்படி ஒத்துழையாமை இயக்கம் நிறுத்தப்பட்டது. பல ராஜீயக் கைதிகள் விடுதலையானார்கள். சுபாஷும் விடுதலை ஆனார்.

காந்தி-இர்வின் ஒப்பந்தத்தை சிலர் வரவேற்றார்கள். சிலர் வெறுத்தார்கள். மகாத்மா அதிகப்படியாக விட்டுக் கொடுத்துவிட்டார் எனக் கண்டித்தார்கள். ராஜீயக் கைதிகள் விடுதலை சம்பந்தமாகச் செய்த உடன்பாடு பண்டித நேருவுக்கும் பிடிக்கவில்லை. சர்தார் பட்டேலுக்கும் சில ஒப்பந்த ஷரத்துக்கள் பிடிக்கவில்லை. சிறையிலிருந்து வெளிவந்த சுபாஷ் ஒப்பந்தத்தைக் 'கிழித்தெறிய வேண்டும்' என்று கூறினார். இச் சந்தர்ப்பத்தில் மற்றொரு சம்பவமும் நடந்தது.

1928-ல் சைமன் கமிஷன் பாஞ்சாலத்தில் சுற்றுப் பிரயாணம் செய்தது. லாலா லஜபதிராய் கருப்புக்கொடி ஊர்வலம் ஒன்றை நடத்தினார். "சைமனே திரும்பிப் போ" என்ற கோஷத்துடன் பிரம்மாண்டமான ஊர்வலம் நடந்தது. பாஞ்சால போலீஸ் கமிஷனர் ஸாண்டர்ஸ் என்பவர் கண்மூடித்தனமாகக் கூட்டத்தில் தடியடிப் பிரயோகம் செய்தார். லஜபதிராய் தடியடியால் தாக்குண்டார். தடியடியால் தாக்குண்ட லஜபதிராய் அதே படுக்கையாய் படுத்து உயிர் நீத்தார். லஜபதிராய் மரணத்திற்குக் காரணம் தடியடிதான் என டாக்டர்கள் கூறினார்கள். இதற்கு ஸாண்டர்ஸே காரணம் எனப் பலரும் கூறினார்கள். பாஞ்சால வாலிபர்கள் ஸாண்டர்ஸைப் பழிவாங்க நினைத்து 1928 செப்டம்பர் 13-ம் தேதி ஸாண்டர்ஸ் சுட்டுக் கொல்லப்பட்டார். லாகூரில் பெரிய சதி இயக்கம் இருப்பதாகச் சர்க்கார் நினைத்தது. இந்த அலறலை அடக்குவதற்கு முன்பே, டில்லி சட்டசபையில் வெடிகுண்டு விழுந்தது.

சர்க்கார் பயங்கர [illegible]ரைப் பிடித்து பலி தீர்க்க விரைந்தார்கள். [illegible]சிங், ராஜகுரு, சுகதேவ், பதுகேசுவர் தத் ஆகியோரும் மற்[illegible] பலரும் கைதியானார்கள். இந்தி[illegible]வின் கவனத்தையே [illegible]க்க வகையில் இவர்கள் விசாரணை நடந்தது—ஜதீந்[illegible]நாத் தாஸ் சிறை அதிகாரிக[illegible] கொடுமைப்படுத்திய[illegible] 61-நாள்

110523

உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்தார். பகவத்சிங், ராஜ
குரு, சுகதேவ் ஆகியோருக்கு 1931-ல் தூக்குதண்டனை
வழங்கப்பட்டது. இந்த இளம் வீரர்களின் தூக்குதண்
டனையை ரத்து செய்யவேண்டி மகாத்மா எவ்வளவோ
முயன்றார். ஒன்றும் பயனளிப்பதாக இல்லை.

அடுத்த காங்கிரஸ் 29-ம் தேதி கராச்சியில் சர்தார்
பட்டேல் தலைமையில் கூடுவதாக இருந்தது. கராச்சி காங்
கிரஸுக்குச் சிறந்த ஏற்பாடுகள் நடந்தன. காந்தி-இர்வின்
ஒப்பந்தத்தை இம்மாநாட்டில் எதிர்ப்பதற்கே பல வாலிபர்
கள் வெளியூர்களிலிருந்து வந்திருந்தனர். காந்தி-இர்வின்
ஒப்பந்தத்தை காங்கிரஸ் ஏற்காதபடி செய்யவேண்டும்
என்பது இவர்கள் கட்சி. இவர்களுள் சுபாஷும் ஒருவர்.
வங்கத்திலிருந்து வந்த பல பிரதிநிதிகளும் இக்கருத்துட
னேயே வந்தார்கள். இடையில் 25-ம் தேதியே பகவத்சிங்
முதலியவர்களைத் தூக்கிலிட்டார்கள். பகவத்சிங் விடு
தலைக்கு, மகாத்மா சரியான நடவடிக்கை எடுக்கவில்லை
என்ற தப்பெண்ணம் எப்படியோ காங்கிரஸ்காரர்களி
டையே பரவி இருந்தது. இதனால் காங்கிரஸ் நடைபெறு
வதற்கு முன்பே பகவத்சிங் முதலியவர்களைத் தூக்கிலிட்டு
விட்டால் மகாத்மாவின் செல்வாக்கைக் குறைக்கலாம்
என்று தப்புக் கணக்கு போட்டிருந்தது பாஞ்சால சர்க்
கார்.

கராச்சி காங்கிரஸுக்கு மகாத்மாவும் பட்டேலும்
சென்றார்கள். காந்தி-இர்வின் ஒப்பந்தத்தை எதிர்க்கும்
பலர் காந்திஜி முன் கருப்புக் கொடிகளுடன் ஆரவாரம்
செய்தார்கள். காந்திஜி காங்கிரஸைக் காட்டிக் கொடுத்து
விட்டாரென்றும், பகவத்சிங்கின் கொலைகாரர் என்றும்
தூற்றினார்கள். காந்திஜியை வெளிவர வேண்டாமென்று
சிலர் தடுத்தனர். மகாத்மா இந்த யோசனையை ஏற்க
வில்லை. ஆரவாரம் செய்தவர்களை அடக்க ஜவாஹர் எடுத்
துக் கொண்ட முயற்சி சிறிதல்ல. மகாத்மா காந்தி அவர்
கள் நின்ற இடத்தை நோக்கியே நடந்தார். ஆனால் காந்திஜி
யைக் கண்டதும் பெட்டிப் பாம்பு போலாயினர்.

காங்கிரஸ் கூடுவதற்கு 2 நாட்களுக்கு முன்பு கராச்சி,
காங்கிரஸ் மைதானத்திலேயே நவஜவான் மாநாடு சுபாஷ்



போஸின் தலைமையில் கூடியது. சுபாஷின் மாநாட்டுப்
பேச்சு, கேட்ட மக்கள் அனைவரையும் திடுக்கிட
வைத்தது.

"காந்திஜியும், வைஸ்ராயும் செய்துகொண்ட
ஒப்பந்தம் ஏற்கெனவே கூறியபடி கிழித்தெறிய
வேண்டியதுதான். காங்கிரஸ் எவ்வளவு தூரம் மித
வாத ஸ்தாபனமாக ஆகிவிட்டது என்பதையே இவ்
வொப்பந்தம் காட்டுகிறது. இவ் வொப்பந்தப்படி
2-வது வட்டமேஜை மாநாடு கூடப்போகிறதாம். இதி
லும் காங்கிரஸ் இரண்டாவது தோல்வியைப் பெறு
வது நிச்சயம்.

தனிப்பட்ட ஆளான காந்திஜியிடம் காங்கிரஸ்
சிக்கியிருப்பதைக் கண்டு நான் பரிதாபப் படுகிறேன்.
......வாலிபர்கள் அனைவரும் காங்கிரஸின் இவ்வொப்
பந்தத்தை எதிர்த்தாக வேண்டும்......"

சுபாஷ் இன்னும் கடுமையான சொற்களை எல்லாம்
உபயோகித்து ஒப்பந்தத்தை எதிர்த்தார்.

கராச்சி காங்கிரஸ் 29-ம் தேதி கூடியது. சிறையி
லிருந்து விடுதலையான தலைவர்களெல்லாம் மாநாட்டுக்கு
வந்திருந்தார்கள். முதல் நாளன்று பகவத்சிங், சுகதேவ்,
ராஜகுரு ஆகியோரின் மரணத்துக்கு இரக்கம் தெரிவிக்
கும் தீர்மானம் வந்தது. தீர்மானத்தைப் பண்டித நேருவே
கொண்டு வந்தார். பண்டித நேரு தீர்மானத்தைப் படிக்
கும் போது மூன்றுமுறை படிப்பதை நிறுத்தவேண்டியிருந்
தது. துயரம் தொண்டையை அடைத்தது. குழந்தையைப்
போல விம்மி விம்மி அழுதார். ஏன், மாநாட்டுப் பந்தலில்
கூடியிருந்த ஆண் பெண் அனைவருமே அழுதனர். பிறந்து
வளர்ந்த மண்ணுக்கு அந்தத் தியாகிகள் தங்கள் உயிர்
களையே அர்ப்பணித்து விட்டார்களென்றால், அதே மண்
ணில் வாழும் மற்றவர்கள் அவர்களை நினைத்துக் கண்ணீர்
விட்டதில் என்ன வியப்பு.

நேருஜி அன்று பேசிய பேச்சு மயிர்க்கூச்செரியச்
செய்தது. துக்கமும் சர்க்காருக்கு எச்சரிக்கையும் கலந்
திருந்தது அப்பேச்சில். நேரு கொண்டுவந்த தீர்மானத்தில்

சுபாஷ் கட்சியினர் ஒரு திருத்தம் கொண்டு வந்தனர். அதாவது "அவர்கள் செய்கையை காங்கிரஸ் ஏற்காவிட்டாலும்" என்றிருக்கும் சொற்களை நீக்கிவிடுமாறு கூறினர். திருத்தங்கள் தோல்வி அடைந்தன. இதில் சுபாஷ் கட்சியினருக்கு மிகுந்த கோபம்.

மறுநாள் காந்தி-இர்வின் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளும் தீர்மானத்தையும் பண்டித நேருவே கொண்டுவந்தார். அத்துடன் காங்கிரஸின் பிரதிநிதியாக சர்க்கார் கூட்டும் வட்டமேஜை மாநாட்டுக்கு மகாத்மா செல்லவேண்டும் என்றும், அவசியமானால் மகாத்மாவுக்குத் துணையாக காரியக் கமிட்டி வேறு உறுப்பினர்களையும் அனுப்பும் என்று ஜவாஹர் இத் தீர்மானத்தில் கூறினார்.

ஜவாஹர் இத் தீர்மானத்தைக் கொண்டுவந்து மிக அழகான ஒரு சொற்பொழிவு ஆற்றினார். அன்றைய நிலையில் ஒப்பந்தத்தை ஏற்கத்தான் வேண்டுமென்பதை அழகாக எடுத்துக் கூறினார். தனிப்பட்ட முறையில் ஜவாஹரும் தீர்மானத்தை எதிர்ப்பவர்தான். ஆய்வுக் குழுவில் இத்தீர்மானம் வரும்போது ஜவாஹர் எதிர்த்துப் பேசினார். ஆனால் ஒப்பந்தத்தை ஆதரித்தவர்கள் கூறிய காரணங்கள் கவர்ச்சியாக இருந்தது.

சுபாஷ் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளக் கூடாது எனப் பேசினார். சுபாஷ் கூறிய காரணங்கள் சரியாகத்தான் இருந்தன. ஆனால் சபை ஏற்கவில்லை. 4000 பேர் கூடிய சபையில் சுபாஷுக்கு 15 வோட்டுகள்தான் கிடைத்தன.

கராச்சி காங்கிரஸுக்குப் பிறகு சுபாஷுக்கும் காரியக் கமிட்டி உறுப்பினர்களுக்கும் இருந்த கருத்துவேற்றுமை வளர்ந்து விட்டது. சுபாஷ் காரியக் கமிட்டி மீதும், காந்திஜி மீதும் எதிர்ப்பிரசாரத்தைச் செய்து வந்தார். ஏற்கெனவே சிலர் ஒப்பந்தத்தை எதிர்த்து வந்தார்கள். அவர்களெல்லாம் சுபாஷைத் தலைவராகக் கொண்டவர்கள். சட்ட மறுப்பு இயக்கத்தைக் காங்கிரஸ் நிறுத்தியது தவறு என வங்கம் கிளர்ச்சி செய்தது.

## 11. அஞ்ஞாத வாசம் !

கராச்சி காங்கிரஸுக்குப் பிறகு நடந்த சம்பவங்கள் வேறுவிதமாக இருந்தன. காந்தி-இர்வின் ஒப்பந்தத்தைச் சர்க்கார் மெள்ள மீறத் துவங்கினார்கள். ஒப்பந்தத்தில் கூறி இருந்த வாக்குறுதிகள் எல்லாம் காற்றுவாக்கில் கைவிடப்பட்டன. இதைக் குறித்துக் காரியக் கமிட்டிக்கு ஏராளமான புகார்கள் வந்துகொண்டே இருந்தன. இச் சமயத்தில் இர்வின் இந்தியாவை விட்டுப் புறப்பட்டு விட்டார். லார்ட் வெலிங்டன் வைஸ்ராயானார்.

சர்க்கார் ஒப்பந்தத்தைக் கவுரவித்து நடக்கவில்லை என்பதை அறிந்த மகாத்மா, ஒப்பந்த விவரம் எல்லாவற்றையும் வெளியாக்கினார். மாகாணச் சர்க்கார்களுக்கும், வைஸ்ராய்க்கும் பல கடிதங்கள் எழுதினார். லார்ட் வெலிங்டன் இதற்கெல்லாம் செவி சாய்க்கவில்லை. இதற்குள் வட்டமேஜை மாநாட்டுக்கு அழைப்பு வந்தது. காங்கிரஸ் சார்பாக மகாத்மா ஒருவரே செல்வதென காரியக்கமிட்டி தீர்மானம் செய்தது. ஆனால் 'மகாத்மா லண்டனுக்குப் போக முடியாதென்றும், இதற்குக் காரணம் பழைய ஒப்பந்தத்தைக் கவுரவிக்க வில்லை எனவும் கூறினார். இதைக் குறித்து பிரிட்டிஷ் பிரதமருக்கும் தெரிவிக்கப்பட்டது.

லார்ட் வெலிங்டனுக்கு இதை அப்படியே விட்டுவிட மனமில்லை. தேசத்தில் மீண்டும் சட்டமறுப்பு இயக்கம் துவங்கிவிடும் என்பது வெலிங்டனுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே பழையபடியும் காந்திஜியைப் புனராலோசனை செய்யும்படிக் கூறினார். காந்திஜி முயன்றார். பல மாதங்கள் வைஸ்ராயுடன் கடிதப் போக்குவரத்தும் பேட்டிகளும் நடைபெற்றன. சுதந்திரப் போராட்டம் மீண்டும் துவங்கிவிடுமோ என்று மக்கள் நினைத்தனர். தேசமே வியக்கும்படி 1931 ஆகஸ்ட் 15-ம் தேதி பிரத்தியேக ரெயிலில் சிம்லாவிலிருந்து பம்பாய்க்கு காந்திஜி வந்து, 23-ம் தேதி லண்டனுக்குப் பயணமானார்.

செப்டம்பர் மாதம் லண்டனில் வட்டமேஜை மாநாடு துவங்கியது. மகாத்மா இந்தியாவின் முழுச் சுதந்திரக் கோரிக்கையை எடுத்துப் பேசினார். கண் துடைப்புக்காக அழைத்த பிரிட்டிஷாருக்கு இக்கோரிக்கை வியப்பாகத் தோன்றியது. மாநாடு அனாவசியமாக நீடித்தது. டிசம்பர் முதல் தேதியன்று மாநாடு முறிந்ததாக பிரிட்டிஷ் சர்க்கார் அறிவித்தார்கள். மகாத்மா அன்று ஒரு சிறந்த விரிவுரையாற்றினார். பிரிட்டிஷ் சர்க்காருக்கும் காங்கிரஸுக்கும் சமரச முறிவு ஏற்பட்டு விட்டதாகக் கூறினார்.

> “ எந்த வழியில் இனி என் போக்கு போகுமென்பது எனக்கே தெரியவில்லை. அது எங்ஙனமிருந்தாலும் அதைக் குறித்து நான் கவலைப்படப்போவதில்லை. உங்களை விட்டு நான் பிரிகிறேன். உங்கள் கருத்தை ஏற்காமல் எதிர்த்துச் செல்லுகிறேன். என் இருதய பூர்வமான வந்தனங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்........”

மகாத்மா லண்டனில் இருந்தபோது இந்திய சர்க்கார் தமது பழைய சொரூபத்தைக் காட்டத்தொடங்கிவிட்டது எந்த அடக்கு முறையைக் கண்டித்து மகாத்மா வட்டமேஜை மாநாட்டுக்குப் போக மறுத்தாரோ, அதே அடக்கு முறையை சர்க்கார் இப்பொழுது கையாளத் துவங்கினர் ஐக்கிய மாகாணத்தில் பண்டித நேருவும் ஷேர்வாணியும் கைதானார்கள். எல்லைப்புறத்தில் கான் சகோதரர்கள் கைதானார்கள். சட்டமறுப்பு இயக்கம் மீண்டும் தலைகாட்டத் துவங்கியது. ஒரு புறம் சமரச நாடகத்தையும் ம புறம் அடக்குமுறை ஆட்சியையும் நடத்தினார்கள் என்பதைக் கண்டு மகாத்மா வருந்தினார். டிசம்பர் 28-ம் தேதி மகாத்மா பம்பாய் வந்து சேர்ந்தார்.

பம்பாயில் தலைவர்கள் எல்லாம் கூடி காந்திஜி லண்டன் சென்றிருந்த காலத்தில் இந்திய சர்க்கார் நடத்திய அடக்கு முறைகளை காந்திஜிக்குத் தெரிவித்தார்கள். நிலைமையைக் கவனிக்கவேண்டி காரியக் கமிட்டி கூடியது. சுபாஷுக்கு காரியக் கமிட்டி தனி அழைப்பு ஒன்று அனுப்பியது. ஏனெனில் லாகூர் காங்கிரஸுக்குப் பி... சுபாஷ் காரியக்



கமிட்டியின் உறுப்பினரல்ல. சுபாஷும் அழைப்பை ஏற்று பம்பாய் வந்தார்.

மகாத்மா காந்தி 29-ம் தேதி லார்ட் வெலிங்டனுக்கு ஒரு தந்தி கொடுத்து, ஐக்கிய மாகாணத்திலும், வங்கத்திலும், எல்லைப்புறத்திலும் அவசரச் சட்டங்கள் அமல் நடத்துவதின் அர்த்தமென்ன என்று கேட்டார். இதற்கு காங்கிரஸின் போக்கு சரியில்லை என பதில் கிடைத்தது. மீண்டும் மகாத்மா, பழையபடி சட்டமறுப்பு இயக்கத்தைத் துவக்கும்படி காரியக் கமிட்டிக்குத் தாம் சிபாரிசு செய்திருப்பதாகவும், அதன்படி காரியக் கமிட்டி தீர்மானம் செய்துவிட்டதாகவும் தந்தி அனுப்பினார். சட்டமறுப்பு இயக்கம் துவக்குவது என்பது அரசாங்கத்தை மிரட்டுவதாகும் என்றும், இதைச் சமாளிக்காமல் சர்க்கார் சும்மா இருந்து விடாதென்றும் தெரிவித்து தந்தி வந்தது.

ஒத்துழையாமை இயக்கம் துவங்கியதபடி சர்க்கார் விழிப்புடனிருந்தனர். தலைவர்கள் தம்தம் ஊருக்குச் சென்றவுடன் கைது செய்ய மறைவான உத்தரவுகள் பறந்தன. சுபாஷை மட்டும் ஜனவரி 4-ம் தேதி பம்பாயிலேயே கைது செய்துவிட்டார்கள். அதே நாளில் காங்கிரஸ் ஸ்தாபனங்கள்மீது தடையுத்தரவுகள் விதிக்கப்பட்டன. மகாத்மாவும் பட்டேலும் ஜனவரி 4-ம் தேதி அதிகாலை கைதானார்கள். கைதாகும் தொண்டர்கள் எண்ணிக்கை வளர்ந்தது.

பம்பாயில் கைதான சுபாஷை வங்கத்துக்கு அனுப்பவில்லை. பம்பாயிலேயே சிறை வைத்தார்கள். மாந்தாலே சிறையில் அவருக்குப் பரிசாகக் கிடைத்த காசநோய் அதிகமாகியது. அவரது தேக நிலையைப்பற்றி பலவிதமான பேச்சுகள் பரவின. முடிவில் அவரை விடுதலை செய்வதென்று முடிவு செய்தார்கள். ஆனால் அவர் ஐரோப்பாவுக்குச் சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ளலாமே தவிர இந்தியாவில் இருக்கக்கூடாதென தடை விதித்தார்கள். அப்பொழுது நோய்வாய்ப்பட்டிருந்த பெற்றோர்களைக்கூட பார்க்க இசைவு தரவில்லை. சுபாஷின் தேக நிலை அப்பொழுது நலமில்லையாதலால் அவரை ஐரோப்பாவுக்குச் செல்லும்படி பலர் வற்புறுத்தினார்கள். சுபாஷ் 1933 பிப்ரவரியில் ஐரோப்பாவுக்குச் சென்றார்.

## 12. மகாத்மாமீது வருத்தம்

சர்தார் வல்லபாயின் மூத்த சகோதரரும் டில்லி சட்ட
சபையின் தலைவராக இருந்தவரும், பெரும் தேச பக்தரு
மான வி. ஜே. பட்டேல் அப்பொழுது வியன்னுவில் இருந்
தார். 1930-ல் நடந்த சட்டமறுப்பு இயக்கத்தில் இவர்
சிறைபட்டு உடல்நிலை சீர்கெட்டிருந்தது. இவர் சுபா
ஷைப்போலவே சிகிச்சை பெற ஐரோப்பா சென்றிருந்தார்.
வியன்னுவில் வி. ஜே. பட்டேல் ஒரு தனி வீட்டில் தங்கி
இருந்தார். இது சுபாஷுக்குத் தெரியும். ஆகவே தாமும்
வியன்னு போகவிரும்பி அங்கு சென்ருர்.

சீதோஷ்ண நிலைமையின் மாற்றத்தாலும், சிறந்த
மருத்துவ உதவியாலும் சுபாஷின் தேகநிலைமை வரவர நல
மடைந்து வந்தது. சற்று வெளியில் உலவக்கூடிய வலிமை
யும் வந்தது. வி. ஜே. பட்டேலின் தேகநிலை வரவர நலம்
குறைந்து கொண்டுதான் வந்தது. சுபாஷ், பட்டேலுக்கு
அருகில் இருந்து அவருக்கு வேண்டிய பணிகளைச் செய்வதி
லேயே காலங்கழித்து வந்தார். பட்டேல், சுபாஷுக்கு எவ்
விதம் நன்றி செலுத்துவது என்று நினைத்தார்.

1932 மே மாதம் இந்தியாவிலிருந்து மகாத்மா ஒத்
துழையாமை இயக்கத்தைக் கைவிட்டுவிட்டதாக ஒரு
செய்தி வந்தது. இச் செய்தியைக் கேட்டு இருவரும் திடுக்
கிட்டனர். சுபாஷ் பம்பாயைவிட்டுப் புறப்படும் போது ஒத்
துழையாமை இயக்கம் அதிவேகத்தில் இருந்தது. வியன்னு
வில் இருக்கும்போது சுபாஷுக்கு இந்தியாவில் நடக்கும்
ஒத்துழையாமை இயக்கச் செய்திகள் அடிக்கடி கிடைக்
கும். சுபாஷ் அவைகளைக் கேட்டு இன்புறுவார்.
நோயுற்றிருந்த வி. ஜே. பட்டேலும் இந்தியாவில்
சுதந்திரப் போராட்டம் நடைபெறுவதைக் குறித்து மகிழ்
வார். ஆனல் ஒத்துழையாமை இயக்கம் நின்றுவிட்ட
செய்தியைக் கேட்டு இருவரும் சேர்ந்து, காந்திஜி ஒத்



துழையாமை இயக்கத்தை நிறுத்தியிருக்கக்கூடாது என்று
கருதி அதனை அறிக்கை மூலம் தெரிவித்தார்கள்.

"மகாத்மா அண்மையில் ஒத்துழையாமையை நிறுத்
தியதன் மூலம் செய்திருக்கும் காரியம் தனது தோல்வி
யைத் தானே ஒப்புக்கொள்வதற்குச் சமமாகும்.
ராஜீயத் தலைவர் என்ற முறையில் காந்திஜி நமக்கு
ஒரு தோல்வியாகவே விளங்குகிருர் என்பது எங்களின்
திடமான நம்பிக்கை"

" ஆகவே, காங்கிரஸைப் புதுப்பித்து அமைக்கும்
காலம் நெருங்கிவிட்டது. அதாவது புதுக் கொள்கையை
ஒரு புது முறையில் வகுத்து நடத்திவைக்க வேண்
டும். இதற்கு ஒரு புதுத் தலைவர் இருக்கவேண்டியது
அவசியம். காந்திஜி நீண்டகாலமாக ஒரு கொள்கை
யைக் கடைப்பிடித்து வருகிருர். அந்தக் கொள்கையி
லிருந்து பிறழ்ந்து அவர் ஒரு போராட்டத்தை நடத்த
வேண்டுமென நாம் எதிர்பார்ப்பது மிகவும் தவருகும்.
ஆகவே காங்கிரஸையே புதுப்பித்து அமைத்துவிட்
டால், தேசத்திற்கே ஒரு பெரும் நன்மையாகும். இதைச்
செய்ய மறுத்தால் அல்லது தவறினல் காங்கிரஸுக்
குள்ளேயே ஒரு புதுக்கட்சி தோன்றும். தீவிர இளங்
களே இக் கட்சியை உருவாக்குவார்கள்"

இவ் வறிக்கை வெளியான சில நாட்களுக்குப் பிறகு
சுபாஷுக்கு மற்றொரு பெரிய அதிர்ச்சி ஏற்பட்டது. அதா
வது வி. ஜே. பட்டேல் அக்டோபர் 22-ம் நாள் வியன்னுவில்
காலமானர். அவரது சடலம் இந்தியாவுக்குக் கப்பல்
மூலம் கொண்டுவரப்பட்டது. "தேசபக்தரின் சடலத்தை
அனுப்புகிறேன்" என்று சுபாஷ் மகாத்மாவுக்குத் தந்தி
கொடுத்தார்.

அப்பொழுதெல்லாம் இந்தியாவைக் குறித்து வெளி
நாடுகளில் மிக இழிவான பிரசாரங்கள் நடைபெற்றன.
இந்தியர் அநாகரிகர், காட்டுமிராண்டிகள் என்றெல்லாம்
கூறப்பட்டன. சுபாஷ் சமயம் வாய்த்தபோதெல்லாம் இவை
தவறு என்று எடுத்துக்காட்டி வந்தார். ஆனல் பிரிட்டிஷார்
பிரசாரம் வேகமாக இருந்தது. இந்தப் பொய்ப் பிரசாரங்

33

களை அடக்குவதற்கு வித்தல்பாய் பட்டேலும் பலமுறை நினைத்ததுண்டு.

வி. ஜே. பட்டேல் பிரிட்டிஷாரின் பொய்ப் பிரசாரத்தை அம்பலப்படுத்துவது என ஏற்பாடு செய்து, சில திட்டங்களை வகுத்து, அதனை நிறைவேற்றிவைக்க ஒரு லட்ச ரூபாய் நன்கொடை தந்து, அந் நன்கொடை சுபாஷின் மேற்பார்வையிலேயே செலவழிக்க வேண்டும் என்றும் ஓர் உயில் எழுதிவைத்தார். இத்தகைய தேசபக்தரை இழந்ததைக் குறித்து சுபாஷ் மிகவும் மனவேதனைப்பட்டார். சுபாஷின் நிலை திக்கு தெரியாத காட்டில் கண்களைக் கட்டி விடப்பட்டவர் மாதிரி ஆயிற்று.

## 13. தாயின் மணிக்கொடி

வித்தல்பாய் இறந்த பிறகு சுபாஷுக்கு வியன்னாவில் பொழுதை ஓட்ட விருப்பமில்லை. ஜெர்மனிக்குப் போகக் கூடாது என்று சர்க்கார் தடைவிதித்திருந்தார்களே ஒழிய மற்ற இடங்களுக்குப் போக அவருக்குத் தடை இல்லை. [illegible]வே அவர் பிரான்ஸ், ஸ்விட்ஸர்லாந்து, இத்தாலி முதலிய நாடுகளுக்கெல்லாம் சென்றார். ரோமாபுரியில் சில [illegible]கள் தங்கியிருந்தபோது, அங்கு பாஸிஸ வாலிபப்படை[illegible] அணிவகுப்புகள் பலவற்றைப் பார்த்தார். யூகோஸ்[illegible]பாவுக்கு அவர் சென்றபோது, பெல்கிரேடில் வெளி[illegible]ம் "பொலிடிகா" என்னும் செய்தித்தாள் சுபாஷைப் [illegible]டிக்கண்டு வருமாறு ஒரு நிருபரை அனுப்பி இருந்தது. [illegible]த நிருபர், ராம்பூர் நவாப் ஒருவர் சிறிது காலத்துக்குமுன் [illegible]ந்ததாகவும், அவர் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி நீடித்[illegible]க்க வேண்டுமென காரண காரியங்களுடன் சொல்லிய[illegible] கூறினார். சுபாஷுக்கு உடனே கோபம் வந்து [illegible]ட்டது. நவாபின் கூற்றுக்கு, சுபாஷ் புள்ளி விவரங்களு[illegible] மறுத்து, பிரிட்டிஷ் ஆட்சி கொடுமைப் படுத்தும் [illegible]த்தையும் கூறி, பேட்டி கொடுத்தார். இச் செய்தி அன்று மாலை வெளியாகிவிடும் என்பது சுபாஷின் எண்ணம். ஆனால் அன்று மாலை இதழில் ஒரு வரிகூட வரவில்லை. விசாரித்ததில் பெல்கிரேடில் உள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகருக்கு சுபாஷின் பேட்டி தெரிந்து விட்டதாகவும், அவர் செய்த சூழ்ச்சியால்தான் செய்தி வெளிவரவில்லை எனவும் தெரிந்தது. அதே சமயத்தில் அந்த ஸ்தானிகர் காரியாலயம் ராய்ட்டர் நிருபரைத் தேடிப் பிடித்து, பெல்கிரேடில் சுபாஷை மதிப்பாரில்லை, அதற்குக் காரணம் அவர் அங்குள்ள அதிகாரிகள் சிலரைத் துச்சமாகப் பேசியதுதான் எனப் பலவாறு செய்திகளைத் திரித்துக் கூறி வெளியிடச் சொன்னார்கள். சுபாஷ் உடனே இதற்கு ஒரு மறுப்பு எழுதி "பொலிட்டிகா" இதழாசிரியரைக் கண்டு பேசினார். சுபா

ஷின் இம்மறுப்பு வெளியாகியதும் பிரிட்டிஷ் ஸ்தானிகர்
காரியாலயப் புரட்டும் வெளிப்பட்டது.

சுபாஷ் பெல்கிரேட் பிரயாணத்தை முடித்து மீண்டும்
வியன்னு வந்தபோது அவரது தந்தையின் உடல் நிலை
குன்றியிருப்பதாக ஒரு தந்தி காத்திருந்தது. உடனே
சுபாஷ் 1934 டிசம்பர் மாதம் விமான மூலம் கராச்சி வந்து
சேர்ந்தார். கராச்சி சேர்ந்ததும் தந்தை காலமான செய்தி
கிடைத்தது. உடனே கல்கத்தா வந்தார். கல்கத்தாவில்
இவரை வரவேற்க உறவினர், பொது மக்கட் கூட்டம்,
போலீஸ் ஆகியவர்கள் காத்திருந்தனர். சுபாஷ் வ
திறங்கியதும் போலீசார் அவரிடம், அவர் தமது
வீட்டைவிட்டு வெளியே வருதல் கூடாதென்றும், யாரை
யும் வரவழைத்து எதையும் பேசுதல் கூடாதெனவும்,
கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளுதல் ஆகா
என்றும் குறிப்பிடப்பட்ட கட்டளையைத் த
னர். போஸ் தனது தந்தையைக் காண முடியவில்லை
ஆனால் ஈமக் கடன் காரியங்களில்தான் கலந்து கொள்ள
முடிந்தது.

சுபாஷின் உடல்நிலை பருவ நிலையின் காரணமாக
மீண்டும் கெட்டுவிட்டது. மருத்துவர்கள் மீண்டும் அவரை
ஐரோப்பாவுக்குப் போகும்படிக் கூறினர். அவர் வியன்
னுவுக்குச் சென்றார். 3 மாதம் வரை வியன்னுவில் மருத்
துவச் சிகிச்சை நடந்தது. சுபாஷ் எழுந்து நடக்க முடி
ந்தது. மகாத்மாவின் பக்தரும், நோபல் பரிசு பெற்றவரு
மான ரோமன் ரோலந்தைப் பார்க்க விரும்பி ஜினிவாவுக்
குச் சென்றார். இருவரும் இந்திய ராஜீய நிலைமைகளைக்
குறித்துப் பேசினர். ரோமன் ரோலந்து அஹிம்சைக் கொள்
கையில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவர். சுபாஷின் வாதங்
கள் அவருக்கு ஏற்கவில்லையாயினும் அவரின் சிறந்த
தேசபக்தியை மெச்சி பாராட்டவே செய்தார்.

சுபாஷ் அதே ஆண்டு, 1930-லிருந்து 1934 வரை இந்தி
யாவின் விடுதலைக்காகச் செய்த கிளர்ச்சிகளை விவரித்து
"இந்தியப் போராட்டம்" என்ற தலைப்பில் ஒரு புத்தகம்
வரைந்தார். இப்புத்தகத்தை லண்டனில் ஒரு வெளியீட்டகம்



வெளியிட்டது. ஆயினும் இந்தியாவுக்குள் இப்புத்தகம்
புகுதல் கூடாது என சர்க்கார் தடுத்தனர். சர் சாமுவல்
ஹோர் இப் புத்தகம் பயங்கர இயக்கத்தை ஆதரிப்பதாகக்
காரணம் காட்டினர். சுபாஷ் ரோமுக்கு மீண்டும் சென்றார்.
அங்கு ஆப்கானிஸ்தான மாஜி மன்னரான அமனுல்லாவைச்
சந்தித்து. இந்திய அரசியல் விஷயங்களைப் பற்றிப்
பேசினர்.

ஜினிவாவில் வித்தல்பாயின் திருவுருவப் படத்தைத்
திறந்துவைக்க அங்குள்ள இந்தியர்கள் முடிவு செய்து அத்
திறப்பு விழாவை நடத்திவைக்க சுபாஷை அழைத்தனர்.
சுபாஷ் ஜினிவா சென்று வித்தல்பாயின் படத்தைத் திறந்து
வைத்து ஒரு சிறந்த சொற்பொழிவாற்றினர். வெளிநாடு
களில் நடக்கும் பிரிட்டிஷ் விஷமப் பிரசாரத்தைக் கண்டித்
தார். இவர் 1936-ம் ஆண்டு பிப்ரவரியில் அயர்லாந்து
சென்று தலைவர் டிவெலராவைப் பேட்டி கண்டார்.
டிவெலரா சுபாஷைப் பற்றி ஏற்கெனவே கேள்விப் பட்டும்
அவரது 'இந்தியப் போராட்டம்' என்ற நூலையும் படித்
திருக்கிறார். ஆகவே அவரை வரவேற்க டப்ளின் நகர
மேயரே ஏற்பாடு செய்திருந்தார். விடுதலைப் போராட்டத்
தில் அயர்லாந்தும் இந்தியாவும் ஒரே பாதையை நோக்கிச்
செல்வதைக் குறித்து இரு தலைவர்களும் மகிழ்ந்தனர். இத்
தகைய பிரயாணங்களால் சுபாஷின் உடல்நிலை குண
மடைந்தே வந்தது.

1936-ல் லக்ஷ்மணபுரியில் நடைபெற இருக்கும் காங்கி
ரஸுக்கு பண்டித ஜவாஹர் 2-வது முறையாக ராஷ்டிரபதி
யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சுபாஷை காங்கிரஸுக்கு
வரவழைக்க வேண்டுமென தேசத்தில் ஒரு எண்ணம் இருந்
தது. கமலா நேருவின் உடல் நலத்தைக் குறித்து வியன்னு
சென்றிருந்த பண்டித ஜவாஹர் சுபாஷைச் சந்தித்து
அவரை இந்திய மக்கள் காண விழைவதாகக் கூறி இந்தி
யாவுக்கு வருமாறு அழைத்தார். இச் செய்தி இந்தியா
வுக்குப் பரவியது. சுபாஷ் இந்தியாவுக்குப் போனால் அவர்
சுதந்திரமாக இருக்க முடியாது என பிரிட்டிஷ் ஸ்தானிகர்
ஒரு எச்சரிக்கையும் செய்தார்.

ஆனால் சுபாஷ் இந்த எச்சரிக்கைகளையெல்லாம் மதிக்கவில்லை. 1936 ஏப்ரல் 8-ம் தேதி சுபாஷ் பம்பாய் வந்து சேர்ந்தார். கப்பல் வந்து நின்றதுதான் தாமதம், தயாராக இருந்த போலீஸார் அவரைச் சிறை செய்தனர். நிருபர்கள் அவரைக் கண்டு "செய்தி" என்றனர். அதற்கு சுபாஷ் "தாயின் மணிக்கொடியைத் தாழ விடாதீர்கள்" என்றார். சுபாஷை வங்கத்தில் குர்சியாங் எனும் ஊரில் வசித்து வந்த அவரது சகோதரர் சரத் பாபு வீட்டில் பாதுகாப்புக் கைதியாக வைத்தனர். வீட்டைச் சுற்றியும் சி. ஐ. டி. யாரையும் பேட்டி காணக்கூடாது என்பதும் உத்தரவு.

## 14. ராஷ்டிரபதி சுபாஷ்

இந்தியாவில் மக்கள் உரிமை என்ன பாடுபடுகிறது என்பதற்குச் சுபாஷின் கைது ஒன்றே போதுமான சான்றாகும் என்று பண்டித ஜவாஹர் கூறினார். சுபாஷைக் கைது செய்து இருப்பதைக் குறித்து தேசமெங்கும் கண்டனங்கள் எழும்பின. காரியக் கமிட்டி கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியது. டில்லி சட்டசபையில் சர்க்காரைக் கண்டிப்பதாக நீலகண்டதாஸ் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். பார்லிமெண்டிலும் சரமாரியாகக் கேள்விகள் பிறந்தன.

இச் சமயத்தில் இந்திய மசோதா (1937) சட்டமாகிக் கொண்டிருந்தது. இச் சட்டத்துக்கு காங்கிரஸின் ஒத்துழைப்பைச் சர்க்கார் நாடியது. இதன் பயனாக 1937 மார்ச்சு 17-ல் சுபாஷ் விடுதலையானார். கட்டுப்பாடில்லாது விடுதலை செய்தனர். விடுதலை அடைந்ததும் சுபாஷ் டாக்டர் தர்மவீர் என்பவருடன் டல்ஹவுஸி சென்று மருத்துவ சிகிச்சை பெற்றார். சுவாசப் பையில் ஏதோ கெடுதல் ஏற்பட்டிருப்பதாகவும் அது ஐரோப்பாவுக்குச் சென்றால் தான் நலமாகும் என டாக்டர்கள் வற்புறுத்தினர். சுபாஷ் மீண்டும் சுதந்திர மகனாக ஐரோப்பா சென்றார். இம்முறை அவர் சென்றபோது எவ்விதமான தடையுத்திரவும் இல்லை. சுபாஷை வரவேற்க லண்டன் வாழ் இந்தியர்கள் ஏற்பாடு செய்தனர். அவ் வரவேற்புக் கூட்டத்தில் சுபாஷ் பேசிய பேச்சு பிரிட்டிஷ் சர்க்காருக்கு ஒரு பீதியை அளித்தது. இந்தியச் சட்டத்தின் முற்பகுதியாகிய மாகாண சுயாட்சியையும், இரண்டாவது பகுதியாகிய பெடரேஷன் திட்டத்துக்கும் காங்கிரஸின் ஆதரவைப் பெறவே சர்க்கார் சுபாஷை விடுதலை செய்தனர். ஆனால் விடுதலை அடைந்த சுபாஷ், அந்தப் பெடரேஷனை இந்தியா தன் கடைசி ஆள்வரை எதிர்க்கும் எனக் கூறினார் பிரிட்டனில்.

டிவெலரா அப்பொழுது லண்டனில் இருந்தார். அவருடன் சுபாஷ் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தார்.

சுபாஷை ஐரோப்பாவில் பல இடங்களுக்கு வருமாறு
அழைத்தனர். உடல் நலக் காரணத்தால் சில அழைப்பு
களை மட்டும் ஏற்று, அங்கெல்லாம் சென்று பேசினார்.

இச் சமயத்தில் 51-வது காங்கிரஸ் மகாசபை கூடுவ
தாக இருந்தது. ஹரிபுராவில் கூடும் இக் காங்கிரஸுக்கு
சுபாஷையே ராஷ்டிரபதியாகத் தேர்ந்தெடுக்க இருந்தது.
இவரைத் தேர்ந்தெடுப்பதில் யாருக்கும் எதிர்ப்போ விருப்ப
மின்மையோ இல்லை. சுபாஷ் இடைவிடாது செய்த தேசப்
பணிக்காக தேசம் அவரைப் பெருமைப்படுத்த வேண்டு
மென்றே நினைத்தது. ஐரோப்பாவில் சிகிச்சை பெற்று
வரும் சுபாஷுக்கு இச் செய்தி எட்டியது. ராய்ட்டர்
நிருபர் சுபாஷை பேட்டி காண விழைந்தார். சுபாஷ் தனக்கு
தேசம் அளித்திருக்கும் பெருமையைக் குறித்து ராய்ட்டர்
நிருபரிடம் கூறுவதாவது:

"இத்தகைய பெருமையைப் பெற நான் தகுதி
உடையவன் என்று எண்ணவில்லை. தேசம் எனக்கு
மனம் உவந்து பெருமை அளித்திருப்பதாகவே நினைக்
கிறேன். இந்திய தேசியப் போராட்டத்தின் முன்
னணியில் நின்று போராடிய இந்திய வாலிபர்களை
வரையும் தேசம் பாராட்டுகிறது என்றே நினைக்கி
றேன்...

"மேலும் ஹரிபுரா காங்கிரஸ் என்ன முடிவு செய்யு
மென்று என்னால் இப்பொழுது கூற முடியாது. ஆனால்
ஒன்று மட்டும் நிச்சயம். ஏகாதிபத்திய எதிர்ப்பை
முன்னைவிட அதிகமாகப் பலப்படுத்துவோம்..."

மந்திரி சபைகளை காங்கிரஸ் கைப்பற்றி இருப்பதைப்பற்றி
கேட்டபோது:

"மந்திரி சபைகளை காங்கிரஸ் அவசியம் கைப்பற்றியே
தீரவேண்டும்; இதனால் மக்களுக்குச் சிறந்த நன்மை செய்ய
லாம். நமது அன்றாட பிரச்சினைகளைத் தீர்க்கலாம். ஆகவே
உறுதி படைத்தவர்கள் மந்திரி சபைகளைக் கைப்பற்றினால்
அதனால் தேசப் போராட்டங்கள் தடைபடாமல் இருக்
கும். மகாத்மா காந்தி, ஜவாஹர், சர்தார் பட்டேல், ராஜன்
பாபு போன்ற தலைவர்கள் சட்டசபைக்கு வெளியே இருப்ப



தால், மந்திரி சபைகளை நெறி தவறாது பாதுகாக்க உதவி
யாக இருக்கும். இது மிகவும் நல்லது..."

ஹரிபுராவில் கூடிய காங்கிரஸுக்கு ராஷ்டிரபதி
சுபாஷ் 52 காளைகள் பூட்டிய ரதத்தில் வந்திறங்கினார்.
மாநாட்டுப் பந்தல் அமைத்த இடத்திற்குக் காலஞ்சென்ற
வித்தல் பாய் பட்டேலின் நினைவாக "வித்தல் நகர்" என்று
பெயரிடப்பட்டது. இந்தியா முழுவதிலும் வந்த பிரதிநிதி
கள் ராஷ்டிரபதி சுபாஷ் தன் தலைமைப் பீடத்தில் அமர்ந்
ததும், 'சுபாஷ் வாழ்க' என வாழ்த்தினர்.

சுபாஷ் தமது தலைமைச் சொற்பொழிவைப் படித்தார்.
ஐரோப்பாவில் யுத்த மேகங்கள் குமுறிக் கொண்டிருப்
பதை அவர் குறிப்பிட்டு, இந்தியா அடுத்து வரவிருக்கும்
போராட்டத்துக்குத் தயாராகவே இருக்கவேண்டுமென
எச்சரித்தார். ராஷ்டிரபதி சுபாஷின் உடல்நிலை இன்னும்
முற்றிலும் குணமடையவில்லை. இருப்பினும் அவர் காங்கி
ரஸின் வேலைகளை அலுப்பின்றி செய்த

# 15. தகராறு !

சுபாஷ் ராஷ்டிரபதி ஆகியதும் மகாத்மாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமான காங்கிரஸ் தலைவர்களுக்கும் அவருக்கும் இருந்து வந்த பழைய மனவேற்றுமைகள் எல்லாம் தீர்ந்துவிடுமென்று பலர் நினைத்தார்கள். முதல் 3, 4, மாதங்களுக்கு வேற்றுமைகள் தீர்ந்துவிட்டன என்றே தோன்றியது. ஆனால் சுபாஷின் முற்போக்கு இந்த எண்ணம் தவறு என்று காட்டியது. காரியக்கமிட்டி உறுப்பினர்கள் கண்களுக்கு, மகாத்மாவின் போக்கை சுபாஷ் எதிர்ப்பவராகத் தோன்றியது. சுபாஷ் மகாத்மா எடுத்ததற்கெல்லாம் பிதவாதத்தைத் துணைகொள்ளுகிறார் என்று நினைத்தார். இதன் விளைவாகக் காங்கிரஸ் காரியக் கமிட்டியில் கருத்து வேற்றுமைகள் தலைகாட்டலாயின.

கல்கத்தா காங்கிரஸில் சர்வகட்சி மாநாட்டில் மகாத்மா கொண்டுவந்த குடியேற்ற நாட்டந்தஸ்தை சுபாஷ் எதிர்த்ததும், பின் லாகூரில் முழுச் சுதந்திரக் கோரிக்கையை எதிர்த்து, போட்டி சர்க்கார் ஏற்படவேண்டும் என்ற திருத்தத்தை கொண்டுவந்ததும் போன்ற தீவிர முறைகள் தான் காந்திஜியின் அன்பைப் பெற்ற தலைவர்களுக்கும் சுபாஷுக்கும் ஏற்பட்ட கருத்து வேற்றுமைக்குக் காரணமாகும். தீவிர முறையில்தான் நாடு விடுதலை காணும் என்று சுபாஷ் நம்பினார். அதை விடாது பிரசாரம் செய்துவந்தார். மகாத்மாவின் அகிம்சையால்தான் நாடு சுதந்திரம் பெற முடியும் என்பது மற்றத் தலைவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. இருவர் நோக்கமும் ஒன்று. நடைமுறையில்தான் வேறுபாடு. இதைத் தவிர தனிப்பட்ட முறையில் இருவரிடையேயும் எந்த விதமான மனக்கசப்பும் இல்லை. இவ்வாறு இருந்து வந்தது ஒரு முறையில் நல்லது தான். தேச விடுதலை என்பது தனிப்பட்டவர்களின் உரிமையோ, பாரம்பரிய சொத்தோ அல்ல. இந்திய மக்கள் அனைவருக்கும் உரிமையான சொத்து விடுதலை.



ராஷ்டிரபதி சுபாஷுக்கும் காரியக் கமிட்டி தலைவர்களுக்கும் இருந்துவந்த கருத்து வேற்றுமைகள் பரஸ்பர கண்காணிப்பில் இருந்திருந்தால் இன்றைய நிலையே வேறு விதமாக இருக்கும். பெடரேஷன் அரசியலமைப்பில் சில திருத்தங்களைச் செய்தால் தலைவர்கள் அதை ஏற்பதாகக் கூறினர். சுபாஷ் எந்த முறையிலும் பெடரேஷனை ஏற்க முடியாது எனக் கூறிவந்தார். கருத்து வேற்றுமைகள் வெகு தூரம் வளர்ந்தது.

அடுத்த காங்கிரஸ் திரிபுரத்தில் கூடுவதாக இருந்தது. சுபாஷ் கட்சியினர் இவரை மீண்டும் தலைவர் தேர்தலுக்கு நிற்கும்படி வேண்டினர். சுபாஷ் மீண்டும் தலைமைப் பதவிக்கு வருவது காரியக் கமிட்டி உறுப்பினர் பலருக்குப் பிடிக்கவில்லை. முக்கியமாக பட்டேல் இதை எதிர்த்தார். மகாத்மாவுக்கும் பிடிக்கவில்லை. சுபாஷுக்குப் போட்டியாக யாரையாவது நிறுத்தவேண்டும் என்று பட்டேல் நினைத்தார். டாக்டர் பட்டாபி சீதாராமைய்யா பெயரும், மௌலானா ஆஜாத் பெயரும் உலவின. மௌலானா ஆஜாத், டாக்டர் பட்டாபியை ஆதரிக்கும்படி ஒரு அறிக்கை வெளியிட்டுவிட்டு தாம் விலகிக்கொண்டார். ஆனால் டாக்டர் பட்டாபியை ஆதரிக்கவேண்டும் என்று ஆறு காரியக் கமிட்டி உறுப்பினர்கள் கையொப்பம் இட்டு ஒரு அறிக்கை வெளியிட்டனர். சுபாஷ் மற்றொரு அறிக்கையை வெளியிட்டார்.

> “பெடரேஷன் திட்டம் பற்றி காங்கிரஸிலுள்ள வலதுசாரி தலைவர்களுக்கும் பிரிட்டிஷ் சர்க்காருக்கும் அடுத்த ஆண்டில் ஓர் ஒப்பந்தம் ஏற்படப் போவதாக பலத்த நம்பிக்கை இருந்து வருகிறது. இதற்காகத் தான் அவர்கள் இடதுசாரிக்காரர் ஒருவர் தலைவராக வரக்கூடாது என்று தடுக்கிறார்கள்.........”

சுபாஷின் அறிக்கை பொய்யென்றும், வேண்டுமென்றே அவ்விதம் கூறுகிறார் என்றும் சர்தார் பட்டேல் ஒரு அறிக்கை வெளியிட்டார். சுபாஷ் இதற்கு பதிலளிக்கையில் 'வேண்டுமானால் நான் விலகிவிடுகிறேன். ஆனால் ஆச்சார்ய நரேந்திர தேவ் போன்ற ஒரு இடது

சாரியை ஒரு முகமாகத் தேர்ந்தெடுப்பதாகச் சர்தார் பட்டேல் உறுதி அளிப்பாரா?' என்று கேட்டார். முடிவில் தேர்தல் நெருங்கி 1939 ஜனவரி 29-ல் சுபாஷ் 1580 வோட்டுகள் பெற்று வெற்றி அடைந்தார். டாக்டர் பட்டாபிக்கு 1377 வோட்டுகள் தான் கிடைத்தன.

சுபாஷ் உடனே ஒரு அறிக்கை வெளியிட்டார். "தேர்தலோடு பழைய சண்டைகள் எல்லாம் போய்விட்டன. இனி கட்சிப் பிரதி கட்சி இருக்கக்கூடாது. எதிர்காலத்துக்கு திட்டம் வகுக்கும் வேலையில் நாம் அனைவரும் ஒரு முகமாக ஈடுபடுவோமாக" என அவ்வறிக்கையில் குறிப்பிட்டார்.

ஆனால் தேர்தல் முடிந்தும் தகராறு தீரவில்லை; மாறாக வலுக்கத்தான் செய்தது.

# 16. திரிபுரி காங்கிரஸ்

மழைவிட்டும் தூவானம் நிற்கவில்லை." தேர்தலுக்குப் பிறகும் வேற்றுமைகள் இருக்கத்தான் செய்தன. வலது சாரிகள் ஆதிக்கம் காங்கிரஸில் போய்விட்டதாகவும், இனி, காந்திஜியைப் பின்பற்றிக் காங்கிரஸ் நடக்காதென்றும் பேசப்பட்டது. இச் சமயத்தில் மகாத்மா ஒரு அறிக்கை வெளியிட்டார்.

"துவக்கத்திலிருந்தே சுபாஷ் மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுப்பதை நான் எதிர்த்து வந்திருக்கிறேன். டாக்டர் பட்டாபியைத் தேர்தலுக்கு நிற்கும்படிச் செய்ததும், அவரைத் திரும்பப் பெறாதபடி செய்ததும் நானே. டாக்டர் பட்டாபியின் தோல்வி எனது தோல்வியே ஒழிய அது அவருடையதாகாது. நான் ஒரு திட்டமான கொள்கையைப் பின்பற்றுகிறவன். அவை இல்லாவிட்டால் நானே இல்லை என்பதுதான் பொருள். டாக்டர் பட்டாபிக்கு எதிராக ஓட்டுப் போட்டவர்கள் எனது கொள்கைகளை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுதான் பொருள். இந்தத் தோல்வியால் சந்தோஷப் படுகிறேன்.

மெஜாரிட்டிக் கட்சிக்கு மைனாரிட்டிக் கட்சி முட்டுக் கட்டையாக இருந்தால் ஆகாது. ஒத்துழைக்க முடியாது என்ற சமயத்தில் விலகி இருந்துவிட வேண்டும். காங்கிரஸில் துன்பத்துடன் இருக்கிறவர்கள் பகைமை மனப்பான்மை இல்லாமல் வெளியே இருந்து சிறந்த சேவை செய்யலாம் என்ற உறுதியிலேயே வர வேண்டும்."

மகாத்மாவின் இவ்வறிக்கை வெடிகுண்டு போல வேலை செய்தது. காரியக் கமிட்டியில் உள்ள 12 உறுப்பினர்களும் தலைவர் நடைமுறையில் நம்பிக்கை இல்லை என்ற முறையில் விலகினர். விலகிய உறுப்பினர்கள் சர்தார்

39

பட்டேல், மௌலானா ஆஜாத், பாபு ராஜேந்திர பிரசாத்,
ஸ்ரீமதி சரோஜினி நாயுடு, புலாபாய் தேசாய், டாக்டர்
பட்டாபி சீதாராமய்யா, ஹரிகிருஷ்ண மேதாப், ஆச்சார்ய
கிருபளானி, கான் அப்துல் காபர்கான், ஜெயராம் தாஸ்
தௌலத்ராம், ஜமுனாலால் பஜாஜ் என்பவர்கள் ஆவர்.

இந்த ராஜிநாமா தந்தி வரும் சமயத்தில் சுபாஷுக்கு
103 டிகிரி காய்ச்சல். படுத்த படுக்கையில் இருந்தார்.
தந்தி படித்துக் காட்டப்பட்டது. இதற்குள் திரிபுரியில்
காங்கிரஸ் கூடுவதாக இருந்தது. ஏற்பாடுகள் நடை
பெற்றன. இடையில் மகாத்மா சத்தியாக்கிரகம் துவக்கப்
போவதாக செய்திகள் உலவின. சுபாஷின் உடல்நிலை வர
வர சீர்கெட்டு வந்தது. சுபாஷின் தேக நிலையைக் கருதி
காரியக் கமிட்டி உறுப்பினர்கள் தங்கள் ராஜிநாமாவை
வாபஸ் வாங்க வேண்டும் என்று பல வேண்டுகோள்கள்
பறந்தன. மகாத்மா இதில் தலையிட மறுத்துவிட்டார்.
இறுதியில் சுபாஷ் ராஜிநாமாக்களை ஏற்கும்படி ஆயிற்று.

ராஷ்டிரபதி சுபாஷின் தேக நிலைமை மிகவும் மோச[…]
மாக இருந்தது. சுபாஷின் தாயாரும் அவரது சகோதரர்[…]
டாக்டர் சுனில் போஸும் துயரத்தில் ஆழ்ந்து, சுபாஷ் திரி[…]
புரிக்குப் போவது சரியல்ல என் நினைத்தனர். இறுதியில் 70[…]
வயது தாயுடன் திரிபுரிக்குப் புறப்பட்டார். இதனிடையே[…]
ராஜகோட்டையில் மகாத்மா 3-ம் தேதி உண்ணாவிரதம்[…]
துவங்கி விட்டதாகச் செய்தி கிடைத்தது. ராஷ்டிர[…]
பதி சுபாஷ் 5-ம் தேதி ஜபல்பூர் வந்து சேர்ந்தார். ரயில்[…]
யில் சுபாஷை வரவேற்கத் திரண்ட கூட்டம் கூடி இரு[…]
தது. சுபாஷை ரயிலிலிருந்து ஆம்புலன்ஸ் மோட்டாரில்[…]
ஏற்றிச் செல்லப்பட்டது. கூடியிருந்த திரளான கூட்டத்[…]
திற்கு அவரது தாய்தான் ஆசீர்வதித்தார்கள்.

8-ம் தேதி காரியக் கமிட்டிக் கூட்டம். சுபாஷ் தன்மீது
சாட்டப்பட்டிருக்கும் குற்றச் சாட்டுகளுக்கு பதில்
அளிக்கவே 101 டிகிரி காய்ச்சலுடன் வந்து சேர்ந்தார்.
சுபாஷ் எப்படியோ சமாளித்துக் கூட்டத்தில் அன்றும்
அன்றைய மறுநாளும் உட்கார்ந்திருந்தார். 9-ம் தேதி
105 டிகிரி காய்ச்சல். மருத்துவர்கள் படுக்கையை விட்டு
எழுந்திருக்கக் கூடாது என தடைவிதித்தனர். ராஷ்டிர



பதி சுபாஷின் வேண்டுகோளின்படி மௌலானா ஆஜாத்
கூட்டங்களுக்குத் தலைமை வகித்தார். இச் சமயம் ராஜ
கோட்டையிலிருந்து மகாத்மா உண்ணாவிரதத்தை நிறுத்தி
விட்டதாகச் செய்தி கிடைத்தது. மகாத்மா உபவாசத்தைக்
குறித்துக் கவலையாக இருந்த பிரதிநிதிகள் இச்செய்தி
கேட்டு ஆறுதல் அடைந்தனர்.

13-ம் தேதி அன்று அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி
கூடியது. சுபாஷுக்கு சிறிது காய்ச்சல் குறைவு. சுபாஷ்
மேடையில் ஒரு சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்தார்.
பொதுக் காரியதரிசி சென்ற ஆண்டு நிகழ்ச்சிகளைப் படித்
[…]தார். பின்னர் பண்டித கோவிந்த வல்லப பந்த் 160 அங்
[…]த்தினர்கள் கையொப்பமிட்ட ஒரு தீர்மானம் கொண்டு
[…]ந்திருப்பதாக தலைவர் சுபாஷ் அறிவித்தார்.

அந்தத் தீர்மானம்தான் பெரும் பூசலைக் கிளப்பி
[…]வது. ராஜிநாமா செய்த காரியக் கமிட்டியிடம் உறுப்பி
[…]ர்களுக்கு நம்பிக்கை இருப்பதாகவும், அக் கமிட்டியில்
[…]ந்தவர்களைக் குறித்து கூறிய குறைபாடுகள் கமிட்டி
[…]ருக்கு வருத்தத்தை அளிப்பதாகவும் அத் தீர்மானம்
[…]யது. அதோடு ராஷ்டிரபதி புதிதாகக் காரியக் கமிட்டி
[…]த்தால் மகாத்மாவின் விருப்பப்படியே அங்கத்தினர்
[…] தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் அத் தீர்மானம்
[…]யது. அதாவது சுபாஷின் போக்கை இத் தீர்மானம்
[…]டித்தது என்றுதான் கூறவேண்டும். பிரஸ்தாப தீர்
[…]னமாகிய இதனை அகில இந்திய காரியக் கமிட்டிக் கூட்
[…]த்தில் கொண்டுவந்தது தவறு என்றும் அதனை ஆய்வுக்
[…]க் கூட்டத்தில் கொண்டுவர வேண்டும் என்றும்
[…]டித பந்த் தீர்மானத்தை தள்ளிவிட்டார்.

பிற்பகல் ஆய்வுக் குழு கூட்டம் கூடியது. பூசல்களுக்
[…]ய பண்டித பந்தின் தீர்மானம் முதலில் வரவேண்
டும் என்று தலைவர் சுபாஷ் கூறினார். பண்டித பந்த் தமது
[…]ர்மானத்தைக் கொண்டுவந்து, காந்திஜியின் தலைமையை
[…]றுள்ள தலைவர் ஏற்கவில்லை என்றும், இதனால் காங்
[…]ரஸ் இயக்கமே பாழாகிவிடும். பழைய காரியக் கமிட்டி
[…]ஜிநாமாவுக்குக் காரணம் தலைவர்தான் என கண்டித்தார்.
[…] எதிர்க்கட்சியினர் மறுத்தனர்.

பின்னர் இரண்டு நாட்கள் இத் தீர்மானம் பலமுறை கொண்டுவரப்பட்டது. சிலர் பல திருத்தங்கள் கொண்டு வந்தனர். கடைசியில் பண்டித பந்தின் அசல் தீர்மானம் நிறைவேறியது. அப்பொழுது சுபாஷின் உடல் நிலை 104 டிகிரி காய்ச்சல். பண்டித பந்தின் தீர்மானம் நிறைவேறிய செய்தியை மறுநாள் படுக்கையிலிருந்துகொண்டு கேட்டார்.

சுபாஷ் கட்சிக்கு திரிபுரம் படுதோல்வியைத் தேடிக் கொடுத்தது என்று அனைவரும் கூறினர். அவரை ஏற்றி வந்த அதே ஆம்புலன்ஸ் கார் ரயிலடிக்குக் கொண்டுபோய் விட்டது. சுபாஷின் தலைமைச் சொற்பொழிவை வேறு ஒருவர்தான் படித்தார். சுபாஷின் உடல்நிலை நலமாகிவிடும் என்று காங்கிரஸைக்கூட ஒத்திவைக்க நினைத்தார்கள். அவரை ஊர்வலமாக அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 52 யானைகள் பூட்டிய ரதம் அவரது திருவுருவப் படத்தைத்தான் சுமந்து சென்றது.

## 17. ராஷ்டிரபதி ராஜிநாமா

சுபாஷ் ராஜிநாமா செய்துவிடுவாரென்று செய்திகள் பரவி வந்தன. சுபாஷ் அப்படி திடீரென்று ராஜிநாமா செய்துவிடவில்லை. சுபாஷ் கல்கத்தாவிலிருந்து வார்தா சென்று மகாத்மாவைக் காணவேண்டும் என்று இருந்தார். உடல் நலம் இடந்தரவில்லை. கடைசியாக பண்டி பந்தின் தீர்மானம் பற்றி மகாத்மாவுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதாவது 'பண்டித பந்தின் தீர்மானம் சட்ட விரோதமானது என்றும் குறிப்பிட்டுவிட்டு பின்னர் தாம் காரிய கமிட்டிக்கு ஏழு பேரை நியமிப்பதாயும், சர்தார் பட்டேல் மற்ற ஏழு பேரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள விட்டுவிடுவதாகவும் கூறி பொதுக் காரியதரிசி அமைத்தலை தம்மிடமே விட்டுவிட வேண்டும்' எனக் குறிப்பிட்டார்.

மகாத்மா இதற்கு பதில் கூறும் முகத்தான் 'சுபாஷ் தம்மிஷ்டப்படி நடக்கலாமென்றும், காரியக் கமிட்டியில் கட்சிப் பிரதிக் கட்சி வேண்டாம்' எனவும் எழுதினார். வேலை அப்பொழுதுதான் ஒழுங்காக நடக்கும் என்றும் மகாத்மா எடுத்துக் காட்டினார்.

அடுத்தபடி சுபாஷ் போராட்டத்தைப்பற்றிக் குறித்து, அதாவது 'சர்க்காருக்கு 6 மாத எச்சரிக்கை' கொடுத்து விட்டு, தேசத்தைப் போராட்டத்தில் ஈடுபடுத்த வேண்டும் என்றும், சமஸ்தானங்களிலும் பெரும் அளவுக்கு கிளர்ச்சிகள் துவக்கவேண்டும் எனவும் கூறினார்.

மகாத்மா, சுபாஷ் எண்ணியதுபோல எண்ணவில்லை. 'சுபாஷ் கூறும் திட்டங்களை, ஏற்கெனவே திரிபுரி காங்கிரஸில் விவாதித்து ஏற்கவில்லை. ஆகவே நான் எப்படி ஏற்பது' என்று காந்திஜி எழுதினார். கடைசியாக இருகட்சியினருக்கும் இடையே மனவேற்றுமைகள் ஏற்பட்டன. இப்படி பல முறை இரு தலைவர்களும் கடிதங்கள் எழுதிக்

கொண்டார்கள். காரியக்கமிட்டி இல்லாமல் தலைவர்மட்டும் இருந்து வந்தார். மகாத்மாவே காரியக் கமிட்டிக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்படியும் கடிதம் எழுதினார். மகாத்மா மறுத்துவிட்டார். பின்னர் அ. இ. கா. கமிட்டியைக் கூட்டுவது என தீர்மானித்து அ. இ. கா. கமிட்டி கூடியது. இக் கூட்டத்திற்கு சர்தார் பட்டேல் நீங்கலாக ஏனையோர் அனைவரும் வந்திருந்தனர். சுபாஷ் காரியக் கமிட்டி உறுப்பினர்களுடன் பலமுறை பேசிப் பார்த்தார். முட்டுக்கட்டை தீர்ந்தபாடில்லை. இனி ஒன்று, தான் ராஜிநாமா செய்தல் வேண்டும்; இல்லையேல் கமிட்டி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தம் விருப்பப்படி விட்டுவிட வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டது. தம் விருப்பப்படி தேர்ந்தெடுக்கக்கூடாது என்று பந்த் தீர்மானம் கூறிவிட்டது. இதற்கு ஜவாஹர் காரியக் கமிட்டியில் இரண்டு இடங்களை சுபாஷ் பெறலாம் என்று பொதுவாகக் கூறினார். சுபாஷ் இதை ஏற்கவில்லை. அ. இ. கா. கமிட்டியில் அவர் நியமனம் ஒப்புதலுக்கு வரும் சமயம் ராஜிநாமா செய்துவிட்டார்.

அ. இ. கா. கமிட்டிக்கு ஒரு புதுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் கட்டம் வந்து, ஸ்ரீ பாபு ராஜேந்திர பிரசாத் அவர்களைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர்.

## 18. ஒழுங்கு நடவடிக்கை

டாக்டர் ராஜன் பாபு ராஷ்டிரபதி ஆனதும் காங்கிரஸின் வேலைகள் தடைப்படாது நடந்து வந்தன. சுபாஷ்-பட்டேல் கட்சிச் சண்டைகள் எல்லாம் ஒருபுறம் ஓய்ந்திருந்தன. சுபாஷை வங்கக் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள்.

வங்கத்தில் நீண்ட காலமாகச் சிறைவாசம் செய்தும் ராஜீயக் கைதிகள் பலர் விடுதலை வேண்டி உண்ணாவிரதம் இருப்பதாக முடிவு செய்தார்கள். மகாத்மாவுக்குச் செய்தி எட்டியதும் அவர்களின் விடுதலைக்காக வங்க சர்க்காருடன் கடிதப் போக்குவரத்துகள் நடத்தினார். உண்ணாவிரதம் இருக்கப்போகும் கைதிகள் பயங்கர இயக்கத்தினர் என வங்க சர்க்கார் கூறியது. தங்களுக்கு பயங்கர இயக்கத்தில் நம்பிக்கை இல்லை என்பதை மகாத்மாவுக்குத் தெளிவு படுத்தினார்கள். மகாத்மா இதை வைத்துக் கொண்டு வங்க சர்க்காருடன் வாதாடி வந்தார். ஆனால் வங்க சர்க்கார் வழிக்கு வரவில்லை. ஆகவே கைதிகள் 1939 ஜூலை முதல் வாரத்தில் உண்ணாவிரதத்தைத் துவக்கினர்.

உடனே வங்க காங்கிரஸ் தலைவரான சுபாஷ் கைதிகளைப் பேட்டிகண்டு, அவர்கள் விடுதலைக்காக வங்க காங்கிரஸ் முயற்சிப்பதாகவும், சர்க்கார் இணங்கவில்லையேல் நேரடி நடவடிக்கை எடுக்கவும் தாம் தயார் எனச் சொல்லி, அவர்களின் உண்ணாவிரதத்தை நிறுத்துமாறு கூறினார். கைதிகளின் உண்ணாவிரதம் நின்று விட்டது. காங்கிரஸ் காரியக் கமிட்டி கைதிகளைப் பாராட்டி தந்தி கொடுத்தது.

இதற்கு முன்பே ஜூன் மாதத்தில் பம்பாயில் கூடிய அ. இ. கா. கமிட்டியில் இரண்டு முதன்மையான தீர்மானங்கள் நிறைவேறி இருந்தன: 1. எந்த மாகாணத்திலும் காங்கிரஸ்காரரோ காங்கிரஸ் நிலையங்களோ காரியக் கமிட்டியின் முன் இசைவு இன்றி சத்தியாக்கிரகம் துவங்கக் கூடாது. 2. மாகாண காங்கிரஸுக்கும் மந்திரி சபைக்கும்

இருக்கவேண்டிய உறவை விளக்கியது. இத் தீர்மானங்
கள் வெளியானதும் இவை மாகாண காங்கிரஸின் சுதந்தி
ரத்தைப் பறிப்பதாகும் எனக் கண்டித்தார். சுபாஷ்
இத் தீர்மானங்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பாரென அனை
வரும் எதிர்பார்த்தனர்.

சுபாஷ், வங்க ராஜிய கைதிகள் விடுதலையைக் கோரி
ஜூலை 9-ம் தேதி ...யா முழுவதும் கண்டன நாள்
கைக்கொள்ள வேண்டுமென ஒரு அறிக்கை விடுத்
தார். இதற்குமுன் ராஷ்டிரபதியின் ஒப்புதலைப் பெற்றி
ருக்க வேண்டும். சுபாஷ் அவ்வாறு செய்யவில்லை. உடனே
ராஜன்பாபு சுபாஷ் அறிக்கைவிட்டது சரியல்ல என
தந்தி கொடுத்தார். சுபாஷ் அறிக்கை விடுவதும், கண்
டன நாள் கைக்கொள்ளலும் தனது சொந்த உரிமை
என்று வாதித்தார். இதன்பின் ராஷ்டிரபதி பத்திரிகை
களுக்கு ஒரு அறிக்கை விடுத்து, நடக்கவிருக்கும் கண்டன
நாளில் பொதுக்கூட்டங்களிலோ, ஊர்வலங்களிலோ காங்
கிரஸ் நிலையங்களில் பொறுப்பிலிருப்பவர்கள் கலந்து
கொள்ளக் கூடாது என்று எச்சரித்தார். சுபாஷ் இவ்வெச்
சரிக்கையை மதிக்கவில்லை. வங்கம் ஜூலை 9-ம் தேதியை
கண்டன நாளாகக் கொண்டாடியது. கண்டன நாள் கூட்
டத்தில் வங்க காங்கிரஸ் முதல்வர்கள் கலந்துகொண்ட
னர். சுபாஷ் இவர்களுக்குத் தலைமை வகித்தார்.

ஆகஸ்ட் 9-ம் தேதி வார்தாவில் காரியக் கமிட்டி கூடி
யது. சுபாஷ் ராஷ்டிரபதியை மீறினாரென்று அவர்மீது
நடவடிக்கை எடுக்க யோசனை கூறப்பட்டது. சுபாஷ்
மீது நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிட்டால், மற்றவர்
காங்கிரஸின் கட்டளையை மீறுவதற்கு ஏதுவாகும்
என்று கருதி அவர் பேரில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்
பட்டது. சுபாஷ் வகித்துவந்த மாகாணத் தலைவர் பதவியை
ரத்துசெய்து, அத்துடன் காங்கிரஸ் தேர்ந்தெடுக்கப்படும்
எந்தக் குழுவிலும் அவர் 3 ஆண்டிற்கு உறுப்பினராக
இருத்தல் கூடாது என தடை விதித்தார்கள். வங்க காங்
கிரஸ் மற்ற உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்க
வில்லை.



காங்கிரஸிலிருந்து நீக்கப்பட்ட சுபாஷ் நாடெங்கும் சுற்றுப்பிரயாணம் செய்தார். "பார்வர்ட் பிளாக்" என்னும் முன்னணிக் கட்சி ஒன்றைத் துவக்கி பிரிட்டிஷ் சர்க்காருக்கு மாறுபாடாக போராட்டம் துவக்கவேண்டும் என்று பிரசாரம் செய்தார். செப்டம்பர் 3-ம் தேதி சென்னைக்கு வந்து, காலஞ்சென்ற எஸ். ஸ்ரீனிவாச ஐயங்கார் அவர்கள் தலைமையில் திலகர் கட்டத்தில் மிகச் சிறந்ததொரு சொற்பொழிவாற்றினார். கூட்டம் வெள்ளம்போல் திரண்டு சுபாஷைக் காணவந்தது கண்கொள்ளாக் காட்சியாய் விளங்கியது. கூட்டத்தில் சுபாஷ் பேசிக்கொண்டிருந்தபோது பிரிட்டன் ஜெர்மனிமீது போர்தொடுத்ததாகச் செய்தி எட்டியது. உடனே அதை அறிந்த அவர், பிரிட்டன் போரில் சிக்கிவிட்டது; இந்தச் சமயத்தில் தான் இந்தியா விடுதலைக் கிளர்ச்சியை செய்ய வேண்டுமெனப் பேசினார்.

# 19. சர்க்காரின் வெட்கம்

சுபாஷ் வங்க காங்கிரஸிலிருந்து விலகினாலும் வங்க காங்கிரஸ் அவரை விடவில்லை. உடனே வங்க காரர்கள் ஒன்று கூடி காரியக் கமிட்டி சுபாஷை நீக்கியது சரியல்ல என்று அறிவித்தனர். இதற்குக் காரியக் கமிட்டி, சுபாஷ் கட்சி நிறைந்திருந்த வங்க மாகாண காங்கிரஸை தடை செய்தனர்.

இச் சமயம் கல்கத்தாவில் இருந்த ஹால்வில் சிலையை அகற்றவேண்டுமென நீண்ட நாட்களாக ஒரு கிளர்ச்சி இருந்து வந்தது. அது இப்பொழுது வலுப் பெற்றது. இச் சிலையை அகற்ற சுபாஷே தலைமை வகித்து அகற்றுவதா கக் கூறினார். ஒரு குறிப்பிட்ட நாளில் சுபாஷின் தலைமை யில் ஒரு பெரிய ஊர்வலம் சிலையை நோக்கிப் புறப்பட் டது. உடனே சர்க்கார் பாதுகாப்புச் சட்டத்தின்படி சுபாஷைக் கைது செய்தனர். சுபாஷ் கைதாகியும் இயக்கம் நிற்கவில்லை. இறுதியில் வங்க சர்க்கார் ஹால்வில் சிலையை அகற்றியது. சிலையை அகற்றிய பிறகும் சுபாஷை விடு தலை செய்யவில்லை. இதற்கு வங்க சர்க்கார் சுபாஷ், முக மது அலி பார்க்கில் செய்த சொற்பொழிவும், "தீர்த்துக் கட்டும் நாள்" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையும் சட்ட விரோதமானது என்றும் கூறினார்கள்.

சுபாஷுக்கு இக் காவல் தண்டனை மிகத் துன்பமாக இருந்தது. விடுதலை கிடைக்கும்வரை உண்ணாவிரதம் இருப்பது என்ற தனது தீர்மானத்தின் முடிவைத் தெரி வித்து வங்க கவர்னருக்கும், பிரதமருக்கும் 1940 நவம்பரில் ஒரு கடிதம் எழுதினார். அக் கடிதத்தின் சில பகுதிகள் வருமாறு :

"உங்கள் மூலம் எனக்கு விடுதலை கிடைக்குமென்ற நம்பிக்கை அற்றுப் போய்விட்டது. அதற்காக நான் இரு விஷயங்களைச் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன். முதலாவது என்னைச் சிறை வைத்திருப்பது சட்டவிரோத



மானது. அநியாயம் மிக்கது. இதற்கு ஒரே ஒரு காரணம் எனக்குத் தோன்றுகிறது, சர்க்கார் வஞ்சக மனப்பான்மை யுடன் வேலை செய்கிறார்கள். இதற்குக் காரணம் ஒன்றும் எனக்குத் தெரியவில்லை. என் எதிர்ப்பைப் பல வழிகளில் செய்தாய்விட்டது. கடைசியாக ஒரே ஒரு ஆயுதம்தான் மிகுதி. அந்த ஆயுதம் விடுதலை கிடைக்கும்வரை உண்ணா விரதம் கைக்கொள்வதே. இதற்கு உடனடியாகப் பலன் கிடைக்காது. ஆனால் தியாகம் வீண் போகாது. ஒரு மனி தன் வாழ்ந்தான்—ஒரு லட்சியத்துக்காக உயிரை விட்டான் என்பதைவிட வேறு என்ன வேண்டும்.

எனது இரண்டாவது கோரிக்கை, இந்திய மாபுருஷர் ஜதீந்திர நாத் தாஸ், மகாத்மா காந்தி ஆகியோர் முறையில் வலுக்கட்டாயமாக உணவைச் செலுத்துவது இல்லை என்று சர்க்கார் முடிவு செய்தபடி, அந்த முடிவையே என் முறையிலும் செலுத்த வேண்டும்...; இல்லையேல் நான் கடைசிவரை, என் வலிமை உள்ளவரை, வலுக் கட்டாய மாக உணவு செலுத்துவதை எதிர்ப்பேன். நவம்பர் 20-ம் நாள் எனது உண்ணாவிரதம் துவக்கம்......"

சில நாட்களுக்குப் பிறகு அவரை விடுதலை செய்து விட்டது சர்க்கார். அவர் முழுச் சுகம் அடையும் வரை அவர்மீது இருந்த வழக்குகளை ஒத்தி வைத்தார்கள்.

சுபாஷ் விடுதலை ஆனதும் மிகுதியாக வெளிவருவ தில்லை. நண்பர்களுடன்கூட அதிகமாகப் பேசுவதில்லை. சிலர் அவர் மௌன விரதம் கைக்கொள்வதாகவும் கூறி னர். திடீரென சுபாஷ் தன்னை யாரும் பார்க்கக் கூடாது, வீட்டில் இருந்த சகோதரர்கள்கூட பார்க்கக் கூடாது எனக் கூறினார். ஒரு தனி அறையில் வசித்து வந்தார். வேளா வேளைக்குப் பழ ரசமும் பாலும் அவர் அறையின் முன் வைக்கப்படும். அவரை யாரும் பார்க்கக் கூடாதென கண்டிப்பாக உத்தரவிட்டார். சுபாஷ் கண்டிப்பை மீற, வீட்டில் யாருக்கும் துணிவில்லை.

திடீரென 1941 ஜனவரி 26-ம் நாள் சுபாஷைக் காணோம் என்ற செய்தி வெளியாகியது. இச்செய்தி தேசத் திலேயே ஒரு பெரும் பரபரப்பை உண்டாக்கியது. சுபா



44

ஷைக் காங்கிரஸ்காரர்கள் ஒருபுறமும், போலீஸார் மற்றொரு புறமும் தேடி அலைந்தனர். சுபாஷ் எங்கும் கிடைக்கவில்லை. பல மாதங்கள் வரை சுபாஷ்பற்றி ஒன்றுமே செய்தி இல்லை. கடைசியாக இந்திய ராஜாங்க சபையில் ஒரு கேள்வி பிறந்தது. அதற்கு உள்நாட்டு உறுப்பினர் பதில் கூறுகையில், சுபாஷ் ரோமிலோ, பெர்லினிலோ இருப்பதாகத் தெரிவித்தார். அச்சு நாட்டு வானொலிகளில் அவரைப் பற்றிய செய்தி வந்ததாகவும் கூறினார். இந்தப் பதிலே காமன்ஸ் சபையிலும் கூறப்பட்டது. சுபாஷ் போஸ் எப்படிப் போனார்? ரோமுக்கும் பெர்லினுக்கும் எப்படிப் போக முடிந்தது? என்று இந்தியாவே அதிசயித்தது. பிரிட்டிஷ் சர்க்காரும் இந்திய சர்க்காரும் இதைக் கண்டு வெட்கித் தலை குனிந்தார்கள். சுபாஷின் மனவலிமையைக் கண்டு மக்கள் பெருமை கொண்டார்கள்.

## 20. ஊமை ஜியாவுதீன்

சுபாஷ் இந்தியாவை விட்டு எப்படிப் போனார் என்ற விவரம் 1945 வரை பெரும் மறைபொருளாகவே இருந்தது. சிலர் ஹூக்ளி நதிக்கு ஜப்பானிய சப்மரைன் ஒன்று வந்து அழைத்துச் சென்றதாகச் சொல்லினர். இன்னும் சிலர் அவர் கைபர் கணவாய் வழியாகத் தப்பிச் சென்றாரெனக் கூறினர். இன்னும் பலர் அவர் விமானத்தின் மூலம் மறைந்துவிட்டதாகத் தெரிவித்தனர். சுபாஷ் தப்பிவிட்டார் என்ற செய்தி கேட்டு வங்க சர்க்காரும் இந்திய சர்க்காரும் மிகவும் விழிப்பாய் இருந்தனர். வங்கத்தில் பல வாலிபர்களைக் கைது செய்தனர். "பார்வர்ட் பிளாக்" கட்சியைச் சேர்ந்தவர்கள் அனைவரையும் கைதுசெய்து காவலில் வைத்தனர். பெர்லினை சுபாஷ் எப்படி யடைந்தார் என்ற முழு விவரம் 1946-ல் தான் வெளியாயிற்று.

காபூலில் வசித்த உத்தம் சந்த் சுபாஷுக்கு ஒளிவிடம் தந்தார். சுபாஷை போலீசார் கண்களில் படாதபடி தம் வீட்டில் வைத்திருந்தார். கடைசியாக இந்த உத்தம் சந்த் போலீசார் பார்வையில் சிக்கினார். உத்தம் சந்த் சிறையில் இருந்தபோதுதான் சுபாஷ் எப்படி இந்தியாவை விட்டுச் சென்றார் என்று எழுதினார். அச் செய்தி 1946 பிப்ரவரி-மார்ச்சில்தான், "ஹிந்துஸ்தான் டைம்ஸில்" வெளியாயிற்று.

1941 ஜனவரி மாதம்தான் சுபாஷ் வீட்டைவிட்டு வெளிக் கிளம்பினார். சுபாஷ் பட்டாணியர் உடையில் கல்கத்தாவுக்கு அருகில் இருக்கும் பர்ஹம்பூருக்குச் சென்று அங்கிருந்து பெஷாவாருக்குச் சென்றார். தம் அடையாளத்தை மாற்றிக்கொள்வதற்காக அவர் தாடியை வளர்த்தார். பெஷாவாரிலிருந்து காபூலுக்குப் போக சுபாஷுக்குத் துணையாக ரஹ்மத்கான் என்ற ஒருவரை அவரது நண்பர்கள் அனுப்பி வைத்தனர். சுபாஷ் காபூல் வந்து சேரும் வரையில் ஊமையைப்போல் நடித்தார். காரணம் பாரசீக மொழியோ, ரஷ்ய மொழியோ சுபாஷுக்குத் தெரியாது. அவர்கூட வந்த ரஹ்மத்கான் என்ற பத்தராமுக்கு

புஷ்டு மொழி தெரியும். ரஹ்மத்கான் சுபாஷை ஜியாவுதீன் என்றழைத்தார். ஜியாவுதீன் என்ற சுபாஷ் ரஹ்மத்கானின் சகோதரர் என்றும், சகோதரர் ஊமையாகிவிட்டதால் புண்ணிய க்ஷேத்திரமாகிய சாகி சாகிப் கோயிலுக்குச் செல்வதாக வழியில் கூறிக்கொண்டும் காபூலை அடைந்தார்.

காபூலில் ரஷ்ய ஸ்தானிகர் காரியாலயத்தின் உதவியால் சுபாஷ் எப்படியும் தப்பி ரஷ்யா சென்றுவிடலாம் என்று நினைத்தார். காபூலில் வழங்கும் மொழி தெரியாது சுபாஷ் முதலில் அங்கு துன்பப்பட்டார். அங்கு பாரசிக மொழிதான் வழங்கி வந்தது. தன்னுடன் வந்த பத்தராமுக்கு புஷ்டு மொழிதான் தெரியும். காபூலில் இவர்களுக்குத் தங்கும் இடமே கிடைக்கவில்லை. குதிரைகளும் ஒட்டகங்களும் கட்டப்படும் இடத்திற்கு முன்னாலிருந்த சாவடியில் 13 நாட்களை எப்படியோ கழித்தனர்.

ஒருநாள் ரஹ்மத்கான் ரஷ்ய ஸ்தானிகரின் மோட்டாரைப் பார்த்தார். உடனே அருகே சென்று மோட்டாரின் உள்ளிருந்த ஸ்தானிகருடன் தனக்குத் தெரிந்த அரைகுறையான ரஷ்ய மொழியில் பேசினார். ரஷ்ய ஸ்தானிகர் சுபாஷைப் பற்றி மன நிறைவு கொள்ளும் வகையில் எதுவும் கூறவில்லை. மேலும் அந்த ஸ்தானிகர் உதவி செய்பவராகவும் தெரியவில்லை. தான் ரஷ்யாவுக்குப் போகமுடியாதென உணர்ந்த சுபாஷ் மனோவேதனை அடைந்தார். சுபாஷ் தங்கியிருந்த சாவடியருகில் ஒரு போலீஸ்காரன் துன்புறுத்தி வந்தான். அவன் கேட்கும்போதெல்லாம் பணம் தந்துவந்தனர். மேலும் போலீஸ்காரன் இவர்களின் அடையாளத்தைக் கண்டு பிடித்துவிடுவானோ என்று அச்சமுற்று அவ்விடத்தைவிட்டு தப்ப முயன்றனர். இச் சமயத்தில்தான் உத்தம் சந்த் என்ற தேசபக்தரை ரஹ்மத்கான் அணுகி, சுபாஷ் வந்திருக்கும் செய்தியைக் கூறி, தங்க இடம் கேட்டார். உத்தம் சந்த் சுபாஷின் பெருமையை ஏற்கெனவே நன்கு அறிந்த தேசபக்தர். உத்தம் சந்த் இவ்விருவர்களுக்கும் தங்க இடம் தந்து உதவினார்.

ரஷ்ய ஸ்தானிகர் கைவிடவே இத்தாலிய ஸ்தானிகர் உதவியை சுபாஷ் நாடினார். இத்தாலிய ஸ்தானிகர் உதவி



கிடைத்தது. இத்தாலிய ஸ்தானிகர் எப்படியும் சுபாஷை இத்தாலிக்கு அனுப்புவதாக வாக்குறுதி தந்து தனது தலைமைக் காரியாலயத்துக்கு விஷயத்தை மறைவாகத் தெரிவித்துவிட்டார். உத்தம் சந்த் வீட்டில் சுபாஷ் காலைமுதல் இரவு 8 மணி வரை ஒரு தனி அறையில் பூட்டி வைக்கப்பட்டார். இரவு 8 மணிக்கு உத்தம் சந்த் வந்தபிறகுதான் அவ்வறை திறக்கப்படும். இங்ஙனம் 45 நாட்கள் ஓடின. சுபாஷ் ரஷ்யாவுக்குச் செல்ல நினைத்தாரே தவிர இத்தாலிக்கோ, ஜெர்மனிக்கோ செல்வதாக இல்லை. ரஷ்ய ஸ்தானிகர் மறுத்துவிட்டபடியால் எப்படியாவது இத்தாலி சென்று அங்கிருந்து ரஷ்யா சென்றுவிடலாம் என்று நம்பினார். ஏனெனில் இந்தியாவில் இருந்தால் போலீஸார் போடும் சல்லடையில் அகப்பட்டுக்கொண்டால் என்னசெய்வது என்ற ஒரே கவலைதான்.

இத்தாலிய ஸ்தானிகர் எவ்வளவு விரைந்து முயன்றும் பிரயாணம் விரைவில் அமைவதாய் இல்லை. ஆகவே சுபாஷ் ஒரு சூதாடியின் துணையைநாடி கைக்கூலி கொடுத்து அவன் மூலமாக ரஷ்ய எல்லையை அடைந்துவிட நினைத்தார். தன்னை ரஷ்யா சிறைசெய்துவிட்டாலும் அங்கிருந்து மாஸ்கோவுக்கு கடிதம் எழுதி விடுதலை அடைந்துவிடலாம் என்று நம்பினார். ஒருவேளை ரஷ்ய போலீஸ் சுட்டுவிட்டாலும் தீமை இல்லை என அப்போதைய சுபாஷின் மனநிலை கூறிற்று.

ஆகவே சுபாஷ் சூதாடியுடன் ரஷ்ய எல்லையை அடைய எல்லாவித ஏற்பாடுகளையும் செய்து விட்டார். இந் நிலையில் இத்தாலிய ஸ்தானிகர் சுபாஷ் இத்தாலி செல்ல உத்தரவு வந்திருக்கிறது என்றும் பயணத்திற்கு தயாராகும்படி கூறினார். இச் செய்தி சுபாஷுக்கும் வயிற்றில் பால் வார்த்ததுபோல் ஆயிற்று. அளவிலா இன்பம் அடைந்தார். ஒரு நாள் மாற்றுப் பெயருடன் சுபாஷ் இத்தாலிக்குப் பயணமானார். உத்தம் சந்தும், ரஹ்மத்கானும் வழி அனுப்பி வைத்தனர். சுபாஷுக்குத் தங்கும் இடமும் பேருதவியும் செய்துவந்த உத்தம் சந்தை சுதந்திர இந்தியா என்றும் மறவாது தம் நன்றியைச் செலுத்தும் என்பதில் ஐயமில்லை.

# 21. கீழ்க்கோடி அழைத்தது

ரோமுக்குச் செல்வதாக இருந்த சுபாஸை பெர்லி
னில் இறக்கினார்கள். 1941 மார்ச் 23-ம் தேதி சுபாஷ்
பெர்லினை அடைந்தார். சர்வதேச நிலைமைகளில் மாறுதல்
கள் ஏற்பட்டன. ரஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் இருந்த
நேச உறவு ஜூன் 22-ம் தேதியுடன் முறிந்தது. ரஷ்யாமீது
ஜெர்மனி போர் தொடுத்து விட்டது. இதனால் சுபாஷ்
ரஷ்யா செல்ல முடியவில்லை. தாய்நாட்டின் விடுதலையை
நாடிச் சென்றிருக்கும் சுபாஷ் அடிக்கடி இந்திய மக்களுக்கு
வானொலியின் மூலம் பேசி வந்தார். பிரிட்டிஷ் ஏகாதி
பத்தியம் வர வர சிதைந்து வருவதாகவும், இந்தச் சமயத்தில்
இந்திய மக்கள் சுதந்திரத்திற்குக் கிளர்ச்சி செய்யவேண்டும்
எனவும் குறிப்பிட்டு வந்தார்.

பஸிபிக்கில் யுத்த மேகங்கள் இருண்டு வந்தன. எந்த
நேரத்திலும் ஜப்பான் தாக்குதலில் இறங்கும் என்ற
நிலைமை இருந்தது. 1941 டிசம்பர் 7-ம் தேதி ஜப்பான்
போரில் இறங்கியது. பர்ல் துறைமுகத்தில் இருந்த அமெ
ரிக்கக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. தாய்லாந்து ஜப்
பான் வசம் சிக்கியது. 14-ம் தேதி காலை தாய்லாந்து வழி
யாக ஜப்பானிய கவச மோட்டார்களும், பீரங்கிகளும்
பர்மாவுக்குள் நுழைந்தன. இது உலகத்துக்கே வியப்பாக
இருந்தது. சிங்கப்பூரில் நின்றிருந்த பிரிட்டிஷ் ராக்ஷசக்
கப்பல்களான 'பிரின்ஸ் ஆப் வேல்ஸ்', 'ரிப்பல்ஸ்'
ஆகியவைகளை ஜப்பான் மூழ்கடித்தது. பிப்ரவரி 15-ம்
தேதி சிங்கப்பூர் சரணாகதி அடைந்தது. அன்று சுபாஷ்
இந்தியா வெகுநாளாக எதிர்பார்த்திருந்த நாள் வந்துவிட்ட
தென்று பெர்லின் வானொலியில் பேசினார்.

ஜப்பான் இந்த மின்னல் வேகத்தில் முன்னேறி வந்தது
உலகத்தையே பிரமிக்கச் செய்தது. அமெரிக்கா பஸிபிக்கில்
தலைகாட்ட முடியவில்லை. இந்நிலையில் பர்மா, மலேயா,
ஜப்பான், தாய்லாந்து ஆகிய தேசங்களில் வாழும் இந்திய



மக்களிடையே ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது. இந்தப் புத்
துணர்ச்சி ஜப்பானுக்கும் நேச நாடுகளுக்கும் போர் துவங்கு
வதற்கு முன்பே கீழ்க் கோடியில் வசித்த இந்திய மக்கள்
இந்திய விடுதலைக்கு எவ்வாறு வேலை செய்வது என்று
எண்ணித்தான் வந்தனர். இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்
பட்டு ஜப்பானில் இந்திய விடுதலைக்குத் தவங்கிடந்த ராஷ்
பிகாரி கோஷ் இவ்வெண்ணங்களுக்கு மூல காரணமாக
விளங்கினார். ராஷ் பிகாரி கோஷ், அனந்த மோகன் என்ற
மற்றொரு தலைவருடன் சேர்ந்து ஜப்பானில் உள்ள 'இந்திய
தேசிய காங்கிரஸ்' என்ற இந்திய சங்கத்தைத் தோற்று
வித்தார். கிளைச் சங்கங்கள் தோன்றின. கீழ்க்கோடி
நாடுகளிடையே ஒரு ஒற்றுமை ஏற்படுத்த முயன்றார். பாங்
காங்கில் துவக்கிய ஒரு கிளைச் சங்கத்திற்கு சுவாமி சத்தியா
னந்த் பூரி தலைவராக விளங்கினார்.

ராஷ் பிகாரி கோஷ் கீழ்க்கோடி நாடுகளில் வாழும்
இந்தியரிடை ஒற்றுமை ஏற்படுத்த டோக்கியோவில் ஒரு
மாநாடு கூட்டினார். சயாம், மலேயா, பர்மா ஆகிய நாடு
களில் வாழும் இந்தியர், உலக யுத்தம் ஒன்றும் வராமல்
ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்ற தீர்மானம் நிறை
வேறிற்று. இச் சமயத்தில் சிங்கப்பூர் விழுந்தது. சிங்கப்
பூரில் ஜப்பான் தளபதியாக இருந்த மேஜர் பூஜிவாரா மலே
யாவில் வாழும் இந்தியர்களையெல்லாம் அழைத்து, ஜப்
பான், இந்தியர்களை நேச மக்களாகக் கருதுவதாகக் கூறி
னார். பிப்ரவரி 17-ம் தேதி 32,000 இந்தியத் துருப்புகளை
கர்னல் ஹண்ட் என்னும் பிரிட்டிஷ் தளபதி, ஜப்பானியர்
களிடம் அவர்களை யுத்தக் கைதிகளாக விட்டுச் செல்வ
தாகக் கூறினார். அதன் பிறகு காப்டன் மோகன் சிங் என்
பவர், இந்தியத் துருப்புகள் இனி இந்தியாவின் விடுதலைக்
காகப் போராட வேண்டுமெனப் பேசினார்.

மார்ச் இறுதியில் டோக்கியோவில் ராஷ் பிகாரி
கோஷ் ஒரு மாநாடு கூட்டினார். ஹாங்காங், ஷாங்காங்,
மலேயா, பாங்காங் ஆகிய இடங்களில் இருந்த இந்தியத்
தலைவர்களுக்கெல்லாம் அழைப்பு அனுப்பப்பட்டது. தீவி
னைப் பயணக பாங்காங்கிலிருந்து மாநாட்டுக்கு வந்த சுவாமி
சத்யானந்த் பூரியின் விமானம் வழியில் நொறுங்கியது.

அவ் விமானத்தில் அவருடன் வந்த 3 பிரதிநிதிகளும் உயிர்
நீத்தனர். ராஷ் பிகாரி கோஷ் மாநாட்டிற்குத் தலைமை
வகித்தார். மாநாட்டிற்கு 130 பிரதிநிதிகள் வந்திருந்தனர்.
ராஷ் பிகாரி கோஷ் தலைமையில் 'இந்திய விடுதலை லீக்'
என்ற ஒரு சங்கம் ஏற்படுத்த தீர்மானிக்கப்பட்டது. இந்தி
யாவுக்கு முழு விடுதலைப் பெறுவதே இந்த லீகின் நோக்கம்.

இந்தியாவின் விடுதலைக்காகப் போராட ஒரு ராணு
வத்தை ஈடுபடுத்த நினைத்து, அதில் ஏற்கெனவே ராணு
வத்தில் இருந்தவர்களும், புதிதாக வருகிறவர்களும் சேர
லாம் என்று தீர்மானம் செய்தது லீக். ராணுவத்தின்
சார்பாக காப்டன் மோகன் சிங் பிரதிநிதித்துவம் வகித்
தார். இந்த ராணுவம் இந்தியாவில் உள்ள பிரிட்டிஷார்
மீது யுத்தம் தொடுக்கும் எனவும் பிரசாரம் செய்தார்கள்.
லீகின் செலவுக்குப் பணம் தேவையாய் இருந்தால் கிழக்
கோடியில் வசிக்கும் இந்தியரிடம் வசூலிப்பது என்றும்
தீர்மானிக்கப்பட்டது. ஸ்ரீஜத் சுபாஷ் போஸை இந்த லீக்
கிழக்கோடிக்கு அழைக்கிறது என்ற தீர்மானமும் நிறை
வேற்றிற்று. சுபாஷுக்கு பிரயாண வசதி செய்துகொடுக்க
ஜெர்மன் சர்க்காரை ஜப்பான் சர்க்கார் கேட்கவேண்டு
மென பிரதமர் டோஜோவை வேண்டிக்கொள்வதாகவும்
ஒரு தீர்மானம் நிறைவேறியது.

செப்டம்பர் முதல் தேதி இந்திய தேசிய ராணுவம்
திரட்டப்பட்டது. கேப்டன் மோகன் சிங் சேனைத்
தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இச் செய்திக
ளெல்லாம் ஜெர்மனியில் இருக்கும் சுபாஷுக்கு அடிக்கடி
கிடைத்தன.

## 22. சிங்கப்பூரில் சுபாஷ்

பாங்காங் தீர்மானங்களை ராஷ் பிகாரி கோஷ் ஜப்பான்
சர்க்காருக்கு அனுப்பிவைத்தார். இந்திய விடுதலை லீகை
ஜப்பான் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று ஒரு கடிதம்
எழுதினார். ஜப்பான் சர்க்கார் இதற்கு உடனே உடன்பட
வில்லை. இதற்குள் இந்திய தேசிய ராணுவம் என்று காப்
டன் மோகன்சிங் தலைமையில் திரண்டு வரும் ராணுவத்
தைக் குறித்து ஜப்பான் தளகர்த்தர்கள் சந்தேகம் கொள்
ளத் துவங்கினர். இந்தச் சமயத்தில், நடவடிக்கைக் கமிட்
டிக்கு ராஷ் பிகாரி கோஷ்தான் தலைவர் என்பதை மறந்து
மோகன்சிங் தமக்குத் தோன்றிய வகையில் நடக்கலானார்.
ராஷ் பிகாரி கோஷுக்கும் மோகன்சிங்குக்கும் மனவேற்
றுமை ஏற்பட்டு மோகன் சிங்கைக் கைது செய்யுமாறு ராஷ்
பிகாரி கோஷ் கட்டளை பிறப்பித்தார். தேசிய ராணுவ
வேலைகள் இதனால் தடைப்பட்டன. 1943-பிப்ரவரி வரை
இந்த நெருக்கடி தீரவில்லை. உடனே பிப்ரவரி 10-ம் தேதி
தேசிய ராணுவத் தலைவர்களையெல்லாம் வரவழைத்து ஒரு
மாநாடு நடத்தினர். கேப்டன் ஷா நவாஸ் என்பவரை
ராணுவத் தலைவராகவும், பி. கே. ஸைகல் என்பவரை
ராணுவக் காரியதரிசியாகவும் அமைத்து தடைபட்டிருந்த
தேசிய ராணுவத்தை நடக்கச் செய்தார்.

இங்கிலையில் சுபாஷ் கிழக்கோடி தம்மை அழைக்கிறது
என்பதைக் கேட்டு பெரு மகிழ்ச்சி அடைந்தார். எப்படியா
கிலும் தாம் போகவேண்டும் என நினைத்தார். இதற்கு
ஜெர்மனியின் இசைவு வேண்டும். கிழக்கோடிக்குப் போவ
தாய் இருந்தால் சப்மரைன் மூலம்தான் போகவேண்டும்.
அது 3 மாத காலம் பிடிக்கும் எனத் தெரியும் சுபாஷுக்கு.
இந்த மூன்று மாத காலத்தில் இந்த சப்மரைன்கள் நேச
நாடுகளின் கண்ணில் பட்டால் ஆபத்து என்பதும் தெரி
யும். ஆயினும் சுபாஷ் அஞ்சவில்லை. எப்படியாயினும் கிழ்
நாட்டுக்குப் போகவேண்டும் என்ற ஆவலில் துடித்துக்
கொண்டிருந்தார்.

அதே சமயத்தில் ராஷ் பிகாரி கோஷ், சுபாஷை
அழைப்பதற்கு ஜப்பான் சர்க்கார் மூலம் முயற்சி செய்து
வெற்றி பெற்ருர். சுபாஷை அழைத்துவர ஜப்பானும் ஒரு
சப்மரைனை அனுப்பியது. ஜெர்மனியும் அதற்குத் துணை
யாக ஒரு சப்மரைனை அனுப்பியது. 1943 ஏப்ரல் மாதம்
சுபாஷை ஏற்றிக்கொண்டு ஜெர்மனியிலிருந்து இரண்டு
சப்மரைன்களும் கீழ்க் கோடியை நோக்கிக் கிளம்பின.
91-வது நாள் காலை சுமத்ராவை இரு சப்மரைன்களும்
வந்தடைந்தன. உடனே டோக்கியோவுக்கு தந்தி பறந்தது.
கீழ்க்கோடி இந்திய மக்களுக்கு இச் செய்தி எட்டியது. இந்
திய மக்கள் அனைவரும் மகிழ்ச்சியில் ஆழ்ந்தனர்.

சுமத்ராவிலிருந்து சுபாஷை டோக்கியோவிற்கு
அழைத்துச் செல்ல ஒரு விமானம் வந்தது. 1943 ஜூன்
மாதம் 20-ம் நாள் ஜப்பான் சர்க்கார் சுபாஷ் பாபுவுக்கு
ஒரு பெரும் வரவேற்பு அளித்தார்கள். டோக்கியோவில்
சுபாஷை பத்திரிகை நிருபர்கள் சூழ்ந்துகொண்டனர்.
சுபாஷ் அவர்கள் மூலம் ஒரு அறிக்கை விடுத்தார்.

> "சென்ற மகா யுத்தத்தில் வஞ்சக பிரிட்டிஷ்
> ராஜ தந்திரிகளால் நமது தலைவர்கள் ஏமாற்றப்பட்
> டார்கள். இதனுல்தான் இந்தியத் தலைவர்கள் 20
> ஆண்டுகளுக்கு முன்பே இனி ஏமாறமாட்டோம் என்ற
> முடிவை ஏற்ருர்கள். கடந்த 20 ஆண்டுகளாக என்
> தலைமுறை மக்கள் இந்தியச் சுதந்திரத்தை ஆவலோடு
> எதிர்பார்த்து உழைத்து வந்தார்கள். அதற்காகவே
> ஒரு நல்ல நேரத்தையும், எதிர்பார்த்திருந்தார்கள்.
> அந்த நேரமும் கிடைத்துவிட்டது. இந்தநேரத்தை
> இழந்தோமானுல், மறு 100 ஆண்டுகளுக்கு இது
> மீண்டும் கிடைக்காது."

"எதிரி வாளை உறுவி நிற்கிருன். ஆகவே வான்
கொண்டே அவனுடன் போராட வேண்டும். ஒத்துழை
யாமை என்பது ஆயுதப் போருக மாறவேண்டும்..."

டோக்கியோ வானொலியில் பல மொழிகளில் இச்
செய்தி ஒலிபரப்பப்பட்டது. மறுநாள் சுபாஷ் டோக்
கியோ வானொலியில் பேசினுர். கீழ்க்கோடி வானொலிகள்



முழுவதும் அவரது பேச்சை ஒலிபரப்பின. வங்க சிங்கம்
டோக்கியோ வானொலியில் கர்ஜிப்பதைக் கண்ட இந்திய
மக்கள் அனைவரும் மகிழ்ந்தனர்.

ஜூலை 2-ம் நாள் சுபாஷ் சிங்கப்பூர் வந்து சேர்ந்தார்.
ஜப்பான் சர்க்காருக்கும் தங்களுக்கும் உள்ள உறவை இந்
தியத் தலைவர்கள் எடுத்துக் கூறினுர்கள். 4-ம் தேதியன்று
இந்தியத் தலைவர்களின் மாநாடு கூடியது. ராஷ் பிகாரி
கோஷ், சுபாஷையே இந்திய லீகின் தலைமைப் பதவியை
ஏற்குமாறு வேண்டினுர். மற்றத் தலைவர்களும் வேண்டி
னர். இதற்குச் சுபாஷ் இசைந்தார். மறுநாள் காலை தாம்
தற்காலிக சர்க்கார் ஒன்றை நியமிக்க நினைத்திருப்பதாக
வும், அதற்கென்று ஒரு படையைத் திரட்டி இந்தியாவி
லுள்ள பிரிட்டிஷார்மீது போரைத் துவக்கப் போவதாக
வும் தெரிவித்தார் சுபாஷ்.

மாநாட்டினருக்கு சுபாஷ் பாபு தம் திட்டத்தைக்
எடுத்துக் கூறினுர்:

"சுதந்திரம் விரும்பும் இந்தியர்கள் காரியத்தில்
இறங்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. யுத்த நெருக்கடி
யில் ராணுவக் கட்டுப்பாடே அவசியம். அதோடு லட்சியத்
தில் குறைவற்ற நம்பிக்கையும் வேண்டும். ஆகவே கீழ்க்
கோடியில் வசிக்கும் இந்திய மக்களனைவரும் ஒருமுகப்பட
வேண்டும்.

எதிரியைக் குறித்து நீங்களெல்லாம் குறைவாக மதிப்
பிடக் கூடாது. நம் முன் கடுமையான போராட்டம் இருக்
கிறது. சுதந்திரத்தை அடைவதற்கு முன்னுல், பசி, துன்
பம், மரணம் இவைகள் நேரும் என்றே எதிர்பார்க்கவேண்
டும். இவ்வாறு நீங்கள் இருப்பீர்களாயின் சுதந்திரத்தை
அடைந்தே தீருவீர்கள் என்பது என் நம்பிக்கை.

இந்தியா லீக் இவ் வீர அறவுரையின் மூலம் புத்துயிர்
கொண்டது. ராணுவத்தினருக்கு புது உற்சாகம் ஏற்பட்
டது. இவ் விரிவுரைகளைக் கேட்டதிலிருந்து சுபாஷ் பாபு
என்றவர்களெல்லாம் அவரை நேதாஜி என்றே கூறினர்.

# 23. நேதாஜியின் வேண்டுகோள்

1943 ஜூலை 5-ம் தேதி சிங்கப்பூர் டவுன் ஹாலைச் சுற்றி கடல்போல் சூழ்ந்திருந்தனர் மக்கள். காரணம் இந்திய தேசிய ராணுவத்தினர் நேதாஜிக்கு ராணுவ வணக்கம் செலுத்தப் போகிறார்கள் என்பதுதான். இதற்கு ஜப்பான் தளகர்த்தரும் வந்திருந்தார். அக் கூட்டம் ஜப்பான் ஆட்சியில் நடந்த கூட்டம் மாதிரி இல்லை. பெண்கள் தேசிய கீதம் பாடினர். நேதாஜி வந்து நின்றார். இந்திய வீரர்கள் அவரை வணங்கிக் கொண்டே அணிவகுத்துச் சென்றனர். நேதாஜி பேசினார்.

"இந்தியாவை விடுவிக்கும் வீரர்களே!

"என் வாழ்விலேயே பெருமை கொள்ளும் நாளாக இந்நாளைக் கருதுகிறேன். இந்தியாவை விடுவிக்கும் இந்திய ராணுவம் தயாராகி விட்டது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தளமாக விளங்கிய சிங்கப்பூரிலே இதைத் திரட்டி இருக்கிறோம். இந்த ராணுவமே பிரிட்டிஷ் பிடியிலிருந்து இந்தியாவை விடுவிக்கப் போகிறது.

"என் வீரர்களே! தோழர்களே! உங்கள் போர் முழக்க மந்திரம்—டெல்லி சலோ - டெல்லிக்குச் செல்லுவோம்—என்பதே. இந்த ராணுவத்தில் கடைசி ஆள் இருக்கும்வரை இந்த லட்சியம் வெற்றி பெறும்.

"இந்தியாவின் தேசிய மேன்மையே இன்று உங்கள் கையில்தான் இருக்கிறது. இந்தியாவின் வெறுப்பு விருப்புகளுக்கு இன்று அவதார புருஷர்களாக நீங்கள் விளங்குகிறீர்கள்.........உங்களோடு இன்பத்திலும், துன்பத்திலும், மழையிலும், வெயிலி



லும், கஷ்டத்திலும், வெற்றியிலும் நான் இருப்பேன். தற்சமயம் வீரர்களின் வீராகசிற்கும் உங்களுக்குப் பசியையும், துன்பத்தையும், துயரத்தையும் தான் தர முடியும். மரணப் பாதையில் கொண்டு போய் விடமுடியும். இதைக் கண்டு நீங்கள் பொருட்படுத்த மாட்டீர்கள் என்பது என் நம்பிக்கை. இந்தியாவின் விடுதலையாகிய புனிதப் போரை நாம் மேற்கொண்டிருக்கிறோம்..."

மறுநாள் 6-ம் தேதி ஜெனரல் டோஜோவுக்கும் தாஜி சுபாஷுக்கும் மற்றொரு ராணுவ வணக்க அணிவகுப்பு நடத்தினர். ஆயிரக் காணக்கான துருப்புகள் இச் சுதந்திரச் சேனையில் சேர்ந்தார்கள். படாங் என்னுமிடத்தில் ஜூலை 9-ம் தேதி ஒரு மாபெருங் கூட்டம் கூடியது. அதில் நேதாஜி பேசியதாவது:

"ஆபத்தும் துன்பமும் நிறைந்த பிரயாணத்தை மேற்கொள்வதற்காக நான் என் வீட்டையும், நாட்டையும் விட்டு வெளியேறினேன் என்பதை உங்களுக்குச் சொல்ல வேண்டும். இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் பிடியை எப்படியும் தப்பிவிட வேண்டுமென்று நினைத்த பொழுது நான் சிறையில்தான் இருந்தேன். நான் 11 முறை சிறைசென்று என் வாழ்க்கையிலேயே நீண்ட காலம் சிறையிலேயே இருந்துவிட்டேன். சிறை வாழ்க்கை எனக்குப் புதியதும் கொடுமையும் வாய்ந்ததல்ல. வெளியுலகுக்குச் செல்லும்படி என்னை இந்தியாவின் விடுதலை தூண்டியது. இதில் ஏற்படக்கூடிய இடர்களை யெல்லாம் துச்சமாக மதித்தேன்....கடைசியாக, இந்தியாவிலிருந்து போராடுவது மட்டும் போதாது. வெளி உதவியும் தேவை என்று எனக்குப் பட்டது." இந்திய மக்கள், இந்தியாவிலிருந்து நடத்தும் போராட்டத்துக்கு வெளியிலிருந்து ராணுவ உதவி வேண்டும். கீழ்க்கோடியில் வசிக்கும் நாம் இதைத்தான் இப்பொழுது செய்யப் போகிறோம். இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் துருப்புகளைத் தாக்கி விரட்டவும் போகிறோம்..."

"கீழ்க்கோடியில் இருக்கும் இந்தியர்கள் 3 லட்சம் துருப்புகளையும் 3 கோடி டாலர்களையும் திரட்டவேண்டும்" என்று சுபாஷ் கூறினார். நேதாஜி பேசிக்கொண்டிருக்கும்போது திடீரென மழை கொட்டியது. லட்சம் பேர்களுக்கு மேலுள்ள கூட்டத்தில் ஒரு சிறு சந்தடிகூட கேட்கவில்லை. சிறு குழந்தைகள்கூட இருந்த இடத்தை விட்டு அசையவில்லை. நேதாஜி, நேதாஜியாகவே பேசினார்.

## 24. தலைமைச் சேனாதிபதி

ஆகஸ்ட் 25-ம் தேதி இந்திய தேசிய ராணுவத்தின் தலைமைப் பதவியை நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ஏற்றார். அன்று கீழ்கண்ட ராணுவக் கட்டளை வெளியாகியது.

"ஆஜாத் ஹிந்த் பவுஜின் நன்மையைக் கருதியும் இந்தியாவின் விடுதலையைக் கோரியும் ராணுவத்தின் தலைமைப் பதவியை இன்றிலிருந்து நான் ஏற்கிறேன். இது எனக்கு மகிழ்ச்சியும் பெருமையும் அளிக்கிறது. 38 கோடி மக்களின் தொண்டன் என்றே நான் நினைக்கிறேன். நமது போராட்டம் விரைவில் முடிவதல்ல. கொடுமை நிறைந்ததும், நீண்டகாலத்துக்கும் நடக்கக் கூடியதுமான போராட்டத்தை மேற்கொண்டிருக்கிறோம்......" டில்லி சலோ " என்பதே நமது தாரக மந்திரம். புது டில்லி வைஸ்ராய் மாளிகையில் நமது தேசிய மூவர்ணக்கொடி பறக்கும்வரை நமது போராட்டத்தை துணிந்து முன்நின்று நடத்துவோமாக......".

ஒவ்வொரு இடத்திலும் தேசிய ராணுவப் படை திரட்டப் பட்டது. சிங்கப்பூர், கோலாலம்பூர், ஸெலாட்டர் ஆகிய இடங்களில் படை திரட்டும் வேலைகள் நடைபெற்றன. செப்டம்பர் 28-ம் தேதி மொகலாய கடைசி மன்னரும், 1857-ல் இந்திய விடுதலைக்கு வீரப் போர் புரிந்தவருமான பகதூர் ஷாவின் சமாதிக்கு நேதாஜி சென்றார். அந்தச் சமாதி அருகே நின்று கீழ்வருமாறு கூறினார்.

"இந்தப் புனித சமாதியின் முன்னே, சக்கரவர்த்திக்கு சக்கரவர்த்தியாகவும், வீரருக்கு வீரராகவும் வாழ்ந்த சுதந்திரத்தின் கடைசி போர் வீரரின் முன்னே நின்று, நாம் நமது தளராத உறுதியைக் கூறுவோம்......இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் பொது எதிரியாக இருக்கிறவர்களை, முடிவாக முறியடிக்கும்

வரை போராடுவோம். சுதந்திர இந்திய வீரர்களின் உள்ளத்திலே நம்பிக்கை துளி அளவாவது இருக்கும்வரை, இந்தியாவின் வாள் லண்டனின் இருதயத்தைப் பிளந்து கொண்டே இருக்கும்......".

மாஜி போர்க் கைதிகள் பலர் தேசிய ராணுவத்தில் சேர்ந்தனர். இதற்குள் அக்டோபர் மாதம் வந்தது. அக்டோபர் 2-ம் தேதி மகாத்மா பிறந்த தினத்தைக் கொண்டாடுவது என முடிவு செய்யப்பட்டது. மலேயாவிலும் சிங்கப்பூரிலும் ஒவ்வொரு இந்தியர் வீட்டிலும் தேசியக் கொடி பறந்தது. அன்று இந்திய மக்கள் தேசிய கீதம் பாடினர். நேதாஜி வானொலியில் மகாத்மாவைப் பற்றிப் பேசினார்.

"இந்தியாவில் மகாத்மா காந்தி செய்திருக்கும் பணி வரலாற்றில் தனி இடம் பெற்றிருக்கிறது. அவரது பணியை தேச மக்கள் பொன் எழுத்தால் பொறித்து அதை எந்த நாளும் காப்பார்களென்பது நிச்சயம்.

"......காங்கிரஸ் துவங்கியபோது தலைவர்களெல்லாம் மிதவாதிகளாகவே இருந்தனர். எனினும் 20 ஆண்டுகளுக்குள் ஒரு புத்துணர்ச்சி காங்கிரஸில் புகுத்தப்பட்டது. 1905-ம் ஆண்டில் அரவிந்தகோஷ் போன்ற தலைவர்களைக் கண்டோம். இந்தியாவுக்கு முழு விடுதலை வேண்டும் என அவர்கள் முழங்குவதைக் கேட்டோம்.........முதல் மகா யுத்தத்தின்போது பிரிட்டிஷ் ராஜிய வாதிகள் சொல்லிய பொய் வாக்குறுதிகளை இந்தியத் தலைவர்கள் உண்மை என நம்பினர்......கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக இந்தியாவின் விடுதலை கோரிக்கைக்காக மகாத்மா பாடுபட்டு வருகிறார். 1920-ல் தனது புது ஆயுதமான சத்தியாக்கிரகத்துடன் மகாத்மா அரசியல் மேடைக்கு வந்திருக்காமல் இருந்தால், இந்தியா மிகவும் ஈனமான நிலையில்தான் இருந்திருக்க முடியும். இது மிகையல்ல. இந்திய லட்சியத்திற்கு அவர் செய்திருக்கும் பணி மிகச் சிறந்தது; அதற்கு ஈடு இணையே கிடையாது. பல



சூழ்நிலைகளுக்கிடையே மகாத்மா, தன் ஆயுள் நாளில் சாதித்திருப்பதுபோல எந்தத் தனி மனிதனும் சாதித்திருக்க முடியாது. ஒரு வேளை முஸ்தாபா கமாலைக் கூறலாம். தன்மதிப்பு, தன்னம்பிக்கை என்ற இரண்டு பாடங்களையும் மகாத்மாவிடமிருந்து இந்திய மக்கள் கற்றுக்கொண்ட சிறந்த பாடம்...... 1920 டிசம்பரில் நாகபுரியில் கூடிய காங்கிரஸ் மகா சபையில்தான் மகாத்மா தனது ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்கி, "இந்தியாவுக்கு இன்று வாள் இருந்திருக்குமானால் அதை இந்தியா தன் உறையினின்று இழுத்திருக்கும்" எனக் குறிப்பிட்டார்......

மேலும் அவர் சுதந்திரப் போராட்டம் நீண்டதாகவும் கடினமானதாகவும் இருக்கும்; எனினும் நாம் போராடிக் கொண்டேதான் இருக்கவேண்டுமெனக் கூறினார்.

# 25. சுதந்திர சர்க்கார் தோற்றம்

அக்டோபர் மாதம் 21-ம் தேதி இந்திய வரலாற்றி
லேயே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய
நிகழ்ச்சி நடந்தது. எந்த ஒரு லட்சியத்துக்காக இரவு பக
லென பாராது நேதாஜி உழைத்து வந்தாரோ, அந்த லட்சி
யம் அன்று கைகூடியது. இந்தியாவின் தற்காலிக சுதந்திர
சர்க்கார் அன்று நிறுவப்பட்டது. சர்க்காரின் தலைவரான
நேதாஜி முதலில் விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொண்
டார். பல்லாயிரக்கணக்கான துருப்புகள் முன்னிலையில்
நேதாஜி எழுந்து நின்றார். அவர் நின்ற இடத்தில் தேசியக்
கொடிகள் ராஜ கம்பீரமாகப் பறந்துகொண்டிருந்தன.
அவரது விசுவாசப் பிரமாணம் கீழ்வருமாறு :

> "இந்தியாவுக்கும் 38 கோடி என் தேசமக்களுக்
> கும் விடுதலையைக் கொண்டுவர, புனிதப் போரான
> விடுதலைப்போரை, சுபாஷ் சந்திர போஸ் என்ற நான்,
> என் கடைசி மூச்சு இருக்கும்வரை நடத்துவேன்
> என்று கடவுளின் பெயரால் பிரமாணம் எடுத்துக்
> கொள்கிறேன். இந்தியாவின் ஊழியனாக இருந்து 38
> கோடி இந்திய சகோதர சகோதரிகளின் நலனைக்
> காப்பதிலேயே என் ஆயுள் நாளைக் கழிப்பேன்.
> இதுவே எனது தலையாயக் கடன். சுதந்திரத்தை
> அடைந்த பின்னரும் அதைக் காத்து நிற்க, என்
> கடைசி சொட்டு ரத்தம் இருக்கும் வரை போராடத்
> தயாகராக இருப்பேன்."

இந்த விசுவாசப் பிரமாணத்தைப் படித்துமுடிப்பதற்
குள் 3 தடவை நேதாஜி படிப்பதை நிறுத்த வேண்டி இருந்
தது. அவர் உள்ளத்திலேயே குமுறிக் கொண்டிருந்த
உணர்ச்சி வெள்ளத்தின் ஆவலால் படிக்கவிடாதபடி தடுத்
தது. அவருக்குப் பிறகு காப்டன் லக்ஷ்மி, எஸ். ஏ. ஐயர்,
லெப்டினென்ட் கர்னல் ஏ. ஸி. சட்டர்ஜி, அஜீஸ் முகமத்,
என். ஸி. பந்த், ஜெ. கே. பான்ஸ்லே, ஏ. டி. லோகநாதன்,



ராஷ் பிகாரி கோஷ் முதலியவர் விசுவாசப் பிரமாணம் எடுத்
துக் கொண்டனர். விசுவாசப் பிரமாணம் முடிந்த பிறகு
நேதாஜி, தற்காலிக சுதந்திர சர்க்கார் ஏற்பட்டு விட்ட
தாகப் பிரகடனப் படுத்தினார். பிரகடனத்திற்குப் பிறகு
அவர் கூறியதாவது :

> "...இந்தியாவில் போராட்டத்தைச் சர்க்காருக்கு
> எதிராக நடத்த இயலவில்லை. ஆகவே சுதந்திரச் சர்க்
> காரை ஏற்படுத்தும் பொறுப்பு, கிழக்காசியாவில்
> உள்ள இந்தியச் சுதந்திர லீகைச் சேர்ந்ததாகியது...
> ஒவ்வொரு இந்தியரின் விசுவாசத்தையும் பெறும்
> உரிமை இந்தச் சர்க்காருக்கு உண்டு. ஒவ்வொரு பிர
> ஜைக்கும் சமமான உரிமைகளும், மத சுதந்திரமும்
> தருவதாக இந்தச் சர்க்கார் உறுதி அளிக்கிறது."

சேனாதிபதி, பிரதம மந்திரி, யுத்த மந்திரி, அயல்நாட்டு
மந்திரி என்னும் முறையில் நேதாஜி இந்தப் பிரகடனப்
பத்திரத்தில் கையெழுத்திட்டிருந்தார். காப்டன் லக்ஷ்மி,
பெண்கள் இயக்கத் தலைவி என்னும் முறையில் கையெழுத்
திட்டார். அதே முறையில் பிரதம மந்திரி எஸ். ஏ. ஐயரும்,
மற்ற மந்திரிகளும் கையெழுத்திட்டனர். இந்திய தேசியக்
கொடிகள் இப்பொழுது சுதந்திர சர்க்காரின் கொடிக
ளாகப் பறந்தன.

## 26. போர் முழக்கம்

தேசிய சர்க்கார் ஏற்பட்ட மறுநாள் அக்டோபர் 22-ம் தேதி ஜான்ஸி ராணுவப்படை பயிற்சி முகாமை நேதாஜி திறந்து வைத்தார். இந்தியா ஒரு ராணியை மட்டுமல்ல, பல ஆயிரக்கணக்கான ஜான்ஸி ராணிகளைத் தோற்றுவிக்க முடியுமென்று நேதாஜி உணர்ச்சி ததும்பப் பேசினார். துப்பாக்கிச் சத்தம் நின்ற இந்தியப் பெண்கள் நேதாஜிக்கு ராணுவ வணக்கம் செலுத்தினார்கள்.

ஜப்பான் சர்க்கார் நேதாஜி தலைமையில் ஏற்பட்டிருக்கும் சுதந்திர சர்க்காரை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தது. நேதாஜி சர்க்காரின் கொள்கையான இந்திய விடுதலைக்கு ஜப்பான் தன்னாலியன்ற உதவிகளும் ஒத்துழைப்பும் தருவதாக ஜப்பான் பிரதமர் தெரிவித்தார்.

படேங் என்னுமிடத்தில் லக்ஷக்கணக்கான மக்கள் கூடியிருந்தார்கள். ஆயிரக்கணக்கான இந்தியத் துருப்புகளும் சூழ்ந்திருந்தன. அன்று நேதாஜி தன் மெய்க்காப்பாளர்களுடன் ராணுவ உடையில் வந்து ஒரு முக்கியமான அறிக்கை வெளியிட்டார்:

> "24-ம் தேதி இரவு நடுச் சாமத்துக்கு 5 நிமிஷங்களுக்குப் பின்னால், ஆஜாத் ஹிந்தின் தற்காலிக சர்க்கார், நமது பரம விரோதிகளான பிரிட்டன் மீதும் அவர்களின் நேச நாடான அமெரிக்கா மீதும் போர் முழக்கம் செய்துவிட்டது. இதை உங்கள் முன்னிலையில் அறிவிக்கிறேன்......".

நேதாஜி முடிப்பதற்குள், "சலோ டில்லி—ஜெய் ஹிந்த்—நேதாஜிக்கு ஜே" என்ற கூக்குரல்கள் வான் முகட்டை எட்டின.

'சுதந்திரம் பெற முனைந்திருக்கும் இந்திய தாற்காலிக சர்க்காருக்கு பொருள் உடையவர்கள் பொருள் தரவேண்



டும். உடலில் திறனுடையவர்கள் ராணுவத்தில் சேர வேண்டும்' என்று 26-ம் தேதி நேதாஜி பேசினார். உடனே மறுநாள் ஒரு கோடியே 30 லட்சம் டாலர்கள் சுதந்திரச் சர்க்காருக்கு அனுப்பப்பட்டது. அன்று மாலை ஜெர்மனி இந்திய சுதந்திரச் சர்க்காரை ஏற்றுக் கொண்டதாகச் செய்தி கிடைத்தது. ஐரிஷ் குடியரசு மக்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பினர். சீனா, மஞ்சூரியா, குரோஷியா, இத்தாலி முதலிய சர்க்கார்களும் சுதந்திரச் சர்க்காரை ஏற்றுக் கொள்வதாகவும் நேதாஜியின் முயற்சி வெற்றிபெற வேண்டுமென செய்திகள் அனுப்பின.

நேதாஜியின் வேண்டுகோளின்படி 1943-ம் ஆண்டின் முடிவுக்குள் அந்தமான், நிக்கோபார் தீவுகள் சுதந்திரச் சர்க்காருக்குக் கிடைத்தன. நேதாஜி அந்தமான் தீவுகளின் பெயரை 'தியாகிகளின் தீவு' (ஷாஹித்) என்று மாற்றினார்.

இதற்குள் 3 தரைப்படை பட்டாளங்களும், ஒரு இஞ்சினியரிங் படை பட்டாளமும் சேர்ந்து விட்டது. கொரில்லாப் படை போராட்டத்துக்கென ஒரு சேனையும் திரண்டது. காந்திஜி கொரில்லாப் படை, ஆஜாத் கொரில்லாப் படை நேருஜி கொரில்லா படை என 3 பெரிய படைகள் இருந்தன. அஸ்ஸாம், ரங்கூன், மலேயா ஆகிய இடங்களுக்கு ஒவ்வொரு படையாக அனுப்பி வைத்தார்.

ஜப்பான் சர்க்கார் நேதாஜியின் திறமையை இப்பொழுதுதான் உணர்ந்தனர். இது அவர்களுக்கு வியப்பை ஊட்டியது. வர வர இவ்வியப்பு பொறாமையாக மாறியது.

1944 பிப்ரவரி 4-ம் தேதி சுதந்திர இந்தியப் படையின் முதல் தாக்குதல் துவக்கம். அரக்கான் முனையில் இந்தியத் துருப்புகள் பிரிட்டிஷ் துருப்புகளைத் தாக்கினர். இது மேஜர் மிஸ்ரா என்பவர் தலைமையில் துவங்கியது. தாக்குதல் துவங்கியதும் நேதாஜி பர்மா வந்து சேர்ந்தார்.

மேஜர் மிஸ்ரா மிக வீரத்துடன் போராடினார். வெற்றிக்குமேல் வெற்றி கிடைத்தன. நேதாஜிக்கு இச் செய்தி

கள் எல்லாம் உடனுக்குடன் அனுப்பப்பட்டன. 'சர்தார்-
இ-ஜங்' என்ற பட்டத்தை மேஜர் மிஸ்ராவுக்கு
நேதாஜியே வழங்கினர். 'போராட்டத்தின் தலைவன்' என்
பதுதான் அப் பட்டத்தின் பொருள்.

மார்ச் 18-ல் இந்திய ராணுவம் அஸ்ஸாம் எல்லையைத்
தாண்டிவிட்டது. இந்திய வீரர்கள் அஸ்ஸாமில் காலடி
எடுத்து வைத்ததும் நேதாஜி உணர்ச்சி மிக்க ஒரு அறிக்கை
வெளியிட்டார்:

" அதோ - அந்த நதிகளுக்கும், வனங்களுக்கும், மலை
களுக்கும் அப்பால் தெரிவதுதான் நமது லட்சிய பூமி - நாம்
உருண்டு பிறண்ட மண் - அந்த தேசத்தின் விடுதலைக்கா
கப் போராடுவோம்—வழியில் இடையூறு ஏற்பட்டால்
வீரர்களாக மரணத்தைத் தழுவுவோம். மண்ணோடு மண்
ணாகப் போனாலும், அந்த மண் படிந்த சாலை, நமது லட்சிய
பூமிக்குச் செல்லும் பாதையென ஆறுதல் கொள்வோம்...
சலோ...டெல்லி..."

பிரிட்டிஷ் ராணுவத்திலிருந்த இந்தியர் ஒரு சமயம்
இம்பால் முனையில் சுதந்திர வீரர்களை எதிர்க்க வேண்டி
ஏற்பட்டது. சுதந்திர வீரர்கள், " தாய்நாட்டின் விடு
தலைக்கு எங்களுடன் சேர்ந்து போராடுங்கள் " என்று
எழுதி, எதிரே இருக்கும் இந்தியத் துருப்புகளிடம் காட்டி
னர். பிரிட்டிஷ் ராணுவத்திலிருந்த இந்தியர், "நீங்களெல்
லாம் ஜப்பானின் அடிமைத் துருப்புகள். வயிறு காய்ந்
திருக்கும் நீங்கள் எங்களுடன் சேர்ந்தால் வயிறார சோறு
கிடைக்கும்" என்றும் சொன்னார்கள். உடனே நேதாஜியின்
வீரர்கள், "நாங்கள் நேதாஜியின் வீரர்களே தவிர, ஜப்
பானியரின் அடிமைகளல்ல. சுதந்திர வாழ்வில் புல்லைத்
தின்றாலும் தின்போம். உங்களைப்போலிருந்து நெய்யும்
பாலும் உண்ணமாட்டோம்" என்றார்கள். இச் சமயத்தில்
நேதாஜி வீரர்கள் தேசிய கீதமும் கொடிப்பாட்டும் பாடி
னார்கள். உடனே எதிரில் இருந்த அவ் வீரர்களும் இவர்க
ளுடன் சேர்ந்து பாடினார்கள்.

வெண்ணெய் திரண்டு வரும் சமயத்தில் ஜப்பான் சர்க்
கார் பொறாமை கொண்டு மோசமாக நடக்கத் துவங்கினர்.



உணவு, துணிமணி, வெடிமருந்து உதவி, ஆகியவைகளைக்
குறைக்க முற்பட்டனர். உணவு நெருக்கடி உச்சநிலை
அடைந்தது. நேதாஜி சுபாஷ் கவலையால் வருந்தினர்.
ஜூன் 4-ம் தேதி பலேல் விமான நிலையத்தைச் சூழ்ந்து
கொண்டனர். பிரிட்டிஷார் இதை எதிர்பார்க்கவில்லை.
உடனே சரணாகதி நடந்தது. உணவும் கிடைத்தது. இந்தி
யத் துருப்புகள் வெற்றி பெற்றதுடன் புத்துணர்வும்
பெற்றனர்.

பர்மாவில் 4 இந்தியப் பிரபுக்கள் சிலர் உதவியால்
தேசிய சர்க்காரின் பார்வையில், தேசிய பாங்கு ஒன்று துவக்
கினர். சுதந்திர சர்க்காரின் சார்பில் கரன்ஸி நோட்டுகள்
அச்சடிக்கப்பட்டன. நேதாஜி படமும், அவரின் கையெழுத்
தும் கரன்ஸி நோட்டுகளில் விளங்கியது. ஜப்பான் நோட்டு
களை விட இந்த நோட்டுகளையே மக்கள் நம்பினர்.

நேதாஜி தலைமையில் 11 இலாக்காக்கள் திறமையாக
வேலை செய்து வருவது ஜப்பானுக்குக் கஷ்டமாகவும்
பொறாமையாகவும் இருந்தது. எஸ். ஏ. ஐயர் தலைமையில்
விளம்பர இலாக்கா மிகச் சிறப்பாக வேலை செய்தது. ஆங்கி
லத்திலும் தமிழிலும் மற்றும் பல மொழிகளிலும் செய்
தித் தாள்கள் வெளியாயின.

நேதாஜி தம் துருப்புகளை நடத்திய விதம், அவர்கள்
அனைவரும் அவரிடத்தில் வைத்திருந்த அன்பை வளர்க்கத்
தான் செய்தது. துருப்புகள் உண்ணும் உணவைத் தானே
உண்டு பார்த்து, நன்றாய் இருந்தால்தான் அதை அனுப்பி
வைப்பாராம். அவ்வளவு அன்பு துருப்புகளிடத்தில்.

ஜுலை மாதம் ரங்கூனிலிருந்து ஒலிபரப்பு மூலம்
மகாத்மா காந்திக்கு, நேதாஜி ஒரு வேண்டுகோள் விடுத்
தார்:

" மகாத்மாஜி! தேசத்தின் தந்தையே!!

" பிரிட்டிஷ் சிறையில் அன்னை கஸ்தூரிபா
இறந்ததற்குப் பின்னால் தங்களுடைய தேக நிலையைப்
பற்றி இந்தியர்களுக்குக் கவலை ஏற்பட்டிருப்பது
இயற்கை.

"மகாத்மாஜி! நான் இன்று ஏற்று நிற்கும் கடுமையான வேலையை, அதை ஏற்பதற்கு முன்னால் ஒரு நாளல்ல, ஒரு வாரமல்ல, பல மாதங்கள் வரை நினைத்தேன். என் நாட்டு மக்களுக்கு நீண்ட காலமாக நான் பணி புரிந்திருக்கிறேன்...பொது வாழ்வில் ஈடுபட்ட எந்த ஊழியனுக்கும் கிடைக்கக் கூடியதான மாபெரும் உன்னதப் பதவியை, என் தேசமக்கள் என்பால் கொண்ட அன்பினால் எனக்குத் தந்தார்கள். அதற்கு என்றும் நான் நன்றி செலுத்துகிறேன். போர்க் காலம்தான் நமக்குச் சரியான சமயம். இதே மாதிரி அரியதொரு காலம் வேறு கிடைக்குமென்றால், நான் வீட்டைத் துறந்திருப்பது கடினமே. அச்சு நாடுகள் என்னை ஏமாற்றி இருக்குமா என்ற கேள்விக்கு நான் பதில் சொல்லியே ஆகவேண்டும். உலகிலேயே பழுத்த வஞ்சகமான ராஜ தந்திரிகள் பிரிட்டிஷார் என்பதை யாரும் மறுக்க முடியாது. அவர்களே என்னை ஏமாற்ற முடியவில்லை எனின் வேறு எந்த ராஜ தந்திரியும் என்னை ஏமாற்ற முடியாது.

"என் தாய்நாட்டின் மேன்மையையோ, நலன்களையோ பாதிக்கும் முறையில் சிறிதளவு கூட நான் பிறழ்ந்து நடக்க மாட்டேன்.

"தேசத்தின் தந்தையே! இந்திய விடுதலையை எண்ணி நடக்கும் இந்தப் புனிதமான போராட்டத்தில் உங்கள் வாழ்த்துக்களை நாங்கள் பெற விரும்புகிறோம்..."

ஏப்ரல் மாதம் போர்க்களத்திற்கு நேதாஜியே சென்றார். போர் வீரர்களை ஊக்குவித்து போராட்டத்தைத் திறமையாக நடத்தச் செய்தார். இரவு பகலெனப் பாராது நேதாஜி இங்குமங்கும் போவார். குண்டுகள் வீரிட்டு வரும் போதுகூட அச்சங்கொள்ளாதிருப்பது மற்ற வீரர்களுக்குப் பெரு வியப்பைத் தரும்.

இச்சமயத்தில் போரின் நிலைமை மாறியது. ஜப்பானியக் கப்பல்கள் நூற்றுக் கணக்கில் மூழ்க்கடிக்கப்பட்டன. அமெரிக்கா ஜப்பானின் முக்கியத் தீவுகளின்மீது குண்டு



களைப் பொழியத் துவங்கிவிட்டன. இந்தியாவுக்கு ஏராளமான துருப்புகளை பிரிட்டிஷாரும் அமெரிக்கரும் அனுப்பி வைத்தார்கள். ஜப்பான் நிலைமை வரவர மோசமாகிவிட்டது. ஜப்பானுக்கு உணவு நெருக்கடி அதிகமாகியது.

ஆண்களும் பெண்களும் மட்டும் இப்பொழுது ராணுவத்தில் சேரவில்லை. சின்னஞ் சிறு பாலகர்கள்கூட சேர்ந்தார்கள். 9 வயதிலிருந்து 14 வயது வரை உள்ள சிறுவர்களைக்கொண்டு 'பாலர் படை' என்று ஒரு படை திரட்டப்பட்டது. கிழக்காசியா எங்கும் இச்சேனையில் சேர சிறுவர் சிறுமியர் திரண்டு வந்தனர். மூன்றே மூன்று வாரத்தில் இச்சேனைக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. ராணுவத்தில் சேருவது ஆபத்து என்று பேசி வந்தவர்களை எல்லாம் இந்த பாலர் படை அச்சத்தைப் போக்கச் செய்தது.

1945 ஜனவரியில் பிரிட்டிஷார் மாந்தாலேயில் மீண்டும் நுழைந்ததும், "ஜெய் ஹிந்த்" என்று யாரும் சொல்லக்கூடாது என்று ஒரு கட்டளை பிறப்பித்தார்கள். ஆனால் பாலர் படையினர், பிரிட்டிஷ் துருப்புகளைப் பார்க்கும்போதெல்லாம் "ஜெய் ஹிந்த்" என்றனர். சின்னஞ் சிறு குழந்தைகளை என்ன செய்வது? தடை உத்திரவுதான் என்ன செய்ய முடியும்?

இந்நிலையில்தான் பெரு மழை ஒன்று ஏற்பட்டது. போர் முனைக்கு விநியோகம் வந்து சேர முடியவில்லை. பிப்ரவரி மாதத்திலிருந்து முன்னேறி வந்த நேதாஜி படையினர் ஜூலை மாதம் தங்கள் முன்னேற்றத்தைக் கைவிட வேண்டி ஏற்பட்டது. இப்பொழுது பிரிட்டிஷ் படை பர்மாவில் முன்னேறத் துவங்கின. உணவு நெருக்கடியாலும், தளவாட நெருக்கடியாலும் நேதாஜி வீரர்கள் வாபஸ் வாங்க ஏற்பட்டது. ஆனால் மீண்டும் எப்படியும் தாக்கி முன்னேறலாம் என்ற எண்ணம் அவர்களிடத்து இருந்தது. பிரிட்டிஷார் முன்னேற்றத்தைக் கண்டு கீழ்க்கோடியிலிருந்த இந்தியர் யாவரும் தயக்கம் கொள்ளவே இல்லை.

1944 ஏப்ரலில் நேதாஜி ரங்கூனில் இருந்தார். இச்சமயம்பிரிட்டிஷார் ரங்கூனை நெருங்கிவிட்டார்கள். தம்துருப்புகளுடன் கடைசிவரையில் போராடுவேன் என்று கூறினார்.

ஆனால் நேதாஜி சர்க்கார் மந்திரிகளும், ராணுவத் தலைவர்களும், ஜப்பான் அதிகாரிகளும் அவரை வலுக்கட்டாயமாக பர்மாவை விட்டுப் போய்விடுமாறு கூறினர். 28-ம் தேதிவரை நேதாஜி இதற்கு இசையவே இல்லை. 23-ம் தேதி பிரிட்டிஷ் துருப்புகள் நெருங்கின. சுதந்திர சர்க்காரின் மந்திரிகள் அனைவரும் திரண்டுவந்து நேதாஜியை வெளியேறத்தான் வேண்டுமெனக் கட்டாயப்படுத்த நேதாஜி 24-ம் தேதி மாலைதான் ரங்கூனை விட்டு வெளியே போனார். போவதற்கு முன்னர் ஜான்ஸி ராணுவத்தினர் அனைவரையும் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைத்தார். நேதாஜி ரங்கூனை விட்டுக் கிளம்புமுன் கீழ்க்கண்ட செய்தியை விடுத்தார்.

"வீரமிக்க துருப்புகளே! கவலை தோய்ந்த மனதுடன் நான் பர்மாவை விட்டு வெளியேறுகிறேன். பர்மாவில் நீங்கள் பிப்ரவரி மாதம் முதல் எத்தனையோ சிறந்த போராட்டங்களை நடத்திவிட்டீர்கள்...... பர்மாவிலும் இம்பாலிலும் நமக்குத் தோல்விகள் ஏற்பட்டன.

"எனக்குத் தோல்வியே பிடிக்காது. நீங்கள் அரக்கானிலும் இம்பாலிலும் நடத்திய போராட்டங்களை வீரப் போராட்ட வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

"இந்த இருள் சூழ்ந்த நேரத்தில் நான் உங்களுக்கு ஒரு வார்த்தைதான் கூற விரும்புகிறேன். அதாவது நீங்கள் தோல்வியே அடைந்தாலும் கண்ணியத்துடனும், வீரத்துடனும், ஒழுக்கத்துடனும் அத்தோல்வியை ஏற்று நில்லுங்கள். அடிமைகளாகப் பிறக்காமல், சுதந்திரர்களாகப் பிறக்கும் எதிர்கால இந்தியச் சந்ததி உங்களை வாழ்த்தும், உங்களின் தியாகங்களைப் பாராட்டும்........

"என் மனப்போக்கின்படி என்னை விட்டுவிட்டால் நான் உங்களுடனேயே பர்மாவில் இருந்திருப்பேன். ஆனால் என் அமைச்சர்களும், படைத்தலைவர்களும் என்னை வெளியேறும்படிக் கூறுகிறார்கள்.



அவர்களின் ஆணையை நான் மேற்கொள்ளவேண்டியிருக்கிறது. சுதந்திரப் போரை மேற்கொண்டு நான் நடத்தவே போகிறேன்."

சுபாஷ் சந்திர போஸ்
ஆஜாத் ஹிந்த் பௌஜ்

1945 ஏப்ரல் 24-ம் தேதியன்று இந்த அறிக்கை வெளியாகியது. மே 14-ம் தேதியன்று நேதாஜி பாங்காங் அடைந்தார். உடனே அங்கிருந்து ராணுவத் திட்டங்களை வகுக்கத் தலைப்பட்டார். இச்சமயத்தில்தான் வேவல் சிம்லாவில் மாநாடு கூட்டியது. நேதாஜி ஜூன் 18-ம் தேதி சிம்லா மாநாட்டை இந்தியா ஏற்கக்கூடாதென்று சிங்கப்பூரில் பேசினார்.

## 27. சந்திர சூரியர் இருக்கும்வரை....

நேதாஜி பாங்காங் வந்தும் நிலைமை சரிப்படவில்லை. ஜப்பான் வலிமை வரவர அடக்கப்பட்டு வந்தது. நேச நாடுகள் ஏராளமான விமானங்களை அனுப்பித் தாக்கிவந்தார்கள். பிரிட்டிஷ் விமானங்கள் சிங்கப்பூரையும் தாக்கத் துவங்கியது. இச்சமயத்தில் நாகாசாகி, ஹிரோஷிமா ஆகிய தீவுகளில் அணுகுண்டை வீசினார்கள். இரு தீவுகளும் காடுகளாயின. ஜப்பானால் இனியும் தாக்குபிடிக்க இயலவில்லை. ஆகவே 13-ம் தேதியன்று ஜப்பான் சரணாகதி என்றது.

நேதாஜி அன்று பாங்காங்கிலிருந்து விமானத்தில் கிளம்பியதாகவும் விமானம் பார்மோஸா அருகே நொறுங்கி விழுந்ததாகவும் அதில் காயமடைந்த நேதாஜி மாண்டாரெனவும் ஒரு செய்தி வந்தது. ஜப்பான் வானொலியே இச்செய்தியை ஒலிபரப்பியது. இச் செய்தியைக் கேட்டு இந்தியாவே திடுக்கிட்டது. மகாத்மா இதை நம்பவில்லை எனக் கூறினார். நேதாஜி ஏறிச் சென்ற விமானத்தில் கர்னல் ஹபிபுர் ரஹ்மானும் உடன் சென்றதாகவும், அவர் இந்தியா திரும்பியபோது மகாத்மாவைக் கண்டு நேதாஜி விமான விபத்தில் இறந்தது உண்மைதானெனக் கூறினார்.

நேதாஜி உலகமே வியப்புறும் வண்ணம் பல அரிய செயல்களைச் செய்து காட்டியபடியால் அவர் இறந்திருக்க மாட்டாரென்பது இந்தியர் நம்பிக்கை. சுதந்திர வாயிலை அடையும் தருவாயில் இருந்த இந்தியா நேதாஜிக்கு சிறந்த வரவேற்பு அளிக்கவும் எண்ணியிருந்தனர். விடுதலையாகி வரும் நேதாஜி வீரர்கள், நேதாஜி இறந்தாரா, இல்லையா? என்பதைக் குறித்து பலவாறாகக் கருதி வந்தனர்.

1942 மார்ச் 23-ம் தேதி "சுதந்திர இந்தியா காங்கிரஸ்" என்று டோக்கியோவில் ஒரு மாநாடு கூடியதாகவும், அம்மாநாட்டுக்கு வந்துகொண்டிருந்த விமானம் ஜப்பான் கரையருகே நொறுங்கி விழுந்ததில் நேதாஜி மாண்டாரெனவும் வியானஸ் வானொலி, டோக்கியோ செய்தி ஒன்றை அறிவித்தது. இறுதியில் இச் செய்தியும் பொய்யென்று தெரிந்தது.



நேதாஜியின் புகழை இந்தியா அறிந்து விட்டது. ஓர் ஆண்டுக்குள் ஒரு தேசிய சர்க்காரை ஏற்படுத்தி, ஒரு ராணுவத்தையும் திரட்டி போர் தொடுத்த அவரின் திறமையை இந்தியர் நன்கு அறிந்து விட்டனர். நேதாஜி சர்க்கார் திறம்பட வேலை செய்திருப்பதைக் கேட்கும் ஒவ்வொரு இந்தியரும் இன்று பெருமை கொள்ளுகிறார்கள். ஜாதிப் பூசல்களும் வகுப்பு வாதப் பூசல்களும் இல்லாமல் இந்திய மக்கள் ஆள முடியும் என்று நேதாஜி உலகமறிய தெரிவித்து விட்டார். ஆகவே 'மைனாரிட்டி, மெஜாரிட்டி' என்று கூறுவதெல்லாம் வெறும் ஏமாற்று வித்தை என்று அனைவரும் அறிந்தனர். தம் உயிருக்கே ஆபத்தை விளைவிக்கும் பயணத்தை நேதாஜி மேற்கொண்டு சென்றாரென்றால் அதற்கு ஒரே ஒரு காரணம் அவரது தேச பக்திதான்.

நேதாஜிக்கு வயது 49. அவர் அரசியல் வாழ்வில் ஈடுபடும்போது வயது 24. இந்த 25 ஆண்டுகளில் அவர் 10 ஆண்டுகளுக்கு மேலாக சிறையிலும் நாடு கடத்தலிலும் கழித்தார். எஞ்சிய ஆண்டுகளை சிறையின் பரிசாகக் கிடைத்த உடல் நோயில் கழித்தார். அவரது வாழ்க்கை தியாக வாழ்விலேயே கழிந்தது.

இந்தியர் உள்ளங்களில் இன்று நேதாஜி கோயில் கொண்டு விட்டார். மகாத்மா நேதாஜியைக் குறித்துக் கூறியதாவது:

"நேதாஜியின் வீரத்தையும் தேச பக்தியையும் நான் முன்பே அறிவேன். ஆனால் அவரின் செயலாற்றலை இப்பொழுதுதான் அறிகிறேன். வீரராகத் திகழ்ந்த நேதாஜி இந்தியர் உள்ளத்தில் என்றென்றும் இருப்பார்."

பண்டித நேரு, நேதாஜியின் புகழைப்பற்றிக் கூறியதாவது:

58

"நேதாஜி போஸின் வீரச் செயல்களைக் கேட்கும் பொழுது நம்மை அறியாமலேயே நமக்கு அவர்மீது மதிப்பு ஏற்படுகிறது. அவரைப்பற்றி நினைக்க நினைக்க இம் மதிப்பு உயருகிறது."

நேதாஜி வீரர்களான ஷேகல், தில்லன், ஷாநவாஸ் ஆகியோர்களுக்கு விடுதலை வாங்கித் தந்த சிழச் சிங்கம் புலாபாய் தேசாய் கூறியதாவது :

"இந்தியருக்குக் கிளர்ச்சி செய்ய மட்டுமல்ல, ஆளவும் தெரியும் என்பதை நேதாஜி நிரூபித்துவிட்டார்."

"சிவாஜியின் வழி வந்தவர் நேதாஜி" என்று ஆர். எஸ். ரூய்க்கர் கூறினார்.

உலகம் உயிருடன் இருக்கும்வரை, சந்திர சூரியர் மறையாதிருக்கும் வரை, இந்தியர் தேச பக்தியை மறவாதிருக்கும் வரை நேதாஜியின் பெயர் இந்தியரின் மனத்தை விட்டு நீங்காது. பிறக்கும் குழந்தையும், பேணி வளர்க்கும் சிசுவும் நேதாஜியின் புகழைப் பாடும். அவரின் வீரத்தையும் தியாகத்தையும் கதை கதையாய்க் கூறும்.

வாழ்க இந்தியா !

TAMIL NADU ARCHIVES LIBRARY
110523